திருக்கோயில்

"என் கடன் பணி செய்து கிடப்பதே"

OFFICE OF THE STATE EDITOR
104/6/4/71
11 OCT 1971
GAZETTEER UNIT, MADRAS

கூத்தப் பெருமான்
சிதம்பரேசுவரசுவாமி கோயில், வடகாலத்தூர் நாகை வட்டம்.

மாலை 14 | விரோதிகிருது-புரட்டாசி - அக் 1971 | மணி 1

தமிழ் நாடு அரசின் அறநிலைய
ஆட்சித்துறை வெளியீடு

தமிழக ஆளுநர் மேதகு திரு. கே. கே. ஷா அவர்கள், இராமேசுவரம் கோயிலுக்கு வருகைதந்தபொழுது, நமது அறநிலைய ஆணையர் திரு, கே. எஸ், நரசிம்மன் B. A., B. L., I. A. S. அவர்கள் மாலையிட்டு வரவேற்றல் (16—7—71).

பொருளடக்கம்

(1) தமிழ் ஞான சம்பந்தர்
(2) நவராத்திரி விழா
(3) தமிழ் அருச்சனை
(4) தொண்டரடிப் பொடி யாழ்வார் அருளிய திருமாலை
(5) திருமாலின் ஐந்து நிலைகள்
(6) பிராட்டியின் பிரிவும் பரிவும்
(7) நம்பெருமாள் திருவுருவ நலம்
(8) தேவாரத்தில் நவராத்திரி விழாத் திருப்பதிகம்
(9) சென்னைப் பட்டணத்துச் சட்டம்
(10) கட்டுரைகளின் பட்டியல்

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

ஆண்டுச் சந்தா ரூ. பத்து மட்டும் — தனிப்பிரதி விலை ரூ. ஒன்று மட்டும்

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் "திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34" என்னும் முகவரிக்கு ரூபாய் பத்து அனுப்பி எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்களாகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார அறநிலைய உதவி ஆணையாளர்களின் அலுவலகங்களிலும் மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவறுமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்



மாலை 14] விரோதிகிருது — புரட்டாசி — அக்டோபர், 1971 [மணி 1

"தமிழ் ஞான சம்பந்தர்" *

ந. ரா. முருகவேள், M. A., M. O. L.

முன்னுரை :

திருஞான சம்பந்தர் என்னும் பெயரை, அனைவரும் கேட்டறிந்திருப்பர். ஆனால் தமிழ் ஞான சம்பந்தர் என்னும் பெயரையோ, நம்மில் மிகச் சிலரே கேட்டறிந்திருத்தல் கூடும். அதனால் பலர், திருஞான சம்பந்தர் வேறு, தமிழ்ஞான சம்பந்தர் வேறு என்றே பெரும்பாலும் கருதுவர். ஆயின் திருஞான சம்பந்தர், தமிழ் ஞான சம்பந்தர் என்னும் இருபெயர்களும், ஒருவரையே குறிப்பிடும் சிறப்புப் பெயர்களாகும். திருஞான சம்பந்தரைப் புராண புருடர்களுள் ஒருவராகவே பெரும்பாலும் எண்ணி வருகின்ற நாம், அவரைத் "தமிழ் ஞான சம்பந்தர்" என்னும் நிலையில், ஒரு தனிப்பெரும் வரலாற்றுத் தலைவராக ஆய்ந்துணர்ந்து போற்ற முற்படுதல்

தமிழ்ஞான சம்பந்தர் :

திருஞான சம்பந்தர், தம்மைத் "தமிழ் ஞான சம்பந்தன்" என்று தமது தேவாரத் திருப்பதிகங்களில், ஏறத்தாழ நாற்பத்தைந்து

* திருக்குற்றாலம், திருக்குற்றாலநாதசுவாமி கோயிலில் நடைபெற்ற சாரல் மாநாட்டுத் திருமுறைவிழாவில், ஆற்றிய சொற்பொழிவினைத் தழுவியது (9—8—71).

Q2m 211,N58

இடங்களில், மிக்க பெருமிதமும் வீறும் தோன்றக் குறிப்பிட்டுக் கொள்ளுகின்றார். திருஞான சம்பந்தர் என வழங்கும் பெயரை விட, ஒருவகையில் தமிழ்ஞான சம்பந்தர் என்னும் பெயர் மிகவும் சிறப்புடையது, அவரால் பெரிதும் விரும்பி உவந்து வழங்கிக் கொள்ளப்பெற்றது. திருஞானசம்பந்தருக்கு முன்னரோ பின்னரோ, வேறு பிறர் எவரும் தமிழுடன் சார்த்தித் தம்முடைய பெயர்களை வழங்கிக் கொள்ளக் காண்கின்றிலோம். முதன் முதலாகவும், பிறர் எவரும் செய்யாத வகையிலும், திருஞானசம்பந்தப் பெருந்தகையார் ஒருவர் மட்டுமே இங்ஙனம் தம்மை வழங்கிக் கொண்டருளினார்,

158589

மூவாயிரம், நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, தமிழ் மொழிக்கு அழியாப் பெரும் சிறப்புடைய அரும்பெறல் இலக்கண நூலை இயற்றி அளித்தருளிய ஆசிரியர் தொல்காப்பியர், தம்மை யாண்டும் ''தமிழ்த் தொல்காப்பியன்'' என்று குறிப்பிட்டுக்கொள்ளக் காண்கிலோம்.

திருக்குறள் என்னும் தெய்வத் தமிழ் மறையை உலகுக்கே பொதுவாக உரிய ஒப்பற்ற ஒரு பெரும் நீதிநூலாக வழங்கியருளிய திருவள்ளுவர் பெருமான், தம்மைத் 'தமிழ்த் திருவள்ளுவன்' என்று சுட்டிக் கொண்டார் இலர். உலகனைத்திற்குமே உரிய பொதுமறையாகத் தாம் தம் திருக்குறளைச் செய்தருளியதிறத்தால், அவர் எங்குமே தமது நூலுள் தமிழ் என்றோ, தமிழகம் என்றோ, தமிழர் என்றோ சுட்டக் கருதாமல், மிக விழிப்பாகத் தம் நூலை இயற்றிப் போந்தார்.

இங்ஙனமே நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் என்னும் செஞ்சொற் காப்பியத்தினை இயற்றித் தந்த முத்தமிழ்ப் புலமைவித்தகராகிய இளங்கோவடிகளும், தம்மைத் 'தமிழ் இளங்கோ' என வழங்கிக்கொண்டார் இலர். இந்நிலையில் திருஞானசம்பந்தர் மட்டும், தம்மைத் தமிழ்ஞான சம்பந்தன் என வழங்கிக் கொள்ளுதலில், ஆராத பேரார்வமும், அளவிலாத பெரு விழைவும் கொண்டு விளங்கிய அருமைப்பாடு, நாம் அனைவரும் ஆராய்ந்துணர்ந்து அறிந்து இன்புறற்பாலது.

தமிழ் விரகர் :

இன்று நம்மிடையே தமிழ்ப்பற்றும் ஆர்வமும் தலைசிறந்து ஓங்கி நிற்கின்றன. நமது அருமைத் தமிழக அரசும், எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்னும் இனிய கொள்கையினை மேற்கொண்டு, தமிழ்மொழி வளர்ச்சிக்குப் பல்லாற்றானும் ஆக்கமும் ஊக்கமும் அளித்து நலம் புரிந்து வருகின்றது. தமிழுக்கும் தமிழர்க்கும், இஃது ஒரு தலை சிறந்த பொற்காலம் எனலாம். இந்நிலையில், இற்றைக்கு ஏறத்தாழ 1300 ஆண்டுகளுக்கு முன்னர், முடியுடை மூவேந்தர்களாகிய சேர சோழ பாண்டியர்கள் ஆட்சித் திறம் குன்றி, தமிழ்ச் சங்கம் முதலியன மறைந்து, களப்பிரர் பல்லவர் முதலிய வேற்றுப் பண்பாளர்களின் ஆட்சியும் ஆதிக்கமும் மேலோங்கி, நம் தமிழ் மக்கள் பல்லாற்றானும் நைந்து நலிந்து சிதைந்து சீரழிந்து கிடக்க நேர்ந்த நிலையில், தமிழ் உணர்வையும் பற்றையும் ஆர்வத்தையும் மக்களிடையில் தோற்றுவித்து, சமுதாயத்தில் ஒருபெரும் எழுச்சியையும் மறுமலர்ச்சியையும் ஏற்படுத்துதற்கு முனைந்து முயன்று பெருந்தொண்டாற்றியவர், திருஞானசம்பந்தப் பெருந்தகையாரே யாவர்:

திருநெறி இயக்கம் :

தமிழ் மொழியினைச் செந்தமிழ்-இன்தமிழ்-பைந்தமிழ்-வண்தமிழ்-தண்டமிழ்-ஞானத்தமிழ் தீந்தமிழ்-கன்னித்தமிழ்-கலைமலிதமிழ், சங்கமலி செந்தமிழ் என்றெல்லாம் எத்தனையோ பல வகைகளில் சிறப்பித்து, அடைமொழிகள் அளித்து, இயன்ற வகைகளிலெல்லாம் முயன்று பெருமைப்படுத்திப் போற்றிப் பாராட்டிப் புகழ்ந்து பாடியவர், முதன் முதலாகத் திருஞானசம்பந்தர் ஒருவரேயாவர் எனத் துணிந்து கூறலாம், தமிழ் ஆர்வத்திற்கும் அன்பிற்கும் பற்றிற்கும் ''தமிழ் விரகன்'' என்று தம்மைச் சுட்டிக்கொண்டு மகிழும் திருஞானசம்பந்தரே. ஈடு இணையற்ற எடுத்துக் காட்டாவார். பல இடங்களில் அவர் தம்முடைய தமிழை ''நற்றமிழ்'' என்றும், ''திருநெறிய தமிழ்'' என்றும் பிறவாறும் புகழ்ந்து மகிழ்ந்து இன்புறுகின்றார். அவர் தான், முதன் முதலில் தமிழ் மொழியை ஓர்

N71·14·1 (150)

இயக்கமாகப் பரப்புதற்கென்று முனைந்து நின்று முயன்றவர். அவ்வியக்கத்திற்குத் "திருநெறி" என்பது பெயர். "தேன் அலர் கொன்றையார் தம் திருநெறி நடந்த தன்றே" என்பது பெரியபுராணம். இங்ஙனம் ஒரு பெரும் இயக்கம் தோற்றி, நாட்டின் மூலை முடுக்கர் களுக்கெல்லாம் சென்று, 1300 ஆண்டுகளுக்கு முன்னரே, நாளும் தமிழ் பரப்பிய நல்லோர், ஞானசம்பந்தரேயாவர். வந்தேறிய வேற்றுப் புலப்புறச்சமயங்கள் தமது துறவுநெறிக்குக் கூடாதன என்று அழித்தொழித்த இசை நாடகம் முதலிய கலைகளை வளர்க்கும் குறிக் கோளுடன், நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய பெருமை, ஞானசம்பந்தரையேசாரும்.

சமுதாயத்தலைவர் :

திருஞானசம்பந்தரை வெறும் சமயத் தலைவர் (Religious Saint) என்று மட்டுமே நம்மில் பலரும் கருதுவர். அவர் ஒரு பெரும் தேசியத் தலைவர் (National & Popular Leader), தமிழ்ச் சமுதாயத்தினைத் தட்டி எழுப்பி வாழ்விக்க வந்த தலைவர் என்னும் உண்மை, நம்மில் பலர் அறியாததாகும். திருஞானசம் பந்தர் வெறும் சமயத்தலைவராக மட்டுமே இருந்திருப்பின், சீர்காழியில் பிரமதீர்த்தப் பொய்கைக் கரையில் தோணியப்பரால் உமை யம்மையின் ஞானப்பாலுண்டு சிவஞானம் பெற்ற போதே, இறையருளில் திளைத்து ஒன்றி, 'எனைநான் என்பதறியேன்; பகல் இரவா வதும் அறியேன்; மனவாசகம் கடந்தான் எனை மத்தோன் மத்தனுக்கினன்" என்றாற் போன்ற அதீத நிலையை அடைந்திருப்பர்.

"ஞானிகளாய் உள்ளார்கள்
நான்மறையை
முழுதுணர்ந்து ஐம்புலன்கள் செற்று,
மோனிகளாய் முனிச்செல்வர் தனித்திருந்து
தவம்புரியும் முதுகுன் றமே"

என்று தாமே பாடியருளியபடி, ஞானமும் மோனமும் பூண்டு, தனித்திருந்து தவம்புரிய முனைந்திருப்பர். ஆனால் அவர் அங்ஙனம் செய்திலர்.

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்செய்யு மாறே"

என்று அருளிச்செய்த திருமூலரைப் போன்ற தமிழுணர்ச்சி, திருஞானசம்பந்தர் பால் எல்லையற்ற பெருந்தீவிர நிலையிற் சிறந்தோங் கித் திகழ்ந்திருந்தது.

தனித்திருந்து தவம்புரிந்து தமிழ் செய் தருளிய திருமூலர்போல் அன்றி; நம் திருஞான சம்பந்தர் தனித்திருந்து தவம்புரிய விரும் பாமல், சமுதாயத்தில் தமக்கு முன்னும் பின்னும் இல்லாத முறையில், ஒரு பெரும் எழுச்சியையும் கிளர்ச்சியையும் தோற்றுவித் தார்; சமுதாயத்திற் பல சிறந்த பெருமாறு தல்களும் மறுமலர்ச்சிகளும் நிகழுமாறு செய் தார்; பதினாறாயிரம் எனப்படும் பற்பல ஆயிரம் தொண்டர்களுடன், தமிழ் மொழியும் பண்பும் கலை நாகரிகங்களும் பிறவும், வேற்றுவ ரால் மாற்றமுற்று அழிந்து பட்டொழியா வகையில் காத்தருளினர்; தமிழகத்திற்குப் பற்பல ஆக்கப் பணிகளைப் புரிந்தருளினர்; எங்கும் தமிழும் தமிழிசையும் தமிழ்க் கலைகளும் பரவி வளரும்படி தொண்டாற்றினர்.

"திசையனைத்தின் பெருமைஎலாம்
தென்றிசையே வென்றேற
அசைவில் செழுந் தமிழ்வழக்கே
அயல்வழக்கின் துறைவெல்ல,
இசைமுழுதும் மெய்யறிவும்
இடங்கொள்ளும் நிலைபெருக"

"தாளுடைய படைப்பு என்னும்
தொழிற்றன்மை தலைமை பெற,
நாளுடைய நிகழ்காலம்
எதிர்காலம் நவைநீங்க"

ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன் னரே, அயராது உழைத்த அரும்பெரும் தலைவர் திருஞானசம்பந்தரே யாவர். அத்துணைத் தொன்மைக் காலத்தில், இன்றைய உலக நாடு களில் எத்தனையோ பல தோன்றியிருத்தலும் இயலாது. ஒருசில தோன்றியிருப்பினும், அறி யாமை இருளிலேயே அமுந்திக் கிடந்திருக்கும். அத்தகைய தொன்மைக்காலத்தில், நம் தமிழ கத்தில் திருஞானசம்பந்தப்பெருமான் ஒரு பெரும் வித்தகராகவும், வியந்து போற்றுதற்

குரியவராகவும் தோன்றித் தொண்டு புரிந்தருளினர் என்பது, தமிழர் அனைவரும் தலை நிமிர்ந்து பெருமித வீறு கொண்டு மகிழ்தற் குரியது. அஞ்ஞான்றைத் தமிழகத்தின் அவல நிலையை உள்ளவாறு ஆராய்ந்து உணர வல்லவர்களுக்குத் தான், திருஞானசம்பந்தரின் சிறப்பும் செயலாண்மைத் திறமும் பிறவும் செவ்விதின் விளங்கும்.

மூல இலக்கியம் :

சங்ககாலத்தில், சங்க காலப்புலவர்களால் சங்க இலக்கியங்களால் தமிழ் வளர்ந்திருந்தது, ஆயினும் அதற்கு இடைக்காலத்தில் களப்பிரர் பல்லவர் முதலிய வேற்றவரால் நிகழ்ந்த கேடுகளைப் போக்கி, இசை நலம் சான்ற—ஒப்புயர் வற்ற—தெய்வத்திருவருள் செறிந்த-அளவிலா ஆற்றலும் உணர்ச்சியும் அழகுற அமைந்த—அரிய இனிய புனிதம் மிக்க பல்லாயிரக்கணக்கான கவிதைகளால், தமிழ் மொழியை வளர்த்தருளிய தலையாய சான்றோர், நம் திருஞானசம்பந்தரே எனற்கு ஐயமில்லை. அவர்தம் கவிதைகள். தமது இனிய தெய்விக இசை நலனால், எத்துணையோ பல நூற்றாண்டுகளாக எண்ணில்லாத கோடிக்கணக்கான மக்களின் உள்ளங்களையெல்லாம் கொள்ளை கொண்டு, இன்புறுத்திப் பண்படுத்தி வருகின்றன. அப்பெருந்தகையார் அருளிச் செய்த அழகிய திருப்பாடல்களால், எத்தனையோ பல பெருந்தலங்களும், அத்தலங்களில் விண்ணளாவ உயர்ந்து ஓங்கும் எழிற் கோபுரங்களைக் கொண்ட எண்ணில்லாத பல கோயில்களும், இன்றளவும் அழியாப்பெரும் சிறப்பும் புகழும் அமையப்பெற்று வளர்ந்தோங்கி விளங்கி வருகின்றன. அவற்றால் நம் தமிழகத்திற்கு விளைந்துள்ள நலங்களுக்கு அளவேயில்லை.

திருஞானசம்பந்தர், ''சங்கமலி செந்தமிழ்'' என்று புகழ்ந்து, சங்ககாலத் தமிழ்க் கவிதைகளைப் பெரிதும் போற்றியவராயினும், அவற்றினும் புதுமைமிக்க அழகிய கவிதைகளை அருளிச் செய்தனர். அவர்தம் பாடல்களிற் பயின்றுள்ள சொல் புதிது; பொருள் புதிது; சுவை புதிது. அவர்தம் பாடல்களின் நடை (Style), அமைப்பு (Pattern), இசைத்திறன் (Tune) முதலியன ஒவ்வொன்றும், தனிச் சிறப்புடையதாகும். ''வாசுதீரவே காசு நல்குவீர் மாசில் மிழலையீர் ஏசல் இல்லையே'' என்பன போன்ற சிறிய சிறிய பாடல்களும், ''பந்தத்தால் வந்தெப்பால் பயின்று நின்று உம்பர்'' என்பன போலும் மிகப் பெரிய பாடல்களும் போன்ற, எத்தனையோ விதவிதமான வகை வகையான கவிதைகளை நம் தமிழ்மொழிக்கு ஒருபெரும் கலைச் செல்வமாகப் படைத்து வழங்கிய ஞானசம்பந்தர்க்கு நிகராக நல்லிசைக் கவிஞர் பிறரொருவரை நாம் காண்டல் அரிது. மொழிமாற்று, மாலைமாற்று, வழிமொழிமடக்கு, சந்த யமகம், ஏகபாதம், திருஇருக்குக்குறள், திருவெழு கூற்றிருக்கை, நாலடிவைப்பு, நாலடிமேல்வைப்பு, நடையின் முடுகும் இராகம், சக்கரமாற்று, கூடசதுக்கம்; முதலிய புதியபுதிய அற்புதச் சித்திர கவிதைகளை நம் தமிழ்மொழிக்கண் ''மூல இலக்கியம்'' என்று மொழிந்து, மூதறிஞர்கள் போற்றும் வகையில் பாடியளித்துத் தமிழ் வளர்ச்சிக்குப் பல்லாற்றானும் ஆக்கம் தேடியவர், திருஞானசம்பந்தரே யாவர்.

சீர்திருத்தப் புரட்சியாளர் :

திருஞானசம்பந்தர் ஒருபெரும் கவிஞர், பக்தர், அருளாளர் மட்டுமேயல்லர்; ஒப்புயர்வற்ற ஒருபெரும் சமுதாயச் சீர்திருத்தக் காரரும் (Social Reformer & Revolutionary) ஆவர். அவர் வாழ்ந்திருந்த காலத்துச் சமுதாய மக்களிற் பலர், தம் சொல்லும் செயலும், கொள்கையும் ஒழுக்கமும் ஒன்றினொன்று முரணி இகலி நிற்க, சமுதாயத்திற் பல குழப்பமும் சீர்கேடும் விளைத்து வந்தனர். அவர்களின் குற்றங் குறைகளையும், ஒழுக்கக்கேடுகளையும் அஞ்சாது எதிர்த்து மறுத்துத் திருத்தும் சமுதாயப் பெருவீரராகத் (Opposer of Social Evils) திருஞானசம்பந்தர் திகழ்ந்தார். தவறான கொள்கைகளும் செயல்களும், சமுதாயத்திற் பரவிக் கேடு விளைவிக்காமல், அவற்றை அஞ்சாது ஆண்மையுடன் எதிர்த்துப் பிரசாரம் செய்யும் பெருந்திறனில் திருஞானசம்பந்தர்க்கு நிகராவர் எவரும் இலர் எனலாம். (Powerful Propagandist). ''மிண்டர் மிண்டாய்ப் பேசிய பேச்சு மெய்யல்ல'' ''குண்டு முற்றிக் கூறையின்றியே

பிண்டம் உண்ணும் பிராந்தர் சொற் கேளேல்'' ''பட்டைத் துவர் ஆடைப் படிமம் கொண் டாடும் முட்டைக் கட்டுரை மொழிவ கேளாதீர்'' என்பன போன்று வரும் அவர்தம் பாடற்பகுதிகள், இவ்வுண்மையை மெய்ப் பிக்கும். தம்முடைய கொள்கைகளை நாட்டின் பலபகுதிகளிலும் சென்று மக்களிடையிற் பரப்பு தலில் அவர் சிறிதும் அயராத பயணியாக (Indefatigable traveller) விளங்கினர்.

''மன்னன் நீறணிந்தான் என்று
மற்றவன் மதுரை வாழ்வார்
துன்னிநின் றூர்கள் எல்லாம்
தூயநீறணிந்து கொண்டார்''

என்னும்படி ஒருபெரும் அமைதிப் புரட்சியை, அருளியற்புரட்சியை விளைவித்த அவர்தம் சிறப் பிற்கு அளவேயில்லை.

கொள்கை விளக்கம் :

(1) அக்காலத்தில் சமுதாய மக்களிடையில் வேற்றவரால் பரப்பப்பட்டிருந்த போலிக் கொள்கைகளைக் கடிந்து மறுத்துப்போக்கி ஒழிப்பதில், அவர் பேராற்றல் மிக்குப் பிறங் கினர். அவர்காலத்தில் சிலர் பெண்பிறவி இழிவெனக் கருதிப்பழித்துப் புறக்கணித்தனர். அதனைக் கடிந்து ''நாணர், நல்லது அறியார், நாளும் குரத்திகள் பேணர்'' என அவர்களின் பொருந்தாச் செயலைக் கடிந்துரைத்தார். ''மங்கையர்க்கரசி வளவர்கோன் பாவை வரிவளைக்கை மடமானி பங்கயச்செல்வி பாண்டிமாதேவி'' எனத் தம் பாடல்களில் பெண்மையைச் சிறப்பித்துப் புகழ்ந்தார்.

(2) துறவு நெறியே உய்தி தருவது எனப் பலரும் சொல்லிவந்தபொழுது ''பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே'' என இறைவனும் பெண்ணுடன் கூடி இல்லற நெறி யாளனய் இருப்பதனை எடுத்துரைத்தார்.

(3) இவ்வுலகம் துன்பமயமானது, வெறுக்கத்தக்கது, என மருள்நோக்குக் கொள் கைகளையே (Pessimism) பரப்பி வந்த மக்கள் பெருந்திரளாக மேலோங்கி இருந்த நிலையில், அவர்களுக்குச் சிறிதும் அஞ்சாது இவ்வுலகம் இன்பமயமானது; ''மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்: எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலை'' என்பன போன்ற தெருள்நோக்குக் கொள்கை (Optimism) களைப் பரப்பிச் சமுதாய நலம் பெருக்கியவர் திரு ஞானசம்பந்தரேயாம்.

(4) இவ்வுலகம் வெறும் கனவு, பொய்த் தோற்றம், நிலையில்லாதது என்னும் கருத் தையே மிகுதியாக வளர்த்து வந்த வேற்றவர் கூற்றுக்களை மறுத்து, இவ்வுலகம் மெய்யானது; எழில் மிக்கது; வாழ்க்கைக்குத் துணைபுரிவது என்னும் உண்மைகளை உணர்த்தும் வகையில், இயற்கையின் எழில் நலங்களை அழகோவியங்க ளாகத் தீட்டிக்காட்டிச், சொற்பொருட் சுவை நலங்கள் நிறைந்த அற்புதமான கவிதைகளைப் பாடியருளியவர், நம் ஞானசம்பந்தரே யாவர்.

''வலம்வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழைஎன்று அஞ்சிச்
சிலமந்தி அலமந்து மரம்ஏறி
முகில்பார்க்கும் திருவை யாறே'' (1)

'பாரிசையும் பண்டிதர்கள் பன்னாளும்
பயின்றோதும் ஓசை கேட்டு
வேரிமலி பொழிற்கிள்ளை வேதங்கள்
பொருள்சொல்லும் மிழலை யாமே'' (2)

''கைம்மக வேந்திக் கடுவனோடு
ஊடிக் கழைபாய்வான்
செம்முக மந்தி கருவரை
ஏறும் சிராப் பள்ளி'' (3)

''வம்பார் குன்றம் நீடுயர் சாரல்
வளர் வேங்கைக்
கொம்பார் சோலைக்கோல வண்டு
யாழ்செய் குற்றாலம்'' (4)

''பூந்தண் நறுவேங்கைக் கொத்திறுத்து
மத்தகத்திற் பொலிய ஏந்திக்
கூந்தற் பிடியும் களிறும்
உடன்வணங்கும் குறும்பலாவே'' (5)

என்பன போல, இயற்கை எழில் நலங்களை இனிதெடுத்துப்பாடும் திறனில், உலகப் பெரும் கவிஞர்களாகக் கூறப்பெறும் ஷெல்லி, வோர்ட்ஸ் வொர்த், கீட்ஸ் போன்ற கவிஞர்களும் இவர்க்குச் சிறிதும் ஈடாக மாட்டார் என்பது உண்மை, வெறும் புகழ்ச்சி இல்லை.

சமுதாயத் தொண்டர் :

திருவீழிமிழலையில் பஞ்சம் நேர்ந்தபோது, இறைவன்பால் படிக்காசு பெற்று, இரண்டு பொழுதும் பறைசாற்றி மக்களையெல்லாம் திரளாக அழைத்துச் சோறளித்துத் துயர்கூர் வறுமை தொலைத்தருளியதும், திருக்கொடி மாடச் செங்குன்றூரில் நளிர்சுரம் பரவி மக்களை நலிந்தபோது "அவ்வினைக்கு இவ்வினை யாம்" எனத் தொடங்கும் பதிகம்படி அந் நோய் நீங்கப் புரிந்தருளியதும் பிறவும், இவர் தம் சமுதாயத் தொண்டின் (Social Service) நீர்மையினையும் மேன்மையினையும் புலப்படுத்தா நிற்கும்.

தாம் உயரிய வேதியர் குலத்தில், கௌணியர் மரபில் உதித்தவராய் இருந்தும், யாழ்ப் பாணர் என்னும் குலத்தில் தோன்றிய திருநீல கண்டர் என்பவரைத் தம்முடன் எப்போதும் பிரிவற இருத்தி வைத்துக்கொண்டு, அன்பு பூண்டு நண்பு பாராட்டித் தண்ணளிகள் புரிந்து வந்த இவர்தம் பெருந்தகைமை, இந் நாளைய தீண்டாமை ஒழிப்பிற்கும், சாதி ஒழிப் பிற்கும், இற்றைக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே வழி வகுத்துக் காட்டிய மாட்சிமை சான்றதாகும், இவ்வாற்றால் அவர் சமுதாயச் சமத்துவ நிலைக்குப் பெரிதுழைத்த பெருந்த கையார் (Champion of Social Equality,) என்பது தெளியலாம்.

திருப்பாச்சி லாச்சிராமம் என்னும் தலத்தில் கொல்லிமழவன் மகளை வருத்திய முயலகன் என்னும் நோயை நீக்கியருளியதும், திருமருகல் என்னும் தலத்தில், ஒருபெண்ணின் பொருட்டு இரங்கிப் பாம்பு கடித்து இறந்த அவளது காதலனை எழுப்பித் தந்து, இருவரை யும் மணம் புணர்ந்து மகிழுமாறு செய்வித் தத்தும், திருஞானசம்பந்தர் அன்பும் அருளும் நிறைந்த ஒருபெரும் மக்கள் நலக்கொள்கையர் (Humanist) என்பதனைப் புலப்படுத்தும்.

சிறுத்தொண்டர் முருகர் நீலநக்கர் திரு நாவுக்கரசர் குலச்சிறையார் நின்றசீர் நெடு மாறர் முதலிய பலருடனும் கலந்து பழகிய அவர்தம் உயர்வற உயர்ந்த சிறந்த பண்பு நலங்களை ஆராய்ந்து செவ்விதின் தெளிந்து உணர்வோர்க்குத் திருஞானசம்பந்தரின் அருமை பெருமைகள் பளிங்கென விளங்கும்.

முடிவுரை :

இத்தகைய எத்தனையோ பற்பல சிறப்புக் களையுடைய திருஞானசம்பந்தர், "பல்வேறு கொள்கைகளாலும் சூழ்நிலைகளாலும் சிதறுண்டு வீழ்ச்சியுற்றுக் கிடக்கும் ஒரு நாட்டின் மக்களை அவர்கள் பேசும் தாய் மொழியின் வாயிலாக வே, அம்மொழியில் உணர்ச்சியும் ஆர்வமும் ஊட்டி ஒன்றுபடுத்திக் கிளர்ந்து எழச் செய்து முன்னேற்றி உய்விக்கமுடியும்"* என்னும் அரிய பெரிய உண்மையினை நன்கினிது உணர்ந் திருந்தார்; நம் தமிழக மக்களை நன்னிலை எய்தச் செய்தல் குறித்து, நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பி, தமிழுக்கும் தமிழர்க்கும் அளப் பருந் தொண்டுகள் புரிந்தருளினர். தம்மைத் "தமிழ் ஞானசம்பந்தன்" என்று குறிப்பிட் டுக்கொண்டு மகிழ்ந்தார்; ஆதலின் அவர் தம் சிறப்புக்களை உள்ளவாறு உணர்ந்து போற்றி, நாம் அனைவரும் தமிழுக்கும் தமிழகத்திற்கும் தமிழர் இனத்துக்கும் தமிழ்ச் சமயத்திற்கும் தொண்டு புரிந்து உய்ய முயலுவோமாக.

—ஆசிரியர்

---

* "In any social group, whatever its nature and however large it may be, language plays a role of primary importance. It is the strongest of the bonds uniting the members of the group, and is at the same time the symbol and safeguard of their common life. What instrument can have greater efficacy than language in affirming the individuality of the group? It is their sign of recognition, and their badge of brotherhood."

—*Language*,

Prof. J. VENDRYES.

நவராத்திரி விழா

திரு. K. S. நரசிம்மன், B.A., B.L., I.A.S.

ஆணையாளர், அறநிலையத்துறை

முன்னுரை:

தமிழ்நாடு விழாக்களுக்கு மிகவும் புகழ் பெற்றது. விழாக்கள் ஒரு நாட்டின் நாகரிகத்தையும் பண்பாட்டையும் நலமுற விளக்கும் சிறப்புடையது. நவரத்திரி விழா, நம் நாட்டு மக்களின் கலை ஆர்வத்தையும், கலை உள்ளத்தினையும் விளக்கும் மாட்சிமை வாய்ந்ததாகும். உலகுக்கெல்லாம் தாயாக விளங்கும் சக்தி அல்லது அம்பிகையின் வழிபாடாகத் திகழ்வதே நவராத்திரி விழாவாகும். சைவம் வைணவம் சாக்தம் என்னும் மூவகையைச் சார்ந்த இந்துக்கள் அனைவரின் வீடுகளிலும், கோயில்களிலும், இவ்விழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

பெயர்க் காரணம்:

நவராத்திரி, வசந்த நவராத்திரி, சாரத நவராத்திரி எனச் சிறப்பாக இருவகைப்படும். வசந்த காலத்தில் கொண்டாடப்படும் நவராத்திரி வசந்த நவராத்திரி எனப்படும். சரத் என்னும் மழைக் காலத்தில் கொண்டாடப் பெறுவது சாரத நவராத்திரி என வழங்கும். இவ்விரண்டில் சாரத நவராத்திரியே சிறப்பாகச் சைவ வைணவ ஆலயங்களில் கொண்டாடப் படுகின்றது. இவ்விழா, சாந்திரமான முறையின்படி ஐப்பசித் திங்களில் சுக்கிலபக்கப் பிரதமை முதல் நவமி வரையில் ஒன்பது நாட்கள் கொண்டாடப் பெறும். ஆதலின் இது நவராத்திரிவிழா எனப் பெயர் பெற்றது. இது வீடுகளில் ஒன்பது நாட்களும் கொண்டாடப்படா விடினும், கடைசி நாளில் சரசுவதி பூசை அல்லது ஆயுத பூசை எனச் சிறப்பாகக் கொண்டாடப்படும். ஐப்பசி நவமி தினத்தன்று வீட்டிலுள்ள ஏடுகளையும் புத்தகங்களையும் எழுதுகோல்களையும் அடுக்கி வைத்து அவற்றின் மேலோ அருகிலோ சரசுவதிதேவியின் திருவுருவப் படத்தை எழுந்தருளுவித்துத் தூப தீபம் காட்டி அருச்சித்து வழிபடுவது வழக்கம். அந்நாளில் பல்வேறு கலைஞர்களும் தொழிலாளர்களும் தாம் தாம் பயன்படுத்தும் கருவிகள் அல்லது ஆயுதங்களைத் தூய்மை செய்து புனிதமுடையனவாகக் கருதிப் போற்றிவழிபாடு புரிவர். ஆதலின் இதற்கு ஆயுத பூசை என்றும் பெயர் ஏற்பட்டது.

நம் இந்து சமயம் கடவுளை ஆண் வடிவத்தில் மட்டுமேயன்றி, பெண் வடிவத்திலும் வைத்து வழிபடும் சிறப்புடையது.

அன்னை வடிவமடா:-இவள்
ஆதிபராசக்தி தேவியடா!-இவள்
இன்னருள் வேண்டுமடா!-பின்னர்
யாவும் உலகில் வசப்பட்டுப் போகு
மடா!

என்று பாரதியார் பாடியதைப் போல, ஆதிபராசக்தி தேவியாகிய அன்னையைப் போற்றி, அவளின் இன்னருள் பெறுதற் பொருட்டுக் கொண்டாடப்படுவதே நவராத்திரி விழா. நவமியை அடுத்து வரும் தசமி என்னும் விசயதசமி நாளையும் சேர்த்துக் கொண்டால், இவ்விழா பத்து நாட்கள் நடைபெறுகின்றது. ஆதலின் **தசரா** என்றும் வழங்கப்பெறும்.

பழமையும் வரலாறுகளும்:

இவ்விழா எந்தக் காலந்தொட்டுத் தோன்றியது என்று கூறுதல் இயலாது. பழைய காலத்தில் இவ்விழாவை அரசர்கள் பெரும் சிறப்பாகக் கொண்டாடினர். சமீப காலம் வரை மைசூரில் மன்னரால் இவ்விழா சிறப்பாகக் கொண்டாடப் பெற்று வந்தது. விசயநகர அரசர்கள் இவ்விழாவை மிகச்சிறப்பாக இற்றைக்கு 400, 500 ஆண்டுகளுக்கு முன்னரே கொண்டாடி வந்தனர் எனத் தெரிகின்றது. அவர்களுக்கும் முன்னர்ச் சாளுக்கிய அரசர்கள் போன்றவரும் இவ் விழாவைக் கொண்டாடி வந்தனர் என அறிகின்றோம்.

நவராத்திரி விழாவைப் பற்றிப் பல வரலாறுகள் வழங்குகின்றன. இராமபிரான் இராவணனோடு போர் செய்து வெற்றிபெற்றது இந்நாட்களிலேயே என்றும், இராமன் இராவணனை வெற்றி கொண்ட நாளே விசய தசமி என வழங்குகின்றது என்றும், கூறுவர்.

(2) மகாபாரதத்தில் அர்ச்சுனன் அஞ்ஞாதவாச காலத்தில் ஒரு வன்னி மரப் பொந்தில் தான் மறைத்து வைத்திருந்த ஆயுதங்களை எடுத்துப் பாரதப் போரில் தான் வெற்றி பெறத் துர்க்கையம்மையை வழிபட்டது, இந்நவராத்திரி நாட்களிலேயே என்றும் கூறப்படுகின்றது.

(3) அம்பிகை, மகிடன் என்னும் எருமைத் தலையுடைய அசுரன் ஒருவன் உலகிற்குத் தீங்கு புரிந்து வர, அவனை எதிர்த்து ஒன்பது நாட்கள் போரிட்டுப் பின்னர்ப் பத்தாம் நாட்காலையில் அவனை அழித்து வெற்றி பெற்றனள். அதுவே விசயதசமி ஆகும் என்றும், நவராத்திரியைப் பற்றிய வரலாறுகள் வழங்கி வருகின்றன.

மகிடாசுரமர்த்தனி:

இற்றைக்கு 1300 ஆண்டுகளுக்கு முற்பட்ட மாமல்லபுரச் சிற்பங்களில் மகிடாசுர மர்த்தனிச் சிற்பம் மிகவும் புகழ்பெற்றுத் திகழ்கின்றது. மற்றும் 1800 ஆண்டுகளுக்கு முற்பட்டதாக ஆராய்ச்சியாளர் கூறும் சிலப்பதிகாரத்தில் மகிடாசுரமர்த்தனியைப் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன.

ஆனைத்தோல் போர்த்துப் புலியின்
உரியுடுத்துக்
கானத் தெருமைக் கருந்தலைமேல் நின்றாயால்
வானோர் வணங்க மறைமேல் மறையாகி
ஞானக்கொழுந்தாய் நடுக்கின்றி
யேநிற்பாய்;

வரிவளைக்கை வாளேந்தி மாமயிடற் செற்றுக்
கரியதிரி கோட்டுக் கலைமிசைமேல்
நின்றாயால்
அரியரன் பூமேலோன் அகமலர்மேல்
மன்னும்
விரிகதிரஞ் சோதி விளக்காகி யேநிற்பாய்

எனச் சிலப்பதிகாரத்தில் "வேட்டுவவரி" என்னும் பகுதியில் வரும் பாடல்கள் மகிடாசுரமர்த்தனியைப் புகழ்ந்து போற்றுதல் காணலாம். இதனால், அம்பிகை எருமைத் தலையைக் கொண்ட மகிடன் என்னும் அசுரனை எதிர்த்துப் போரிட்டு வெற்றிபெற்ற நிகழ்ச்சியைக் குறிக்கின்ற இந்த நவராத்திரி விழாவின் தொன்மையும் பெருமையும் எத்தகையன என்று நாம் இனிதுணரலாம்.

கல்வி, செல்வம், வீரம் :

உலக அன்னையாகிய அம்பிகையானவள், மலைமகள் திருமகள் கலைமகள் என மூன்று வடிவங்களில் சிறப்பாக விளங்குகின்றனள். மலைமகள் வீரத்தை வழங்குபவள்; திருமகள் செல்வத்தை அளிப்பவள்; கலைமகள் கல்வியைத் தருபவள். கல்வி செல்வம் வீரம் என்னும் இம் மூன்றும் நம் மனித வாழ்க்கைக்கு மிகமிக இன்றியமையாதன. ஒன்றிருந்து ஏனையன இல்லையேல், நம்மனித வாழ்க்கைசிறப்பு அடைதல் இயலாது. ஆதலின் இம் மூன்றையும் பெறுவதன் பொருட்டு, நாம் நவராத்திரி விழாவின் முதன் மூன்று நாட்களில் துர்க்கை அல்லது மலைமகளையும், அடுத்த மூன்று நாட்களில் திருமகளையும், அதற்கும் அடுத்த மூன்று நாட்களில் கலைமகளையும் போற்றி வழிபடுகின்றோம். அதனால் இம் மூவரின் வாயிலாக, வீரமும் செல்வமும் கல்வியும் ஆகிய நலன்களைப் பெறுகின்றோம். பத்தாம் நாளாகிய விசயதசமி அன்று கல்வி கற்றல் முதலிய நற்செயல்களைத் தொடங்குவது சிறந்த பயனும் வெற்றியும் அளிக்கின்றன எனப் பெரியோர்கள் கூறுவர்.

மகளிர் விழா :

ஒருநாட்டின் சிறப்பும் வளர்ச்சியும், அந்நாட்டு மகளிரின் அறிவும் பண்பும் செயலுமாகியவற்றைப் பொறுத்து அமைகின்றன. நாட்டில் பெண்கள் கல்வியும் பண்பும் அறிவும் ஒழுக்கமும் திறமையும் பெற்றுத் திகழ்வார்களாயின், அந்நாடு பல்லாற்றானும் சிறந்தோங்கும் என்பது திண்ணம். அம்முறையில் நவராத்திரி விழா பெண்களுக்கே உரிய சிறப்பு விழாவாகும். அந்நாட்களில் பெண்கள் தத்தம் இல்லங்களை அழகுபடுத்தித் தம் கலையுணர்வு தோன்ற வீடுகளில் கலைப் பொருட் காட்சிகளை அமைத்து மகிழ்வர். மாலை வேளைகளில் மகளிர் பலரும்,ஒருவரையொருவர் அழைத்துச்சிறப்புச் செய்து, ஆடலும் பாடலும் நிகழ்த்தி இன்புறுவர். இந்நாட்களில் ஒவ்வொரு இல்லமும் எழில் மிக்குத் திகழும்; அவற்றில் அன்பும் மகிழ்ச்சியும் இன்பமும் கலையுணர்வும் பொங்கும்.

முடிவுரை :

இவற்றால் இவ்விழா, நாட்டின் கலை வளர்ச்சிக்கும், பண்பாட்டின் செழிப்பிற்கும், நாகரிக மேம்பாட்டிற்கும் பெரிதும் பயன்படுகின்றது. வெறும் உலகியற் கேளிக்கை விழாவாக இல்லாமல், தெய்விகப் புனித உணர்வும் கலந்து விரவி வளரும்படி இவ்விழா கொண்டாடப்படுவதினால், இஃது இம்மை வாழ்விற்கும், மறுமை நலனுக்கும், நாட்டின் சிறப்பிற்கும் பெரிதும் பயன்படுவதாக அமைந்து விளங்குகின்றது.

கன்னி மதியில் வரைஉயிர்த்த
கன்னி, மகிழப் பேரன்பால்
மன்னு நவராத்திரிப் பூசை
மரபின் இயற்றும் முறைமையோர்
நன்னர் உலகம் பணிகேட்ப
நவைதீர் செல்வத் திடைமூழ்கி
முன்னும் கதியி னினிதுறீஇ
முடிவி லின்பம் நுகர்வாரால்

—பேரூர்ப் புராணம்

எனக் கச்சியப்பர் என்னும் கவிஞர் பெருமான், நவராத்திரி விழாவின் சிறப்பினை நயந்தினிது பாடியுள்ளார். ஆதலின் இந்நாட்களில் நாம் அம்பிகையை அன்புடன் போற்றி வழிபட்டால், எல்லா நலன்களையும் பெற்று இனிது உய்யலாம் என்பது திண்ணம்.

தனந்தரும் கல்வி தரும்
ஒருநாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந்தரும்
நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாந்தரும்
அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள்
அபிராமி கடைக்கண்களே

தமிழ் அருச்சனை*

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

''அற்சனை பாட்டே யாகும்
ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடுக என்றார்
தூமறை பாடும் வாயார்''

—பெரியபுராணம்

முன்னுரை:

தமிழ் நாட்டுத் திருக்கோயில்களில், தமிழ் மக்கள் தமிழிலேயே இறைவனுக்கு வழிபாடு நிகழ்த்துவது, இயற்கை நெறிக்கு இயைந்த ஒன்றேயாகும். தமிழ்மக்கள் தமிழில் வழிபடுவதே அன்பிற்கும் அறிவிற்கும் கூட இயைந்ததாக உள்ளது. மிகப் பழைய காலத்தில்

*சென்னை — சைதாப்பேட்டை — திருக்காரணீசுவரர் கோயிலில், அறநிலையத் துணையாணையர் திரு. ஏ. வேங்கடாசலம், B. Sc., BL., அவர்கள் தலைமையிலும், சிலம்புச் செல்வர் திரு. ம. பொ. சிவஞானம் அவர்களின் முன்னிலையிலும், நமது அறநிலைய அமைச்சர் மாண்பு மிகு திரு. மு. கண்ணப்பன் அவர்களால் தமிழ் அர்ச்சனை துவக்கி வைக்கப்பெற்றபொழுது, ஆற்றிய சொற்பொழிவைத் தழுவியது (2-9-71)

சென்னை-சைதாப்பேட்டைத் திருக்காரணீசுவரர் கோயிலில், மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள், தமிழ் அருச்சனை நிகழ்ச்சியில் கலந்து கொள்ளுதல். (2-9-71)

தமிழ் நாட்டில் தமிழ்மொழியில்தான் கோயில் களில் வழிபாடு நிகழ்ந்திருத்தல் வேண்டும்.

ஆசிரியர் தொல்காப்பியர் முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் பாலை என்னும் நிலங்களை யும், அவற்றிற்குரிய தெய்வங்களையும் குறிப் பிட்டுள்ளார். அந்தந்த நிலத்து மக்கள், தத்தமக்கு உரிய தெய்வங்களை அவ்வந்நிலத் தின் இயல்பிற்கேற்பப் பண்டைக் காலத்தில் வழிபட்டு வந்தனர். அங்ஙனம் முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் பாலை ஆகிய நிலங்களில் வாழ்ந்த மக்கள், தத்தம் நிலவியல்பின் பழக்க வழக்கங்ளுக்கு ஏற்பத் தமது தெய்வங்களை வழிபட்டபோது, அவர்கள் தம்முடைய தாய் மொழியாகிய தமிழிலேயே வழிபாடு புரிந் திருத்தல் வேண்டும். மிகப் பழைய காலத்தில் தாய்மொழியின் வாயிலாக அன்றி, அப்பழந் தமிழ் மக்கள் வழிபாடு புரிந்திருத்தல் இயலாது.

ஏனென்றால் சங்ககாலத்தில், கடவுள் வழிபாட்டு முறைகளில், தாய்மொழியல்லாத வேற்று மொழி இடம் பெற்றிருந்தமைக்கு யாதொரு சான்றும் காணப்படவில்லை. இற்றைக்கு ஏறத்தாழ 2000 ஆண்டுகளுக்கு முன்னர், நக்கீரர் என்னும் சங்ககாலப் புலவர் முருகப் பெருமானைப் பற்றிப் பாடிய திருமுரு காற்றுப்படையில்,

''அறுவர் பயந்த ஆறமர் செல்வ!
ஆல்கெழு கடவுட் புதல்வ! மால்வரை
மலைமகள் மகனே! மாற்றோர் கூற்றே!
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ!
இழையணி சிறப்பிற் பழையோள் குழவி!
வானோர் வணங்கு விற்றானைத் தலைவ!
மாலை மார்ப! நூலறி புலவ!
செருவி லொருவ! பொருவிறன் மள்ள!
அந்தணர் வெறுக்கை! அறிந்தோர் சொன்மலை!
மங்கையர் கணவ! மைந்த ரேறே!
வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ!
குன்றங் கொன்ற குன்றாக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ!
பலர்புகழ் நன்மொழிப் புலவ ரேறே!
அரும்பெறன் மரபிற் பெரும்பெயர் முருக!
நசையுநர்க் கார்த்து மிசைபே ராளா!
அலந்தோர்க் களிக்கும் பொலம்பூட் சேஎய்!
மண்டமர் கடந்தநின் வென்று டகலத்துப்
பரிசிலர்த் தாங்கு முருகெழு நெடு வேஎள்!
பெரியோ ரேத்தும் பெரும்பெய ரியவுள்!
சூர்மருங் கறுத்த மொய்ம்பின் மதவலி!
போர்மிகு பொருந! குரிசில்!''

எனவரும் தோத்திரங்களாகிய புகழுரைகள் அனைத்தும், தூய இனிய சிறந்த தமிழ் நடை யிலேயே அமைந்திருக்கக் காண்கின்றோம். திருமுருகாற்றுப்படையில் வரும் இனிய இவ்வரி கள், ஏறத்தாழ 2000 ஆண்டுகளுக்கு முன்ன ரேயே தமிழில் நடைமுறையில் இருந்து வழங்கி வந்த அருச்சனைக்குரிய மந்திரமொழி கள் போல, அமைந்திருத்தல் காணலாம். இது கொண்டே மிகப் பழங்காலத்ல் தமிழ் நாட்டுக் கோயில்களில், தமிழ் மொழியிலேயே வழிபாடு நடந்து வந்ததென்ற உண்மையினை, நாம் நன்கினிது தெளியலாம். பண்டைச் சேர சோழ பாண்டியர் என்னும் மூவேந்தர் கள் வாழ்ந்திருந்த காலத்தில், தமிழ்நாட்டில் தமிழ் மொழியில்தான் வழிபாடு நிகழ்ந்து வந்திருத்தல் வேண்டும்.

ஆழ்வார்களும் நாயன்மார்களும்:

ஆழ்வார்களும் நாயன்மார்களும் தாம் தாம் சென்று வழிபட்ட தலங்களில், தமிழிலே யே தத்தம் பாடல்களைப் பாடினரேயன்றி, பிறமொழியிற் பாடல்கள் இயற்றிப் பாடி அருச்சனை செய்து இறைவனை வழிபட்டதாக வரலாறு ஏதும் இல்லை. ''ஞானச் சுடர்விளக்கு ஏற்றினேன் நாரணர்க்கு ஞானத் தமிழ் புரிந்த

நான்'' ''இருந் தமிழ் நன்மாலை இணையடிக்கே சூட்டினேன் பெருந் தமிழன் நல்லேன் பெரிது'' என்று பூதத்தாழ்வார், தாம் இறைவனுக்குத் தமிழாலேயே பதிகம்பாடி வழிபட்ட சிறப்பைக் குறித்துப் பெருமிதம் தோன்றக் குறிப்பிட்டருளி மகிழ்ச்சியுறுகின்றார்.

இவ்வாறே திருநாவுக்கரசர் ''சலம் பூவோடு தூபம் மறந்தறியேன் தமிழோடு இசைபாடல் மறந்தறியேன்'' என்று அருளிச் செய்கின்றார். திருஞானசம்பந்தப் பெருமான் ''நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பித்'' தம்மைத் ''தமிழ் ஞானசம்பந்தன்'' என்றே பலகால் கூறிக்கொண்டு, தமிழிலேயே திருப் பதிகம் அருளிச் செய்து இறைவனைப் பாடிப் பரவி வழிபட்டார்.

திருஞானசம்பந்தர், இறைவனை வழிபடுவ தற்குத் தமிழ்மொழியே மிகவும் தகுதியும் சிறப்பும் உடையது என்பதை வற்புறுத்தி, தமிழால் இறைவனை வழிபடப் பக்தி நெறிக்கு வழிகோலியருளினார். இவ்வுண்மையைச் செவ் விதின் உணர்ந்தே நம்பியாண்டார் நம்பிகள் "ஆறதேறும் சடையான் அருள் மேவ அவனியர்க்கு வீறதேறும் தமிழால் வழிகண்ட வன்'' எனப் போற்றிப் பாடிப் புகழ்கின்றார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் ''பண்ணிடைத் தமிழ் ஒப்பாய் பழத்தினில் சுவை ஒப்பாய் கண்ணிடை மணியொப்பாய்'' என்று இறைவனைப் புகழ்கின்றார். மேலும் அவர் ''இருந்து நீர் தமிழோடு இசைகேட்கும் இச்சையால் காசு நித்தல் நல்கினீர்'' என்றும், இறைவனுக்குத் தமிழ் மீதும், தமிழில் பாடப் பெற்றுள்ள திருஞானசம்பந்தர் திருநாவுக்கர சர் பாடல்களின் மீதும், உள்ள விருப்பத்தினைப் புகழ்ந்து கூறுகின்றார்.

மாணிக்கவாசகப் பெருமான் தமிழ் மொழி யினை, ''தண்ணார் தமிழ்'' என்றும், ''கூடலின் ஆய்ந்த ஒண்தீந் தமிழ்'' என்றும், தமிழின் சிறப்பைப் புகழ்ந்து பாடியதுடன், கல்நெஞ்சை யும் கரைந்து நெகிழச் செய்யும் திருவாசகத் தமிழ்மறையினை அருளிச் செய்துள்ளார். இராமலிங்க அடிகளார், தமிழ் மொழியிலுள்ள தேவார திருவாசகத் திருமுறைப் பாடல்களைக் ''கேட்டபொழுதே கீழ்ப் பறவைச் சாதிகளும் பொல்லா விலங்குகளும் மெய்ஞ்ஞான நாட்ட முறும்'' என்றும்; ''திருவாசகத்தில் ஒரு மொழியே, நம்மையும் இறைவனையும் ஒன்று சேர்த்து இணைக்கப் போதியதாகும். வேறு சாதகமோ சஞ்சலமோ குருமொழியோ தேவையில்லை'' என்றும், திருவாய் மலர்ந் தருளிச் செய்கின்றார். தாயுமான சுவாமிகள் ''மூவர் சொலும் தமிழ், மொழிக்கு மொழி தித்திப்பாக" விளங்குகின்றது என்று பாராட்டி மகிழ்கின்றார்.

சிவப்பிரகாச சுவாமிகள் ''வேதம் ஓதின் விழிநீர் பெருக்கி நெஞ்சம் நெக்குருகி நிற்ப வர்க் காண்கிலோம்; திருவாசகம் இங்கு ஒருகால் ஓதின் கருங்கல் மனமும் கரைந்துகக் கண்கள் தொடுமணற்கேணியில் சுரந்து நீர்பாய மெய்ம் மயிர் பொடிப்ப விதிர் விதிர்ப்பு எய்தி அன்ப ராவார்கள்'' என்று, தமிழால் இறைவனை வழிபட்டால்தான், ஆண்டவனை உண்மை அன்போடு தொழ முடியும் என்பதனைக் குறிப் பிடுகின்றார்.

''மனம் கரைத்து மலம் கெடுக்கும்
வாசகத்தின் மாண்டோர்கள்,
கனம் சடை என்று உருவேற்றிக்
கண்மூடிக் கதறுவரே!''

—பேராசிரியர் சுந்தரம் பிள்ளை

இப்பண்டைக்கால முறையினைப் பின்பற் றியே மாணிக்கவாசகர் போற்றித் திருவகவலும், திருநாவுக்கரசர் போற்றித் திருத்தாண்டகங்களும் அருளிச் செய்திருக்கின்றனர். திருநாவுக்கரசர் அருளிய போற்றித் திருத்தாண்டகங்கள், கோயில்களில் அருச்சனை புரிவதற்கு என்றே, மிக மிகப் பொருத்தமாகவும் சிறப்பாகவும் அமைந்திருக்கின்றன. அதனால் இற்றைக்கு ஏறத்தாழ 1300 ஆண்டுகளுக்கு முன்னரே, தமிழால் அருச்சனை புரியும் பழக்கம் இருந்து வந்தது எனத் தெளிவாக அறிந்து கொள்ள லாம்.

'செந்தமிழர் தெய்வமறை நாவர்செழு
நற்கலை தெரிந்த அவரோடு
அந்தமில்குணத்தவர்கள் அர்ச்சனைகள்
செய்ய அமர்கின்ற அரனூர்;

கொந்தலர் பொழிற் பழனவேலி
குளிர் தண்புனல் வளம்பெருகவே
வெந்திறல் விளங்கி வளர் வேதியர்
விரும்புபதி வீழி நகரே''

எனவரும் திருஞான சம்பந்தர் தேவாரம், இவ்வுண்மையைச் செவ்விதின் வலியுறுத்தும் சான்ருக அமையும்.

தமிழ் வேதம்:

தமிழ் நாட்டிலுள்ள சிவாலயங்களுக்குத் திருமுறைகளாலும், திருமால் கோயில்களுக்கு நாலாயிரத் திவ்வியப் பிரபந்தப் பாடல்களாலுமே, எல்லாச் சிறப்பும் பெருமையும் ஏற்பட்டிருக்கின்றன. ஆழ்வார்களும், நாயன்மார்களும் அருளிச் செய்த பாடல்களாலேயே பெருஞ் சிறப்புப் பெற்றுள்ள கோயில்களில், அவைகள் பெருமை பெறுவதற்குக் காரணமாக அமைந்த தேவார திருவாசகத் திவ்வியப் பிரபந்தப் பாடல்களைக் கொண்டு வழிபாடு செய்வது, தொன்று தொட்டுவரும் மிகச் சிறந்த சமய சம்பிரதாய நெறிகளுக்கு மிகவும் ஏற்றதேயாகும். ஆழ்வார்களையும் நாயன்மார்களையும்விட, மிகச் சிறந்த அருளாளர்கள் இருத்தல் இயலாது. அவ் அருட்பெருஞ் சான்றோர்களின் அருட்பாடகளைக் காட்டிலும், மேலான துதிப்பாடல்கள் வேறு எதுவும் இருத்தல் இயலாது. "மந்திரங்கள் மனுதிகள் அடக்கித் தெய்வம் வழிபடும் வாய்மையாகும்" என்பது சிவஞானசித்தியார். அதன்படி, மனுதிகளை அடக்கித் தெய்வம் வழிபடும் வாய்மைக்குத் தேவார திருவாசகம் முதலிய திருமுறைகளையும், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தங்களையும் விட நமக்குத் துணைபுரிவன, வேறு எதுவும் இல்லை எனலாம்.

* தாய்மொழியின் வாயிலாக அன்றிப் பிற மொழிகளின் வாயிலாகத் துதித்து இறைவனின் அருளைப்பெற முயலுதல், காதலியின் எழில்மிக்க இனிய புன்முறுவலையும், கவர்ச்சி மிக்க கடைக்கண் நோக்கினையும், வழக்கறிஞரைக் கொண்டு நீதிமன்றத்தில் வாதாடிப் பெற முயல்வது போன்ற செயலேயாகும் எனலாம்.

சிவபெருமானும் திருமாலும் மகிழ்ந்து ஏற்றுத் திருவுள்ளம் உகந்த அருட் பாசுரங்களின் சிறப்பிற்கும் தெய்விக நலத்திற்கும் ஓர் எல்லையே இல்லை. உண்மையான பக்தர்கள், ஆழ்வார்களையும் நாயன்மார்களையும், அவர்கள் அருளிச் செய்த அருள்நலம் சிறந்த திருப்பதிகங்களையும், மிகவும் மதித்துப் போற்றக் கடமைப்பட்டவர்கள் ஆவர். அவ்வருட் பாசுரங்கள் எத்தனையோ பல அற்புதத் தெய்விகச் செயல்களை நிகழ்த்திக் காட்டியுள்ளன. அவற்றின் மந்திர சக்தியும், தெய்விக ஆற்றலும், புனிதத் தன்மையும் அளவற்றனவாகும்.

''தொண்டர் நாதனைத் தூதிடை
விடுத்ததும், முதலை
உண்ட பாலனை அழைத்ததும்,
என்புபெண் ணுருவாக்
கண்டதும், மறைக் கதவினைத்
திறந்ததும், கன்னித்
தண்டமிழ்ச் சொலோ? மறுபுலச்
சொற்களோ சாற்றீர்!''

—பரஞ்சோதி முனிவர்

தமிழ்வேதம் எனவும், தமிழ்மந்திரங்கள் எனவும், இவைகள் தொன்றுதொட்டு நம் முன்னோர்களால் போற்றப் பெற்று வந்துள்ளன. இறைவன் அருளியனவாகக் கூறுப்பெறும் வேதங்களையும், வேத மந்திரங்களையும்விட, இத் தமிழ்வேதங்களுக்கும் மந்திரங்களுக்கும் நம்முடைய முன்னோர்கள் மிக்கபெருமையும் சிறப்பும் அளித்துப் போற்றி வந்திருக்கின்றனர்.

* "Languages are jealous. They do not give up their treasures to those who try to deal with them through an intermediary belonging to an alien rival. We have to Court them in person and dance in attendance on them. Poems are not like market commodities transferable. We cannot receive the smiles and glances of our sweetheart, through an attorney, however diligent and delightful he may be."

—Rabindranath Tagore.

''இலேக்குளநீர் அழைத்ததனில்
இடங்கர்உற அழைத்ததன்வாய்த்
தலேக்குதலே மதலேயுபிர்
தழைப்ப அழைத் தருளியநின்
கலேக்கும், வட கலேயின்முதற்
கலேக்கும், உறு கணக்குயர்பொன்
மலேக்கும் அணு நிலேக்கும் உரு
வன்தொண்டப் பெருந்தகையே !

— இராமலிங்க வள்ளலார்.

கைகண்ட பெருமந்திரங்கள் :

தில்லேவாழ் அந்தணர்களில் ஒருவரும், சைவ சித்தாந்த சந்தான ஆசிரியர்கள் நால்வரில் ஒருவரும் ஆகிய கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியார் அவர்கள், தாம் பாடிய திருமுறை கண்ட புராணத்தில், திருமுறை களேக் கண்டெடுத்துத் தொகுத்தவரும், திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளேயார் அருள் பெற்றவரும் ஆகிய நம்பியாண்டார் நம்பிகள், ''சிவபெருமான் அருளிய வேதங்கள் கைகாணு மந்திரம் ; ஆனல் அப்பர் சம்பந்தர் சுந்தரர் ஆகிய மூவரும் பாடிய தேவாரப் பாடல்களோ கைகண்ட பெருமந்திரங்கள்'' என இராசராச சோழனுக்கு அறிவுறுத்தியதாகப் பாடியருளு கின்ருர்,

''கண்டபெரு மந்திரமே மூவர் பாடல்,
கைகாணு மந்திரம் கண்ணுதலோன்
கூறல்''

என்னும் திருமுறைகண்ட புராண வரிகளால், நம்பியாண்டார் நம்பிகள் 'அபயகுல சேகரன்' என்னும் இராசராச சோழனுக்குத் திருமுறைப் பாடல்களேக் ''கை கண்ட பெருமந்திரங்கள்'' எனத் தெளிவாகச் சொல்லி வற்புறுத்தியிருத் தல் காணலாம். அதனுல் அன்ருே இராசராச ணுகிய திருமுறைகண்டசோழன், தான் எடுப் பித்த தஞ்சைப் பெரிய கோயிலில், தேவாரத் திருப்பதிகம் ஓதுவதற்கென்றே நாற்பத்தெட் டுத் தேவார இசைவாணர்களாகிய ஓதுவார் களே நியமித்து மகிழ்ந்தான். இதனுல் இராச ராச சோழன் முதலிய சோழ அரசர்களின் காலத்திலும், அதற்கு முன்னரும் தமிழ் நாட்டுக் கோயில்களில், தமிழிலேயே வழிபாடு நிகழ்ந்து வந்ததனே ஐயத்திற்கு இடமின்றிச் செவ்விதின் தெளியலாம்.

தமிழும் இறைவனும் :

இவ்வாறே வைணவக் கோயில்களிலும், திவ்வியப் பிரபந்தப் பாடல்கள் தொன்று தொட்டு மிகச்சிறப்பாகப் போற்றப்பெற்று வந்துள்ளன. இசைவாணர்களும் அரையர் களும் திவ்வியப்பிரபந்தப் பாடல்களேக் கோயில்களில் முறையே ஓதி, வழிபாட்டு நிகழ்ச்சிகளேச் சிறப்பித்துள்ளனர். வைணவ ஆலயங்களில் வேத பாராயணத்தைவிட, திவ் வியப்பிரபந்தத்திற்கு மிக்க முதன்மையும் சிறப்பும் பெரிதும் அளிக்கப் பெற்று வருகின் றன. வடமொழி வேதங்களில் தோன்றும் ஐயங்களேச் செந்தமிழிலுள்ள நாலாயிரத் திவ்வியப்பிரபந்தங்களே ஓதியே தெளிந்து கொள்ளுதல் இயலும் என்னும் உண்மையினே, வேதாந்ததேசிகர்,

'' செய்யதமிழ் மாலேகள்நாம்
தெளிய ஓதித்
தெளியாத மறைநிலங்கள்
தெளிகின் ருேமே ''

என்று அருளிச் செய்திருத்தல் கொண்டு, தமிழ்வேதம் எனப்படும் திவ்வியப் பிரபந்தங் களின் இணையற்ற பெருஞ் சிறப்பினே நாம் தெற்றெனத் தெளியலாம். திவ்வியப் பிரபந்தம் முன்னே செல்ல, பெருமாள் அதற் குப் பின்னே வருகின்ருர். அவருக்குப் பின்ன ரேயே வேதபாராயணம் நடைபெறுகின்றது. ''பழமறைகள் ஒலிடப் பசுந்தமிழ்ப் பின்சென்ற பச்சைப் பசுங் கொண்டலே'' எனக் குமர குருபரசுவாமிகள் இதனேக் குறிப்பிட்டு மகிழ்கின்ருர். வைணவ ஆலயங்களில் வேதங்களே விட, திவ்வியப்பிரபந்தங்களுக்கு முதன்மை யளிக்கப்பட்டிருப்பதை இதனுல் உணரலாம்.

சிவபெருமானும் திருமாலும் முருகப் பெருமானும் தமிழின்மீது கொண்டுள்ள, அளவற்ற அன்பையும் ஆர்வத்தையும் விளக்கும் வரலாறுகள் எத்தனையோ பற்பல உண்டு. தமிழ்மீது கொண்டுள்ள காதலால், சுந்தரர் தன்னைப் பித்தன் என்று இகழ்ந்ததையும் சிவபெருமான் மகிழ்ந்து ஏற்றுக் கொண்டார். அவரது தேவாரப் பாடல்களைக் கேட்பதற்காக, அவர் எளியரின் எளியராக இரவில் திருவாரூரில் பரவையாரிடம் நடந்து தூது சென்றார். சுந்தரர் இகழ்ந்து பாடிய பாடல்களையும் மகிழ்ந்து ஏற்றுக்கொண்டு, அவர்கேட்ட போதெல்லாம் பொன்னும் பொருளும் வழங்கினார். தமிழின்மீது கொண்ட காதலால் மாணிக்கவாசகருக்காக நரியைக் குதிரைப் பரியாக்கி ஞாலமெலாம் நிகழ்வித்தார். குதிரைக்காரனாகக் கோலம் கொண்டு வந்தார். மதுரை மாநகரில் கூலியாளாய் மண் சுமந்தார். நீற்றெழில் மேனியில் மாற்றடி பட்டுத் தம் பொன்மேனியில் புண் சுமந்தார். இதனை,

''வலம்புரி கிடக்கும் வாதவூர் அன்ப !
பாடும் பணிநீ கூடும் பொருட்டு
மதுரைமா நகரிற் குதிரை மாறியும்,
விண்புகழ் முடிமிசை மண்பொறை சுமந்தும்,
நீற்றெழின் மேனியின் மாற்றடி பட்டும்,
நின்னைத் தொண்டன் என்னக் கொண்டனன் ''

என்று சிவப்பிரகாச சுவாமிகள் பாடியிருப்பதனால், சிவபெருமானுக்குத் தமிழின் மீதுள்ள எல்லையற்ற அன்பு இனிது விளங்கும்.

திருவாசகத்தின் இனிமையைப் பெரிதும் உவந்தே ஆண்டவன் மனித வடிவில் வந்தருளி மாணிக்கவாசகப் பெருமானைத் திருவாசகத்தைச் சொல்லச் சொல்லித் தான் எழுதி முடித்து 'மாணிக்கவாசகன் சொல்ல அழகிய சிற்றம்பல முடையான் எழுதியது' என்று கையொப்பமிட்டுத் தில்லைச் சந்நிதியில் வைத்து மறைந்தருளினார் என்பது வரலாறு. இதிலிருந்து தமிழின் மேன்மை விளங்கும். பெரியபுராணம் பாடிய சேக்கிழார் பெருமானுக்கு "உலகெலாம்" என்ற தெய்விகத் தமிழ்மொழித் தொடரைத் தான், சிவபெருமான் அடி முதலாக எடுத்து அளித்தார். காரைக்கால் அம்மையார் கயிலைக்குச் சென்றபொழுது, சிவபிரான் "அம்மையே" என்று தமிழில்தான் அன்புடன் அழைத்தார். அம்மையாரும் ''அப்பா'' என்று தமிழில்தான் விளித்துப் பணிந்தார். சேரமான் பெருமாள் தமிழில் அருளிச் செய்த 'ஞானவுலா' நூலைத் தான், சிவபெருமான் திருக்கயிலையில் செவி மடுத்து இன்புற்றார்.

'' தமரநீர்ப் புவனம் முழுதொருங்கு ஈன்றாள்
தடாதகா தேவி என்று ஒருபேர்
தரிக்க வந்ததுவும் ; தனிமுதல் ஒருநீ
சவுந்தர மாறன் ஆனதுவும் ;
குமரவேள் வழுதி உக்கிரன் எனப்பேர்
கொண்டதும் : தண்டமிழ் மதுரம்
கூட்டுண எழுந்த வேட்கையால் எனில், இக்
கொழி தமிழ்ப் பெருமை யார் அறிவார்? ''

எனக் குமரகுருபர அடிகள் அருளிய மதுரைக் கலம்பகச் செய்யுளும், இங்குச் சிந்தித்து உணர்தற்குரியது.

இவ்வாறே, திருமாலும் தமிழின்பால் கொண்டுள்ள அளவற்ற அன்பும் ஆர்வமும் எத்தகையன என்பது, திருமழிசையாழ்வார் ''கணிகண்ணன் போகின்றான்; காமரு பூங்கச்சி மணிவண்ணா; நீ கிடக்கவேண்டா ; துணிவுடைய செந்நாப் புலவன் யான் செல்கின்றேன்; நீயும் உன்றன் பைந்நாகப்பாய் சுருட்டிக் கொள்'' என்று பாடியபோதும் ; பின்னர் அவரே ''கணிகண்ணன் போக் கொழிந்தான்; காமரு பூங்கச்சி மணிவண்ணா; நீ கிடக்க வேண்டும் ; துணிவுடைய செந்நாப்புலவன் யான் செல்வு ஒழிந்தேன் ; நீயும் உன்றன் பைந்நாகப் பாய் படுத்துக்கொள் '' என்று பாடியபோதும், ஆழ்வார் சொன்னவண்ணமே கேட்டுக் கட்டுப்பட்டுத் திருமால் நடந்து கொண்ட வரலாறு முதலியவற்றால் நன்கு விளங்கும்.

வேற்றவர் ஆட்சியின் விளைவு:

தமிழ் அரசர்களின் ஆட்சி மறைந்து, வேற்றவர்களின் ஆட்சியும், வேற்று மொழிகளின் ஆதிக்கமும், தமிழகத்தில் ஏற்பட்ட பிறகுதான், கோயில்களில் வடமொழி இடைக் காலத்தில் புகுந்திருந்தல் வேண்டும். விசயநகர மன்னர் ஆட்சி (1355-1556), மதுரை நாயக்க மன்னராட்சி (1529 - 1736), செஞ்சி நாயக்கர் ஆட்சி (1464-1650), தஞ்சை நாயக்க மன்னர் ஆட்சி (1532-1676), தஞ்சை மகாராட்டிரர் ஆட்சி (1676-1855), ஆற்காடு நவாபு போன்ற முஸ்லிம்களின் ஆட்சி, கிழக்கிந்தியக் கம்பெனியார் ஆட்சி முதலியன ஏற்பட்டிருந்த காலங்களில், தமிழ் நாட்டில் தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டு, வேற்று மொழிகள் செல்வாக்குப் பெறத் தொடங்கின. விசயநகர மன்னர்களின் காலத்தில், தமிழ் நாட்டுக் கோயில்களில் தமிழ் மொழி சிறுகச் சிறுகப் புறக்கணிக்கப்பட்டிருத்தல் கூடும். கிருட்டிண தேவராயர் முதலிய அரசர்கள் தமிழ் அறியாதவர்களாக இருந்ததினால், வடமொழியும் தெலுங்கு மொழியுமே அந்தக் காலத்தில் பெரிதும் போற்றப்பட்டன.*

இவைகளையெல்லாம் ஆராய்ந்து பார்த்தால், கோயில்களில் இடைக்காலத்தில் சில நூற்றுண்டுகளாகவே, தமிழ் மொழியானது அறவே புறக்கணித்து ஒதுக்கப்பட்டு, அங்கு வடமொழி வந்து புகுந்து ஆதிக்கம் பெறத் தலைப்பட்டது என்பதை, நாம் நன்கினிது ஊகித்து உணரலாம்.

முடிவுரை :

தமிழ் தெய்வமொழி. ஆழ்வார்களும் நாயன்மார்களும் போற்றி வளர்த்த மொழி. சிவபிரானும் திருமாலும் முருகனும் விநாயகரும் அம்பிகையும் விரும்பி மகிழ்கின்ற மொழி. பக்தியைப் பரப்பும் மொழி. திருமுறைகளும் திவ்வியப்பிரபந்தங்களும் அமைந்த சிறந்த மொழி.

இத்தகைய தமிழ்மொழியால், இறைவனைக் கோயில்களில் அருச்சித்து வழிபடுவது, சிறந்த இனிய நல்ல செயலேயாகும். மிகப் பழங்காலத்தில் தமிழில்தான் வழிபாடுகள் நடைபெற்றுவந்தன. திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் முதலிய சமய ஆசிரியர்கள், இறையருளைப் பெறுவதற்குத் தமிழால் வழிகண்டனர். அந்தச் சமயப் பெருஞ் சான்றோர்களின் அருளையும் அடிச் சுவட்டையும் பின்பற்றியே, பக்தி உணர்வு

---

* "Krishnadevaraya had a special partiality for Telugu. He showed greater regard for Telugu poets and scholars. Very early in his reign, he constituted an academy of Telugu poets, the members of which were known as Ashtadig gajas.... The study of the Sanskrit language and literature was pursued with much enthusism and vigour. Several authors of eminence flourished during this century, and produced works of lasting importance... **The growth of the Tamil literature was less** due to the patronge of the Court than that of the other languages".

—*N. Venkata Ramanayya*, M A., Ph.D.
Studies in the History of Vijayanagara.

2. "Mr. H. Krishna Sastri says (in Archaeological survey of India, Report, 1911—2,P. 195) that 'of the Madura Nayaks, Tirumala, Muddalagadri and Vijayaranga Chokkanatha were patrons of Telugu literature''

—*Prof., R. Sathyanatha Aiyer.*, M.A., L.T.
History of the Nayaks of Madura.



திருப்பரங்குன்றத்தில் நடைபெற்ற தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை அலுவலர்கள் சங்கத்தின் மாநில முதலாவது மாநாட்டில், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் அவர்கள் உரை நிகழ்த்துதலும், மாநாட்டிற் கலந்துகொண்டு சிறப்பித்த பெருமக்கள் பலரும் (11, 12—9—71).



மக்களிடையில் பெரிதும் பரவும் வகையில், தமிழ் அருச்சனை கோயில்களில் நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது. இது பக்தர்களும் அடியார்களும் உண்மையில் மகிழ்ந்து போற்றுதற்குரிய தொன்றேயாகும் தமிழ் அருச்சனை முறையில் அருச்சகர்களுக்கும், அடியார்களுக்கும் இடையே அன்பு வளரும். பக்தி பெருகும். சமயம் தழைக்கும்.

தமிழின் இனிமையினைச் சுவைத்துப் புகழ்ந்து பேசும் இடங்களிலும், தமிழ்ப் பாடல்களை இசையுடன் பாடுகின்ற இடங்களிலும், இறைவன் நிலையாக விரும்பித் தங்கி எழுந்தருளி விளங்குகின்றான். 'தெய்வ சாந்நித்தியம்' என்பது, இவ்விடங்களிலேயே மிகவும் சிறப்புற்றோங்கித் திகழும். இதனை,

''தமிழின் நீர்மை பேசித் தாளம்
வீணை பண்ணி நல்ல
முழவம் மொந்தை மல்கு பாடல்
செய்கை இடம் ஓவார்;
குமிழின் மேனி தந்து கோல
நீர்மை அது கொண்டார்,
கமழும் சோலைக் கானூர் மேய
பவள வண்ணரே''

எனத் திருஞானசம்பந்தர் சிறந்தெடுத்துக் கூறி, மிகவும் தெளிவுறுத்தியருளியிருக்கின்றார். ஆதலின் தமிழ் அருச்சனை முறை வளர்ந்து பரவுவதற்கு அன்பர்கள் அனைவரும், எல்லா வகையிலும் ஆக்கமும் ஊக்கமும் அளிக்கக் கடமைப் பட்டுள்ளனர்.

— ஆசிரியர்

---

*''The Conqueror normally imposes his language upon those conquered...''

—Mario A. Pei,
The World's Chief Languages, P. 207



சென்னை—சைதாப்பேட்டைத் திருக்காரணீசுவரர் கோயிலில் தமிழ் அருச்சனை பற்றி, ஆசிரியர் அவர்கள் உரை நிகழ்த்துதல் (2—9—71)

தொண்டரடிப் பொடியாழ்வார் அருளிய
திருமாலை

[மூலமும் உரையும்]

(முற்றொடர்ச்சி)

மறஞ்சுவர் மதிள் எடுத்து
மறுமைக்கே வெறுமை பூண்டு
புறஞ்சுவர் ஓட்டை மாடம்
புரளும்போது அறிய மாட்டீர்,
அறஞ்சுவர் ஆகி நின்ற
அரங்கனார்க்கு ஆட்செய் யாதே
புறஞ்சுவர் கோலம் செய்து
புள்கவ்வக் கிடக்கின் றீரே.

பொழிப்புரை :

மனிதர்களே நீங்கள், கொடுமை என்னும் சுவரை மதிலாக எழுப்பியும், மறு பிறவியில் பெறுவதற்கு ஒன்று மின்மையை மேற்கொண்டும், வெளிச் சுவராய்ப் பழுதுபட்ட மாடம் போன்ற உடலானது அழிந்து விடும் காலத்தை அறியாமல் இருக்கின்றீர்கள். அறமே தன் இயல்பாக விளங்குகின்ற திருவரங்கநாதப் பெருமானுக்கு அடிமை செய்யாமல், நீங்கள் வெளிச்சுவரான உடம்பை அழகுபடுத்தி, பறவைகள் கவ்விக் கொள்ளும்படி பயனின்றி வாழ்கின்றீர்கள். அந்தோ, இஃது என்ன அவல நிலை.

குறிப்புரை :

மனிதர்கள் தமக்கும் பிறர்க்கும் நன்மை பயக்கும் அறநெறியைப் புறக்கணித்து, தமக்கும் பிறர்க்கும் தீமையே பயக்கும் கொடிய செயல்களையே செய்து உழன்று வருதலின் ''மறஞ்சுவர் மதில் எடுக்கின்றனர்.'' இவ்வாற்றான் இம்மை வாழ்விற் பெறுதற்குரிய நலங்களை இழப்பதுடன், மறுமையில் அடைதற்குரிய நன்மைகளையும் தேடிக் கொள்ளாமல், வாணாளை வீணாளாக்குதலின் ''மறுமைக்கும் வெறுமை பூண்கின்றனர்.'' இத்தகைய மனிதர்கள் தமக்குரிய உயிர்நலனைக் கருதாது, தம் உடலை ஓம்புதலையே முதன்மையாகக் கருதி, அதற்கென்றே அல்லும் பகலும் பாடுபட்டு அலைகின்றனர். ஆனால் அந்த உடலோ, புறத்தே சுவர்களை மட்டுமே உடையதாய்ப் பழுதுபட்ட ஒட்டை மாடம் போன்றது, அதுதானும் மறுகணத்தில் வாழ்ந்திடுமோ வீழ்ந்திடுமோ என்னும் நிலையில் இருப்பது. ஓட்டை மாடமாகிய இவ்வுடல் எப்போது வீழும் என்பதனைக்கூட இவர்கள் அறிய மாட்டார்கள். இங்ஙனம் நிலையற்ற இப்பாழ் உடலை, இவர்கள் பல்லாற்றான் முயன்று அழகு செய்து கொள்வது, வீடு பாழ்பட்டு அதன் உள்ளே தும்பும் தூசும் குப்பையும் கூளமும் நிரம்பிக்கிடக்க, அதன் வெளிச் சுவர்

களுக்கு மட்டும் சுண்ணம் அடித்து அழகுசெய்ய முயல்வது போன்ற பயனில் செயலாக உள்ளது. இங்ஙனம் இவர்கள் இழிந்த தம் உடலை எவ்வளவுதான் அழகுபடுத்திக்கொள்ள முயலினும், அஃது உயிர் நீங்கியபின் கழுகும் காகமும் கவ்வும்படி பிணமாய் அழிதல் திண்ணம். அந்நிலை நேருவதற்கு முன்பே, இம்மனிதர்கள் திருவரங்கப்பெருமானுக்கு அடிமை செய்து உய்யலாமே; அறமே தமக்கு இயல்பாகவும் வடிவமாகவும் உடைய திருவரங்கநாதன், இவர்களைக் காத்து ஆட்கொண்டு கருணை புரிந்து அருள்வானே : அரங்கனின் கருணையை அறியாமல், அந்தோ இம்மனிதர்கள் வீணே அழிந்து படுகின்றனரே என ஆழ்வார் பெரிதும் மனமிரங்கி இப்பாடலில் வருந்துகின்றார்.

இத்தகைய புல்லிய கொடிய மனிதர்களின் ஊனைக் கழுகும் காகமும்போன்ற பறவைகளும் கூட உண்ணுவதற்கு விரும்பாமல் அருவருத்து ஒதுக்கும் என்பதனையுணர்த்த, 'புள்ளுண்ணக் கிடக்கின்றீர்' என்னமல், 'புள் கவ்வக் கிடக்கின்றீர்' என்று குறித்த நுட்பம் சுவைத்து மகிழற்பாலது. (6)

புலையறம் ஆகி நின்ற
புத்தொடு சமணம் எல்லாம்,
கலையறக் கற்ற மாந்தர்
காண்பரோ கேட்ப ரோதாம்,
தலையறுப் புண்டும் சாகேன்;
சத்தியம் காண்மின் ஐயா;
சிலையினல் இலங்கை செற்ற
தேவனே தேவன் ஆவான்!

பொழிப்புரை :

இழிதகவு மிக்க செயல்களுடன் கூடியிருக்கின்ற பௌத்தம் சமணம் முதலிய புறநெறிகளை எல்லாம், கலைகள் பலவற்றையும் கசடறக் கற்றுத் தேர்ந்த பெருந்தகையாளர்கள், தமது உள்ளத்தில் ஒரு பொருளாகக்கொண்டு ஆராய்வரோ. அவற்றின் புல்லிய செய்திகளைக் காது கொடுத்துக் கேட்பார்களோ? என் தலையானது அறுக்கப்பட்டாலும், நான் சாகமாட்டேன். இது உண்மை. அன்புடையீர்! இதனைக் கண் கூடாக நீங்கள் காணுங்கள். தம்முடைய கோதண்டம் என்னும் வில்லினல் இலங்கையை அழியும்படி செய்த இராமபிரானே, அனைத்து உலகும் போற்றித் துதிக்கத்தக்க தெய்வமாவான்.

குறிப்புரை :

பௌத்தம் சமணம் முதலிய மதங்கள் உயரிய அறங்களை வற்புறுத்தி உணர்த்திய போதிலும், அம்மதங்களைத் தழுவிய மக்கள் காலப்போக்கில் அவ்வறங்களைக் கைவிட்டு, அவற்றிற்கு நேர்மாறான செயலும் பண்பும் உடையராய் ஒழுகத் தலைப்பட்டு, அதனல் மக்கட் சமுதாய வாழ்வைச் சிதைத்துச் சீர்குலைத்து இழிதகவு வாழ்வை எய்தி நின்றதனல், "புலை அறம் ஆகி நின்ற புத்தொடு சமணம்" என்று ஆழ்வார் குறிப்பிடுவாராயினர். தீயவற்றைக் காண்டலும் கேட்டலும்கூடத் தீங்கு பயக்கும் ஆதலின், "காண்பரோ கேட்பரோ தாம்" என்றார். சுருதி மிருதி இதிகாசங்களில் வேத தாற்பரியம் உணர்ந்து கைகண்டவர்கள், "கலையறக் கற்ற மாந்தர்" என்று சிறப்பிக்கப் பெற்றனர். அவர்கள் "கூரத்தாழ்வான் போல்வார்" எனச் சிறப்புற எடுத்துக் குறிப்பிடுவர் பெரியவாச்சான் பிள்ளை. திருமாலே பரதெய்வம் என்னும் தம்முடைய தெளிவினைச் "சிலையினல் இலங்கை செற்ற தேவனே தேவனுவான், சத்தியம் காண்மின் ஐயா :" என்பதனல் குறிப்பிட்டருளினர். இங்ஙனம் தாம் உண்மை என்று தெளிந்ததனைக் கூறும் உறுதிப் பாட்டால் "தலையறுப்புண்டும் சாகேன்" என்று வலியுறுத்தி மொழிந்தார். உண்மையைச் சொல்லுவதனல் தலை அறுபட மாட்டாது. அறுப்புண்டாலும் உயிர் போகாமல் இருக்கும் என்பது கருத்து. (7)

வெறுப்பொடு சமணர் முண்டர்
விதியில் சாக்கியர்கள் நின்பால்
பொறுப்பரி யனகள் பேசில்
போவதே நோய தாகிக்
குறிப்பெனக்கு அடையு மாகில்,
கூடுமேல் தலையை ஆங்கே
அறுப்பதே கருமம் கண்டாய்
அரங்கமா நகரு ளானே!

பொழிப்புரை :

அரங்கமாநகரில் எழுந்தருளியுள்ள அழகிய மணவாளனே ; இறையருட் செய்திகளைக் கேட்கவும் பொறாத, வெறுப்பொடு கூடிய சமணர்களும், சைவர்களும், நற்பேறு இல்லாத பௌத்தர்களும், நின்னுடைய திறத்தில் பொறுப்பதற்கு இயலாத இழி சொற்களைக்கூறி நிந்தித்துப் பேசுவார்களாயின், அவ் இழிசொற்களைக் கேட்ட அதுதானே, எனக்கு நோயாக அமைந்து, என் உயிர் போய்விடுவது எனக்கு மிகவும் நலம். இறை நெறிப் பகைவர்களின் சொல்லும் செயலும் சிறிதும் பொறுக்க மாட்டாத எனக்கு, நிந்தித்தவன் ஓடிப் போய் விடாமல் என் எதிரே நிற்பானாயின், அதற்கு மேல் எனக்கு ஆற்றலும் கூடுமாயின், நிந்தித்த அவ்விடத்திலேயே, அவன் தலையை அறுத்துத் தள்ளுதலே கடமையாகும்.

குறிப்புரை :

இப்பாடலை ஒரு சிலர் சமயக்காழ்ப்புடைமைக்கும், சமயப் பொறையின்மைக்கும் சான்றாக மேற்கோள் காட்டுவர். தாம் போற்றி வழிபடும் திருமாலை, வெறுப்பொடு பொறுப்பரியன பேசி நிந்திப்பவர்கள் பால், தமக்குள்ள வெறுப்பினையே, ஆழ்வார் இங்ஙனம் புலப்படுத்தியருளினர் எனக் கொள்வதல்லது, அருட்பெருஞ்சான்றோரான ஆழ்வாரின் அருள் மொழியைப் பிறவாறு மிகைப்படுத்தி உள்ள படியே கொள்ளுதல் பொருந்துவதன்று. ''குறிப்பெனக்கு அடையுமாகில்'' என்றும்; ''கூடுமேல்'' என்றும் சொல்லியருளியதனாலேயே, அவற்றின் இயலாமையை ஆழ்வார் காட்டியருளியமை தெளியலாம். தெய்வ நிந்தை பொறாத அவர்தம் திருவுள்ளத்தின் இயல்பு, நிந்தனையைக் கேட்டமையே தமக்கு நோய் வரக் காரணமாக அமைந்து, அதனால் தம் உயிர் போவது நன்று என்னும் கருத்தமைய ''அதே நோயதாகிப் போவது'' என்றதனாற் புலனாகும். தெய்வநிந்தை கேட்ட அளவில், அதனைத் தாங்கலாற்றாது தம் உயிர் போதல் நன்று என்று கருதும் ஆழ்வார், அங்ஙனம் தம் உயிர் இயல்பாகப் போகாது நிற்குமாயின், அதனைப் போக்கிக் கொள்ளத் தம் தலையைத் தாம் அறுத்துக் கொள்ளுதல் கடமை எனக் கருதினர் போலும். அக்கருத்திலேயே ''அவர் தலையை'' என்னாது பொதுவாகத் ''தலையை'' என்று மட்டும் அருளினர் எனக் கொள்ளுதலும் தகும். பிரகலாதாழ்வான் மகாபலியை நோக்கிக் ''கெடுவாய்! என் முன்னே பகவந் நிந்தை செய்தாய். என் தலையை அறுத்தாயாகில் எனக்கு உபகரித்தாய் ஆயிற்று'' என்று கூறியதாக வரும் உரைப்பகுதி இங்கு சிந்திக்கத் தக்கது.

முண்டம்-நெற்றி. நெற்றியில் திருநீறு அணிபவர் 'முண்டர்' எனப்பட்டனர். ''செஞ்சவே ஆண்டுகொண்டான் திருமுண்டம் தீட்டமாட்டாது அஞ்சுவார் அவரைக் கண்டால் அம்ம நாம் அஞ்சுமாறே'' என்பது திருவாசகம். திரிபுண்டரம் என்பது திருமுண்டம் எனச் சிதைந்து, பின்னர் முண்டர் என வந்தது எனினுமாம். ''சமணர், முண்டர்'' என்று அல்லாமல் ''சமணமுண்டர்'' எனவும்' ''சமண மிண்டர்'' எனவும் பாட பேதம் கொள்ள இடமுண்டு.

(8)

மற்றும்ஓர் தெய்வம் உண்டே,
 மதியிலா மானி டங்காள்;
உற்றபோ தன்றி நீங்கள்
 ஒருவன்என் றுணர மாட்டீர்;
அற்றமேல் ஒன்று அறியீர்;
 அவன் அல்லால் தெய்வம் இல்லை;
கற்றினம் மேய்த்த எந்தை
 கழலிணை பணிமின் நீரே!

---

* "It is difficult, at this distance of time, to understand why so implacable a hatred was implanted against the Jains and the Buddhists in the heart of our otherwise amiable author. With the hopelessly impenetrable darkness that envelopes the history of the period, it is idle to open such questions. We should rejoice, if we could, with any tolerable certainty, determine what that period itself was."

—Prof. P. Sundaram Pillai.

பொழிப்புரை :

தத்துவ ஞானம் இல்லாத மனிதர்களே, யான் கூறுகின்றவனைத் தவிரவும், புகலிடமாக அடையக்கூடிய வேறொரு தெய்வம் உள்ளதோ? இல்லை. நீங்கள் வழிபடுகின்ற சில தேவதைகளுக்கு ஓர் இடர்ப்பாடு நேர்ந்த காலத்தில் அல்லாமல், மற்றைக் காலத்தில் யான் கூறுகின்ற இவன் ஒருவனே கடவுள் என்பதை அறியமாட்டீர்கள். அங்ஙனம் நீங்கள் அறியாமைக்குக் காரணம், வேதத்தில் சொற்பொருளுக்கு மேற்பட்டு நிற்கும் நுண்பொருளை நீங்கள் சிறிதும் அறியாமையே. இனி வேதங்களின் முடிவான பொருளை நீங்கள் உணருமாறு யான் கூறுவேன். யான் கூறும் அந்தப் பெருமானைத் தவிர, நாம் வழிபட்டு உய்வதற்குரிய தெய்வம் வேறொன்றுமில்லை. ஆதலால் பசுக் கன்றுகளின் கூட்டங்களை மிகப் பரிவோடு மேய்த்து வந்த, எமது தெய்வமாகிய கண்ண பிரானின் இரண்டு திருவடிகளையும் நீங்கள் சரணமாகப் பற்றி வழிபட்டு உய்யுங்கள்.

குறிப்புரை :

மதி என்பது ஈண்டுத் தத்துவ ஞானம்; அஃதாவது, 'ஒண் தாமரையாள் கேள்வன் ஒருவனையே நோக்கும் உணர்வு.' வேறுபிற துறைகளில் எவ்வளவுதான் அறிவாற்றல் பெற்றிருப்பினும், இறையுணர்வில்லாத அறிவு பயனிலது என்பது கருத்து. அஃது இல்லாதவர்களை மானிடர்கள் என உயர்திணையால் கூறவிரும்பாமல், 'மானிடங்காள்' என அஃறிணையால் கூறினார், இரண்டு எதிர்மறைகள் ஓர் உடன்பாட்டுப் பொருளை இனிது வற்புறுத்தி உணர்த்தும் என்னும் இலக்கண முறைமைபற்றி, ''உற்றபோது அன்றி உணரமாட்டீர்'' எனவும், ''அவனல்லால் தெய்வமில்லை'' எனவும் குறிப்பிட்டருளினார். இதனால் பிறதெய்வங்கள் இல்லை என ஆழ்வார் மறுக்கின்றார் அல்லர். எம்பெருமானால் படைக்கப்பட்டு, அவன் வழி நிற்கும் தேவதைகள் பல உள என்பதில் தடையில்லை. அடைக்கலமாகப் பற்றிப் போற்றி வழிபடத்தக்க சிறப்புடைய தெய்வம் வேறு இல்லை என்பதே கருத்து. அற்றம்—மறைபொருள், நுண்ணிய உட்கருத்து. ''கற்றினம் மேய்த்த எந்தை கழல்'' என்று சிறப்பித்ததினால் தாம் குறிப்பிடும் தெய்வமாகிய கண்ண பிரானின் எளிமையையும் பெருமையையும் இனிது விளக்கியருளினார். (9)

நாட்டினான் தெய்வம் எங்கும்
நல்லதோர் அருள்தன் னாலே;
காட்டினான் திருவ ரங்கம்
உய்பவர்க்கு உய்யும் வண்ணம்;
கேட்டிரே நம்பி மீர்காள்,
கெருட வாகனனும் நிற்கச்
சேட்டைதன் மடி யகத்துச்
செல்வம்பார்த் திருக்கின் றீரே.

பொழிப்புரை :

இருளன் மாடன் முதலிய தேவதைகளை, இராசசரும் தாமசரும் பற்றும்படி எல்லா இடங்களிலும் இறைவன் நிலை நிறுத்திவைத்தான்: உய்தி பெற விரும்புபவர் ஆகிய சாத்துவிகர்களுக்கு அவர்கள் உய்வதன் பொருட்டு, தனது சிறந்த ஒப்பற்ற அருளின் மிகுதியால் திருவரங்கமாகிய கோயிலைக் காண்பித்து அருளினான். நமக்கு ஒருகாலும் குறையில்லை என்று நினைத்துக்கொண்டு நம்பியிருப்பவர்களே, நான் சொல்வதைக் கேட்பீர்களா? கருடனை வாகனமாக உடையதிருமால் தலைசிறந்த தெய்வமாகத் திகழ, அவனை விட்டுப் பிற தெய்வங்களைச் சென்று பற்றுகின்ற நீங்கள், மூதேவியின் மடியினுள்ளே இருந்து செல்வம் பெறுவதற்குக் கருதியிருக்கின்றீர்கள் போலும்,

குறிப்புரை :

மனிதர்கள் தாமசம், இராசசம், சத்துவம் என்னும் மூன்று குணங்களை உடையவர்கள் ஆவர். ஒவ்வொருவரிடத்தில் ஒவ்வொரு குணம் மேலிட்டு நிற்கும். ஆதலின், அவரவர்களின் தகுதிக்கு ஏற்ப அவர்கள் வழிபட்டு உய்யும் பொருட்டுப் பலபல சிறு தேவதைகளை இறைவனே படைத்தருளினான். அரசனது பல்

வேறு அலுவலர்கள், நாட்டின் பல பகுதிகளிலும் பொதுமக்களிடத்தில் வரிப்பணத்தைத் தண்டல் செய்து அவற்றைத் தமக்கெல்லாம் தலைவனாகிய அரசர் பிரானிடத்தில் சேர்ப்பது போன்றது. இச்சிறு தேவதைகளின் தொழில். இதனை ''இறுக்கும் இறை இறுத்து உண்ண எவ்வுலகுக்கும் தன் மூர்த்தி நிறுத்தினான் தெய்வங்களாக அத்தெய்வ நாயகன்தானே'' என்றும்; ''அவரவர் விதிவழி அடைய நின்றனரே?'' என்றும் நம்மாழ்வார் அருளிச் செய்தல் காணலாம். ஆதலின் இருவரும் ''நாட்டினான் தெய்வம் எங்கும்'' என்று அருளிச் செய்தார். தாமசர்க்கும் இராசசர்க்கும் அவரவர் தகுதிக்கேற்ப வழிபட்டு உய்யும்படி சிறு தெய்வங்களைப் படைத்தருளினான் ஆயினும், சத்துவகுணமுடைய உத்தமர்கள் உய்யும்பொருட்டுத் தன் பேரருளால் அவர்களுக்குத் திருவரங்கம் கோயிலைக் காண்பித்தருளினான் என்பது, 'உய்பவர்க்கு உய்யும் வண்ணம் திருவரங்கம் காட்டினான்'' என்பதனால் குறிப்பிட்டார். இங்ஙனம் பக்குவமிலார்க்குத் தெய்வம் எங்கும் நாட்டியதும், பக்குவம் மிக்கார்க்குத் திருவரங்கம் காட்டியதும் ஆகிய இரண்டுமே, திருமாலின் பேரருட்டிறனே யாதலின், இருவர்க்குமே பொருந்தும்படி ''நல்லதோர் அருள் தன்னாலே'' என்னும் தொடரை இடைநிலைத் தீவகமாக அமைத்து அருளினர். ''தாப்பிசைப் பொருள்கோள்'' எனினும் அமையும். 'ஜ்யேஷ்டா' என்னும் வடசொல் 'சேட்டை' எனத் தமிழில் வந்தது. சேட்டை-மூதேவி. வழிபடத்தக்க பெருமையும் சிறப்பும் உடையவன் திருமாலே என்பதை உணர்த்தக் 'கருடவாகனன்' என்று கிளந்து குறிப்பிட்டார். திருமாலை வழிபட்டுப் பெறத் தகுந்த சிறந்த நலங்களையெல்லாம், பிற சிறு தெய்வங்களின் வாயிலாகப் பெறுதல் இயலாது என்பதனை வலியுறுத்த ''சேட்டை தன் மடியகத்துச் செல்வம் பார்த்திருக்கின்றீரே'' எனப் பரிவு தோன்ற வினவினார். வறுமை அடைவிப்பதையே தனக்கு இயல்பும் தொழிலுமாக உடைய மூதேவியின் வாயிலாகச் செல்வம் பெறக் கருதுதல் பொருந்தாமை போல, திருமாலால் பெறத் தகுந்த சிறந்த பேறுகளைப் பிற சிறு தெய்வங்களால் பெறுதல் கூடும் என நீவிர் கருதுவது பொருந்தாது என்பது கருத்து.

(10)

—ஆசிரியர்

திருச்சி மாவட்டம், லால்குடி வட்டம் மருதூர், கயிலாசநாதர் கோயிலில் அமைச்சர் மாண்புமிகு அன்பில் தருமலிங்கம் அவர்கள் தமிழ் அர்ச்சனை விழாவைத் துவைக்கி வைத்தல் (15-8-71).

திருமாலின் ஐந்து நிலைகள்

திருமால்நெறிச் சமய நூல்கள், அந்தர்யாமித்துவம் பரத்துவம் வியூகம் விபவம் அர்ச்சை என்னும் ஐந்து நிலைகளில், திருமால் விளங்குவதாகக் கூறுகின்றன. இறைவன் உயிர்களின் உள்ளத்திற் கலந்து மறைந்து நிற்கும் நிலை **அந்தர்யாமித்துவம்**; திருமகளும் தானுமாய் நித்தியர் முத்தர் சேவிக்கப் பரமபதத்தில் திருவோலக்கம் இருக்கும்நிலை **பரத்துவம்**; திருப்பாற்கடலில் யோக நித்திரை என்னும் அறிதுயில் கொண்டு உயிர்களைக் காத்தருளும் வகைகளைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கும் நிலை **வியூகம்**; கொடியோர்த் தெறுதலாகிய துஷ்ட நிக்கிரகமும், செவ்வியோர்க்கு அளித்தல் ஆகிய சிஷ்ட பரிபாலனமும் செய்தருளுவதற்காக இராமபிரான் கண்ணபிரான் முதலிய அவதாரங்களாகத் தோன்றியருளும் நிலை **விபவம்**; வழிபடும் அன்பர்களுக்கு எளிவந்து அருள் செய்வதன் பொருட்டுத் திருவரங்கம் திருமலை பெருமாள்கோயில் முதலிய திவ்விய தேசங்களிலும், அடியார்களின் திருமாளிகைகளிலும் எழுந்தருளி விளங்கும் நிலை **அர்ச்சை** எனப்படும்.

இவ் ஐந்தனுள், **பரத்துவ** நிலையை "ஆதியஞ் சோதி உரு" ''குழுமித் தேவர்குழாங்கள் கைதொழச் சோதி வெள்ளத்தினுள்ளே எழுவதோர் உரு" என்றும்; வியூக நிலையினைப் ''பாற்கடலில் பையத் துயின்ற பரமன்'' என்றும்; விபவ நிலையினை ''மீனெடு ஆமை கேழல் அரிகுறளாய் முன்னும் இராமனாய்த் தானாய், பின்னும் இராமனாய்த் தாமோதரனாய் கற்கியும் ஆனான்'' என்றும்; **அந்தர்யாமித்துவ** நிலையினை ''ஒண் சங்(கு) கதை வாள் ஆழியான் ஒருவன் அடியேன் உள்ளான்'' என்றும்; அர்ச்சை நிலையினைத் ''தமர் உகந்தது எவ்வுருவம் அவ்வுருவம் தானே, தமர் உகந்தது எப்பேர் மற்றப்பேர். தமருகந்து எவ்வண்ணம் சிந்தித்து இமையா திருப்பரே அவ்வண்ணம் ஆழியான் ஆம்" ''பின் ஆனார் வணங்கும் சோதி'' என்றும்; ஆங்காங்கே ஆழ்வார்கள் தம் அருளிச் செயல்களில் குறிப்பிட்டுள்ளனர்.

(1) திருமால், பரம பதத்தில், நித்தியரும் முத்தரும் தமது அனுபவத்திற்குப் போக்கு வீடாகப் பாடும் சாமகானம் கேட்பராதலின், பரத்துவநிலை **'பாட்டுக் கேட்கும் இடம்'**.

(2) அசுரர்களாலும் இராக்கதர்களாலும் துன்புறுத்தி நலியப்படுபவர்களான பிரமன் முதலிய தேவர்களைக் காத்தருள்வதற்கு, அவர்களின் துயரஒலி எங்கிருந்து எப்போது வருமோ என்று செவி கொடுத்துக் கொண்டு, திருமால் திருப்பாற்கடலில் அறிதுயிலில் அமர்ந்திருக்கும் வியூக நிலை, **'கூப்பீடு கேட்கும் இடம்'**.

(3) அடியவர்களின் துயர ஒலியைக் கேட்ட அளவில் துடித்துக் கொண்டு எழுந்திருந்து, திருப்பாற்கடலினின்று ஆதிசேடன் ஆகிய கட்டிலைவிட்டு நீங்கி, இவ்வுலகத்திற்கு இழிந்து வந்து அயோத்தி மதுரை முதலிய இடங்களில் திருமால் அவதரிக்கும் விபவநிலை **'குதித்தஇடம்'**.

(4) தாம் நினைத்ததனைத் தலைக்கட்டிக் கொள்ளும் வகையில் 'இனிப் புறம்போகேன் புறம்போகல் ஒட்டேனே' என்று இட்ட அடி பெயரவிடாமல், அடியார்கள் தன்னைக் கட்டி

வளைத்துக் கொள்ளும்படி எளிவந்து உருவத் திருமேனிகளில் திருமால் உறைகின்ற அர்ச்சை நிலை, **'வளைத்த இடம்'**.

(5) அடியார்களின் இதய கமலத்திலே பிரிவற எழுந்தருளியிருந்து, திருமால், தான் உகந்தார்க்குத் தன் அழகினைக் காட்டி நுகரச் செய்து உண்பிக்கும் அந்தர்யாமித்துவநிலை **'ஊட்டும் இடம்'** என்று இவ்வைந்து நிலைகளை யும் பற்றித் திருமால் நெறிச் சான்றோர்கள், இனிய சுவை கெழும விளக்கியருளியிருக்கின் றனர்.

(1) உயிர்களின் உள்ளத்தில் இருந்து வைத்தும், கண்டுதொழ வேண்டும் என்று விரும்புபவர்களுக்குக் கண்களால் காண இயலா மல், யோக நெறி நின்று பயின்று பெரிதும் முயன்றே காண வேண்டும்படி இருத்தலின், **அந்தர்யாமித்துவம்**, நீர் வேட்கை கொண்டவன் வேறு இடங்களுக்குச் செல்ல வேண்டாமல் தான் நிற்கும் இடத்திலே நீர் இருந்ததா யினும், கொட்டும் குந்தாலியும் கொண்டு அகழ்ந்தால் அன்றிக் கிடைக்காதபடி தரைக்கு அருகில் ஆழ்ந்துள்ள **தண்ணீர்** (பூகத ஜலம்) போல்வது.

(2) கண்டு பற்றித் தொழ விரும்புபவர்க்கு அணுக இயலாமல் நிலவுலகமாகிய லீலா விபூதிக்கு அப்பாற்பட்டிருத்தலின் **பரத்துவம்**, நீர்வேட்கை கொண்டவனுக்கு அண்டத்திற்கு அப்பால் புறம்பே பெருகிக் கிடக்கின்ற நீர் (ஆவரண ஜலம்) ஒப்பது.

(3) கண்டு பற்ற வேண்டும் என்று ஆசைப்படுபவர்க்கு ''பாலாழிநீ கிடக்கும் பண் பையாம் கேட்டேயும்'' என்கிறபடி கேட்டிருக் கும் அத்தனையே அன்றிச், சென்று காண அரிய நிலையிலுள்ள **வியூகம்**, இவ்வுலகத்துக்குள்ளேயே இருப்பினும் நீர் வேட்கை கொண்டவர்க்குச் சென்று அடையமுடியாத திருப்பாற்கடல் நிகர்ப்பது.

(4) நிலவுலகில் தோன்றிக் கால் தரை சோய நடந்தும், அவ்வக்காலத்தில் வாழ்ந்த வர்கள் மட்டுமே பயன்கொள்ளத்தக்கதாய், இக்காலத்திலுள்ளோர் கிட்ட இயலாத **விபவம்** மிக அருகில் இருந்தும் வெள்ளமாக ஓடுங்காலத் தில் இருந்தவர்கள் மட்டுமே பருகலாம்படி யாய், வற்றிப்போன காலத்தில் இருப்பவர்க் குப் பயன் படாத பெருக்காறு போன்றது.

(5) முற்கூறிய நிலைகளைப் போல அரிய தும் சேயதுமாகாது, எல்லோர்க்கும் எளியதும் இனியதுமாய் அனைவர் கண்ணுக்கும் புலப்பட்டு நின்று, கோயில்களிலும் இல்லங்களிலும் திருமால் எழுந்தருளி நிற்கும் **அர்ச்சை நிலை**, முற்கூறிய பலவகை நீர்களைப் போலாமல், எளிதாகச் சென்று இனிதாகப் பருகலாம்படி தேங்கி நிற்கும் மடுவின் நீர் போல்வது.

இனி வேறொரு வகையிலும், திருமாலின் இவ் ஐந்து நிலைகளின் இயல்பினைக் குறிப்பிட லாம். பரத்துவநிலை, எட்டாதவானத்தில்உள்ள **மேகநீர்** (ஜீமூதஜலம்); வியூக நிலை உண்ணற் கியலாத **கடல்நீர்** (சாகரசலிலம்); விபவ நிலை ஓடிக்கழிந்த **ஆற்றுநீர்** *(சரித்சலிலம்)*; அந்தர் யாமித்துவநிலை பெருகக் கூடிய **கிணற்றுநீர்** (கூபபயஸ்); அர்ச்சை நிலை அள்ளி எடுத்து உண்ணும்படி நிறைந்து நிற்கும் **குளத்துநீர்** (வாபீபயஸ்) என்றும், பெரியோர்கள் இவற் றின் இயல்பினை விளக்கியருளியிருக்கின்றனர்.

இங்ஙனம் பெரியோர்களால் விளக்கப் பெற்றிருக்கும் திருமாலின் ஐவகை நிலைகளை யும் பற்றி,

''விண்மீது இருப்பாய்; மலைமேல்
நிற்பாய்; கடல் சேர்ப்பாய்;
மண்மீது உழல்வாய்; இவற்றுள்
எங்கும் மறைந்து உறைவாய்;
எண்மீது இயன்ற புற
அண்டத்தாய்; எனது ஆவி
உண்மீது ஆடி உருக்
காட்டாதே ஒளிப்பாயோ?''

என்று நம்மாழ்வார், தம்முடைய திருவாய் மொழிப் பாசுரம் ஒன்றில், அழகுறக் குறிப் பிட்டருளியிருக்கின்றார்.

இதன்கண் 'விண்மீதிருப்பாய்' என்றது பரத்துவநிலை; 'கடல் சேர்ப்பாய்' என்றது வியூக நிலை. 'மண்மீது உழல்வாய்' என்றது விபவநிலை. 'எங்கும் மறைந்தாய்' என்பது அந்தர்யாமித்துவ நிலை, 'மலைமேல் நிற்பாய்' என்பது அர்ச்சை நிலை என்பவற்றை, முறையே குறித்தல் உணர்ந்து இன்புற்று மகிழலாம்.

—ஆசிரியர்.

8 2 ms 211, N58
158887
(71.141)

பிராட்டியின் பிரிவும், பரிவும்

பெருமாளைப் பிரியா இயல்பினள் பிராட்டி! ''அகல கில்லேன் இறையும் என்று அலர்மேல் மங்கை உறைமார்பா'' எனவரும் பாசுரத்தால் இவ்வுண்மை விளங்கும். இங்ஙனம், பெருமாளை இறையும் பிரியா இயல்பினள் பிராட்டி என்பது உண்மையே யாயினும், பிராட்டி மிதிலையில் சனக மன்னனின் திருமகளாகத் தோன்றிப், பெருமாளை மூன்று முறை பிரிந்து, தனக்கே உரிய மூன்று சிறந்த பெரும் பண்புகளை வெளியிட்டருளினள்.

உயிர்களின் குற்றங்களைக் கருதிப் பெருமாள் அவற்றின்மேல் சீற்றங் கொள்ளாதபடி, புருஷகாரம் என்னும் பரிந்துரை செய்து, பெருமாளை உயிர்களுக்கு அருள்செய்து காத்தாட் கொள்ளும்படி புரிவது, பிராட்டியின் இயல்பு. பரிந்துரை செய்தலாகிய இப்புருஷகாரம் புரிவதற்கு இன்றியமையாத குணங்கள் மூன்று. அவை முறையே கிருபை, பாரதந்திரியம், அநந்யார்கத்துவம் என்பவையாகும். கிருபை என்பது, பிறர்படும் துக்கத்தைப் பொறுக்கமாட்டாமை. பாரதந்திரியம் என்பது, தனக்கென ஒரு சுதந்திரமும் இன்றிப் பரமபுருடனாகிய இறைவனுக்கே உரிமைப்படுதல். அநந்யார்கத்துவம் என்பது. இறைவன் ஒருவனுக்கேயன்றி வேறு எவர்க்கும் உரிமையாகாமை. இம்மூன்று குணங்களையும் வெளிப்படுத்துவதன் பொருட்டே, சீதைப்பிராட்டி சக்கரவர்த்தித் திருமகன் ஆகிய இராமபிரானை மும்முறை பிரிந்தருளினள்.

(1) சீதைப்பிராட்டி, 'இராவணன் கவர்ந்து சென்று பிரித்தான்' என்ற ஒரு காரணத்தால், முதலில் பெருமாளைப் பிரிந்து, இலங்கையில் அசோகவனத்தில் சிறையிருக்க நேர்ந்தனள். அதனால் பிராட்டியின் கிருபை என்னும் குணம் வெளிப்பட்டது; தேவமாதர்களின் சிறையை விடுவிப்பதற்காகத்தான் சிறையில் இருந்தமையாலும்; அச்சிறை யிருப்பிலே தன்னை இரவும் பகலும் துன்புறுத்திய அரக்கியர்கள், இராவணன் தோல்வியடைந்ததாகவும், பெருமாள் வெற்றி பெற்றதாகவும், திரிசடை என்பவள் கனுக்கண்டதைப் பற்றி மிகவும் அஞ்சி நடுங்கியபொழுது, பிராட்டி, அவர்களை நோக்கி ''நான் இருக்க நீங்கள் அஞ்சுவதென்? அஞ்சவேண்டா'' என்று அபயம் அளித்தமையாலும்; அது வெறும் வாய்ச் சொல்லாய் ஒழியாமல், இராவண வதத்திற்குப் பின் தனக்கு நற்செய்தி கூறவந்த ஆஞ்சநேயன், அந்த அரக்கியர்களை ஒறுத்தி நலிவு செய்ய முற்பட, அவனோடு மன்றாடி அரக்கியர்களுக்குத் தீங்கு ஏதும் நேராதபடி பாதுகாத்து அருளியதாலும்; பிராட்டியின் கிருபை என்னும் பேரருட்டிறன் அவளது முதற் பிரிவில் வெளியாயிற்று.

(2) இராமபிரான் உலக மக்களின் பழியுரைக்கு அஞ்சிப் பிராட்டியைக் காட்டிற்குக் கொண்டுபோய் விட்டுவிட்டு வரும்படி, இலக்குவனிடம் பணித்தான். அப்போது பிராட்டிக்கு இரண்டாவது பிரிவு நேர்ந்தது. பெரு

மாள் தன்னை மணந்து அந்தப்புரத்திலே வைத்து நலம் செய்தபோதும், உலகவரின் பழிக்கு அஞ்சிக் காட்டிற்கு அனுப்பிக்கைவிட்ட போதும், எத்தகைய வேறுபாடு மின்றி, பிராட்டி அவருடைய திருவுள்ளத்தையே உவந்து கடைப்பிடித்து ஒழுகினள். பெருமாளின் நியமனத்தின்படி, இலக்குவன் பிராட்டியைத் தேரில் ஏற்றுக்கொண்டுபோய் கங்கைக் கரையை அடைந்ததும், தான் பிராட்டியைக் காட்டுக்கு அழைத்துக்கொண்டு வந்த காரணத்தை மிகவும் மனம் கலங்கி வருத்தத்துடன் விண்ணப்பம் செய்தான். பிராட்டி அதைக் கேட்டுக் கதறி அழுது, ''இலக்குவனே இஃது எனக்குப் பொறுக்கத் தக்க துயரமன்று; யான் இப்போதே இக் கங்கையில் வீழ்ந்து உயிரை ஒழித்து விடலாம்; அங்ஙனம் செய்யின். அது உயர் குலத்தில் தோன்றிய பெருமாளுக்கு ஒரு பெரிய பழிப்பாகும். கருவுற்றுள்ள யான் இப்பொழுதே உயிரைத் துறந்தால் குலமரபு அழிந்து, இரகுவம்சம் பாழாகிப்போம். மகப்பேறு நிகழ்ந்த பின் உயிர் துறந்தால், 'குற்றம் உள்ளவன் ஆகையால் அன்றோ, தன்னைத் தானே முடித்துக்கொண்டாள்' என்று உலகம் பழிப்புரை முழக்கும் என்று பலவாறாகச் சொல்லி, உயிரை மாய்த்துக் கொள்ள வேண்டிய சமயத்தும், அது செய்யமாட்டாமல் பெருமாள் திருவுள்ளத்தையே கடைப்பிடித்துப் பின் சென்று, தன் உயிரைத் தாங்கிக் கொண்டிருந்தாள். இதனால் பரம புருடனுக்கு உரிமைப் படுதலாகிய பாரதந்திரியம் என்னும் பிராட்டியின் பண்பு வெளிப்பட்டது.

(3) பிராட்டி மூன்றாம் முறையும் பெருமானைப் பிரிய நேர்ந்தது. பெருமாள் முன்னிலையில் பிராட்டி வந்திருக்கும்போதே பிரிந்து, தான் தன் பிறந்தகமாகிய பூமிக்குள் புக நேர்ந்தது. அப்போது பிராட்டி கையும் அஞ்சலியுமாய்க் கவிழ்தலை இட்டுக்கொண்டு நின்று, ''அடியேன் பெருமானையன்றி மற்று எவரையும் மனத்தினாலும் சிந்தியாதவளாயின், இப்பூமிப் பிராட்டி எனக்கு இடங்கொடுக்கக் கடவள்'' என்று பற்பல சொல்லிச் சூளுறவு செய்தாள். அவ்வளவில் பூமிக்குள்ளிருந்து ஒரு சிறந்த திவ்விய ஆசனம் வந்து தோன்றிற்று அதன் கண், பிராட்டியைத் தன் இரண்டு கையாலும் எடுத்துக்கொண்டு போய்ப் பூமிப்பிராட்டி வைத்தாள். அவ்வாசனத்தில் வீற்றிருந்தவாறே பிராட்டி பூதலத்தினுள் புகுந்தாள். அதுகண்டு விண்ணவர்கள் பிராட்டியின்மீது பூமாரி பொழிந்து புகழ்ந்தனர் என்று உத்தர ராமாயணம் கூறுகின்றது. பிராட்டியின் இப்பிரிவால், அவளது அநந்யார்கத்துவம் என்னும் பரமபுருடனையன்றி வேறு எவர்க்கும் அடிமைப் படாத பெற்றிமை இனிது விளங்குகின்றது

இம்மூவகைக் குணங்களினாலும், புருஷகார இயல்பும், அதனைச் சேதனர்களின் பொருட்டுப் பெருமாளிடத்தில் செய்தருளும் பிராட்டியின் பரிவும், நன்கினிது விளங்குதல் காணலாம்.

—ஆசிரியர்



திருச்சி மாவட்டம், லால்குடி வட்டம், மருதூர், கயிலாசநாதர்கோயில் அமைச்சர் மாண்புமிகு அன்பில் தருமலிங்கம் அவர்கள் தமிழ் அர்ச்சனை விழாவைத் துவக்கி வைத்தல் (15—8—71).

நம்பெருமாள் திருவுருவநலம்

முன்னுரை :

நாராயணன் என்னும் நலம்தரும் சொல்லுக்குப் பலபல பொருள்கள் உண்டு. ஆங்காங்கே, அவ்வவ்விடத்திற்கு ஏற்றபெற்றியில் அச்சொல்லுக்குப் பெரியோர்கள் பலவகைப் பொருள்களைப் பணிப்பர். ''புருஷகார பலத்தாலே சுவாதந்தரியம் தலைசாய்ந்தால், தலையெடுக்கும் குணங்களைச் சொல்லுகிறது, நாராயணபதம். அவையாவன வாத்சல்யமும், சுவாமித்துவமும் சௌசீல்யமும் சௌலப்பியமும், ஞானமும் சக்தியும் என்பன'' என்று பிள்ளை லோகாசாரியர், தாம் இயற்றிய முமுட்சுப்படி என்னும் நூலில் அருளிச் செய்துள்ளார்.

ஆறுகுணங்கள் :

(1) **வாத்சல்யம்**: பசு தன் கன்றினிடத்திலே கொண்டிருக்கும் பரிவு. பசுவானது தான் ஈன்ற கன்றினுடைய உடம்பின் மீதிருககும் அழுக்காகிய வழும்பினையும் விரும்பியுண்ணும்; தன்பாலை உண்ணக் கொடுத்துக் கன்றை வளர்க்கும். அக்கன்றுக்கு ஊறு செய்பவர்களைத் தன் கொம்பாலும் குளம்பாலும் எதிர்த்து, தன் கன்றுக்கு யாதொரு ஊறும் நேராதபடி பாதுகாக்கும். அதுபோல இறைவனும் அடியவர்களின் குற்றங்களை ''என்னடியார் அது செய்யார் செய்தாரேல் நன்று செய்தார்'' என்று விரும்பி ஏற்று மகிழ்வான். அவர்களுக்குத் தீங்கு ஏதும் நேராமல் அவர்களைப் பெருங் கருணையுடன் பாதுகாத்து அருள்வான். இறைவனின் இவ்வியல்பே வாத்சல்யம் எனப்படும்.

(2) **சுவாமித்துவம்**: உடைமையை உடையவனாய் இருக்கும் இருப்பு, சுவாமித்துவம் எனப்படும். சேதனன் ஆகிய உயிர் தன்னைப் புறக்கணித்து விமுகனாக இருப்பினும், அவனைக் கைவிட்டொழிக்க மனம் வாராமல் எப்படியாயினும் ஆட்கொண்டு காத்தருள்தற்கே விரும்பி எதிர் சூழல் புக்குத் திரிவதற்கு உரியபடி உயிர்களுக்கும் இறைவனுக்குமுள்ள உறவு முறைமை சுவாமித்துவம் ஆகும்.

(3) **சௌசீல்யம்**: தான் உயர்வற உயர்ந்தவனாய் இருப்பினும் எத்துணை இழிந்தவரோடும் யாதொரு வேறுபாடுமின்றி ஒருங்கே மேல் விழுந்து புரையறக் கலந்து பழகித் தண்ணளி புரியும் பண்பு.

(4) **சௌலப்பியம்**: எத்துணையும் உயர்ந்த இறைவன் எத்துணையும் எளிவந்து, யாவரும் சுலபமாகத் தன்னைப் பற்றிக்கொள்ளும்படி தன் வடிவைக் கண்ணுக்கு இலக்காக்கும் எளிமைத் தன்மை.

(5) **ஞானம்**: உயிர்கள் கீழ் நின்ற நிலையையும், அவைகளை மேல் உய்த்துக் காத்தற்குரிய வழிவகைகளையும் அறிந்திருக்கும் தன்மை.

(6) **சக்தி**: அங்ஙனம் தான் அறிந்தபடி சேதனர்களின் குற்றங்களையும் இழிவுகளையும் போக்கி, அவற்றிற்குத் தன்னைக்கொடுத்து நலம் செய்தற்குரிய பேராற்றல். நாராயணன் என்னும் நலந்தரும் சொல் இந்த ஆறு பெரும் பண்புகளையும் சிறப்பாகக் குறிப்பிட்டுணர்த்துகின்றது.

நம்பெருமாள் திருவுருவம் :

சிறந்த இந்த ஆறு தெய்விகப் பண்புகளும் திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள நம் பெருமாள் திருவுருவ அமைப்பில், தெற்றென விளங்குகின்றன என்று பெரியோர்கள் கூறுவர். பெருமாள் தமது திருக்கைகளிலே முறையே தரித்துக்கொண்டுள்ள திருவாழி திருச்சங்கு என்னும் திவ்விய ஆயுதங்கள் அவர்தம் ஞானம் சக்தி என்னும் பண்புகளை உணர்த்துகின்றன. அடியார்களை நோக்கி அஞ்சேல் என்று அருளிச் செய்யும் நிலையிலுள்ள அபய அஸ்தம் என்னும் திருக்கை, அவரது வாத்சல்யம் என்னும் பண்பைக் குறிக்கும். அவரது திருமுடி, அனைத்திற்கும் அனைவருக்கும் தலைமை நிலையில் விளங்கும் அவர்தம் சுவாமித்துவத்தைப் புலப்படுத்தும். அவர்தம் திருமுகமும் புன்முறுவலும், அவர் தம் சௌசீல்யத்தன்மையைச் சுட்டும். ஒளிமிக்க அழகிய தாமரை மலர்ப்பீடத்தில், அவர்தம் திருவடிகளை ஊன்றி நிற்கும் நிலை, அவருடைய எளிமை என்னும் சௌலப்பியத் தன்மையைச் சாலவும் விளக்கும்.

முடிவுரை :

இங்ஙனம் ஞானம் சக்தி வாத்சல்யம் சுவாமித்துவம் சௌசீல்யம் சௌலப்பியம் என்னும் ஆறு திருக்குணங்களும், ஒருங்கே அழகுற அமைந்து விளங்கும் திருவுருவைக்கொண்டு திகழும் திருவரங்கம் நம்பெருமாள் திருவடிகளை நாம் அனைவரும் அன்புடன் வழிபட்டு இன்புற்று வாழ முயல்வோமாக.

—ஆசிரியர்

தேவாரத்தில் நவராத்திரிவிழாத் திருப்பதிகம்

(மூலமும் உரையும்)

விழாக்கள் ஒருநாட்டின் மக்களுடைய மன மகிழ்ச்சிக்கும், செல்வச் செழிப்பிற்கும், கலை நாகரிகப் பண்பாடுகளின் வளர்ச்சிக்கும் காரண மாக அமைந்து, பெருந்துணை புரிகின்றன. ஆதலின், நம் சமயச் சான்றோர்கள் பலவகை விழாக்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித் தனர்.

திருஞான சம்பந்தப்பெருமான், தாம் அருளிச்செய்த திருமயிலைத் தேவாரத் திருப்பதி கத்தில், அங்கு மாதந்தோறும் நடைபெறு கின்ற விழாக்களின் சிறப்பினைக் குறிப்பிட்டு, சிறப்பித்துப் பாடியிருத்தல் காணலாம். ஆயி னும் அத்திருப்பதிகத்தின் பாடல்களிலோ பிற வற்றிலோ, நவராத்திரி விழாவைப் பற்றிய குறிப் பெதுவும் கிடைக்கக் காண்கிலோம். எனினும் கும்பகோணத்திற்குத் தென்கிழக்கே மூன்று கல் தொலைவிலுள்ள திருச்சிவபுரம் என்னும் தலத்தைப் பற்றிய அவர்தம் தேவாரத் திருப் பதிகத்தில், நவராத்திரி விழா நாட்களில் நாம் போற்றிவழிபடும் கலைமகள் திருமகள் சயமகள் பற்றிய குறிப்புக்கள் காணப்பெறுகின்றன. ஆதலின் இத்திருப்பதிகத்தை ஒருவகையில் நவராத்திரி விழாவுக்குரியதாகக்கொண்டு, நாம் அன்புடன் ஓதிப் போற்றி மகிழலாம். இப்பதி கத்தை ஓதி வழிபடுதலால், கலைமகள் திருமகள் சயமகள் ஆகியோரின் அருள் நலங்களைப் பெற்று, நாம் நலமுற வாழலாம் என்பது திண்ணம்.

புவம்வளி கனல்புனல் புவிகலை உரைமறை
 திரிகுணம் அமர்நெறி
திவம்மலி தருசுரர் முதலியர் திகழ்தரும்
 உயிர் அவை யவைதம
பவம்மலி தொழிலது நினைவொடு பதுமநல்
 மலரது மருவிய
சிவனது சிவபுரம் நினைபவர் செழுநில
 னினில்நிலை பெறுவரே

பொழிப்புரை :

வான் காற்று தீ நீர் நிலம் ஆகிய ஐம்பூதங் கள், கலைகள், நூல்கள், மறைகள், முக்குணங் கள், விரும்பப்படும் நன்னெறிகள், துறக்க உலகம், அங்கு வாழும் தேவர்கள், முதலாக மற்றும் உள்ள எத்தனையோ பற்பல பொருள் கள் உயிரினங்கள் ஆகியவற்றை, சிவபெரு மான் படைத்தருள்கின்றான். அப்படைப்புத் தொழில் நிகழ்தற்பொருட்டுத் தாமரை மலரில் அவனே பிரமதேவனைப் பொருந்தி, 'இங்ஙனம் ஆகுக' என்னும் நினைவுடன் வீற்றிருந்தருள்

கின்ருன். அத்தகைய சிவபெருமானுக்குரிய சிவபுரம் என்னும் தலத்தினை நினைந்து வணங்குபவர்கள், இவ்வுலகில் செழிப்பான நிலையில் நிலைபெற்று வாழ்வார்கள்.

குறிப்புரை :

புவம்—வான், ஆகாயம். திரிகுணம்—சத்துவம் இராசதம் தாமதம் என்னும் மூவகைக் குணங்கள். அமர்நெறி—விரும்பத்தக்க நன்னெறிகள். திவம்—தெய்வ உலகம், சுவர்க்கலோகம். சுரர்—தேவர்கள். பவம்—பிறப்பு. பதுமம்—தாமரை. சிவபெருமானே பிரமனுக விளங்கி உலகங்களைப் படைத்தருள்கின்ருன் என்பது இப்பாடலின் கருத்து. இது ''பவம் மலி தொழிலது நினைவொடு பதும நல் மலரது மருவிய சிவன்'' எனவரும் தொடரால் இனிது புலனும். (1)

மலைபல வளர்தரு புவியிடை
மறைதரு வழிமலி மனிதர்கள்
நிலைமலி சுரர்முதல் உலகுகள்
நிலைபெறு வகைநினை வொடுமிகும்
அலைகடல் நடுஅறி துயில்அமர்
அரியுரு இயல்பரன் உறைபதி
சிலைமலி மதிள்சிவ புரம்நினை
பவர்திரு மகளொடு திகழ்வரே

பொழிப்புரை :

மலைகள் பல வளர்ந்தோங்கி யிருக்கின்ற இந்நிலவுலகத்தில், மறைகள் கூறுகின்ற வழியைக் கடைப்பிடித்து ஒழுகிவரும் மனிதர்கள் வாழுகின்ற மண்ணுலகமும், நிலைபேறுடைய தேவர் முதலியவர்கள் வாழுகின்ற விண்ணுலகங்களும், நிலைபெறும் வகையினைக் கருதுகின்ற நினைவுடன், மிகுந்த அலைகள் வீசுகின்ற திருப்பாற்கடலின் நடுவில், யோக நித்திரையாகிய அறிதுயிலில் பொருந்தி நிற்கும் திருமாலின் இயல்பினை மேற்கொண்டுள்ள, சிவபெருமான் உறைகின்ற பதியாகிய, உறுதிமிக்க கற்களால் அமைந்த மதில்களையுடைய சிவபுரம் என்னும் தலத்தை, நினைந்து வணங்குபவர்கள், திருமகளின் அருளைப் பெற்றுச் செல்வ வளத்துடன் சிறப்புற்று வாழ்வார்கள்.

குறிப்புரை :

இப்பாடல் சிவபெருமானே திருமாலாக விளங்கி உலகுயிர்களைக் காத்தருள்கின்ருன் என்னும் கருத்துடையது. ''அலைகடல் நடு அறிதுயில் அமர் அரிஉரு இயல்பரன்'' என்பதனுல் இது தெளியப்படும். அறிதுயில்—யோக நித்திரை. அரிஉரு—திருமாலின் உருவம். (2)

பழுதில கடல்புடை தழுவிய படிமுத
லியஉல குகள்மலி
குழுவிய சுரர்பிறர் மனிதர்கள் குலம்மலி
தரும்உயிர் அவையவை
முழுவதும் அழிவகை நினைவொடு முதல்உரு
இயல்பரன் உறைபதி
செழுமணி அணிசிவ புரநகர் தொழுமவர்
புகழ்மிகும் உலகிலே

பொழிப்புரை :

குற்றம் இலவாகிய கடல்கள், நாற்புறத்தும் ஆடைபோலத் தழுவியுள்ள, நிலவுலகம் முதலாகிய பலப்பல உலகுகளில், வானவர் தானவர் மனிதர்கள் மற்றுமுள்ள சிற்றுயிர்கள் ஆகிய குலங்களில் மலிந்து வாழும் உயிர்த் தொகுதிகள் முழுவதும், ஊழிக்காலத்தில் ஒடுங்கி அழியும்வகையில் கருதுகின்ற நினைவுடன், உருத்திரனுகிய முதல்வனின் உருவை மேற்கொள்ளுகின்ற சிவபெருமான் உறைகின்ற பதியாகிய, செழுமை மிக்க மணிகள் அணிசெய்கின்ற சிவபுரம் என்னும் தலத்தைத் தொழுது வணங்குபவர்களின் புகழ், உலகிற் பெரிதும் மிக்குப் பரவி ஓங்கி நிற்கும்.

குறிப்புரை :

இப்பாடல் சிவபெருமானே உருத்திரனுக விளங்கிப் பிரளய காலத்தில் உலகுயிர்களை அழித்து ஒடுக்கி அருள்கின்ருன் என்பதனை உணர்த்துகின்றது. ''உயிர் அவையவை முழுவதும் அழிவகை நினைவொடு முதல் உரு இயல்பரன்'' என்பதனுல் இவ்வுண்மை புலனும். பழுது—குற்றம். படி—உலகம். முதல்—உருத்திரன். முதல் உரு இயல்பரன்—உருத்திரனின் வடிவை மேற்கொள்ளுகின்ற சிவபெருமான். (3)

நறைமலி தரும்அள றொடும்முகை
நகுமலர் புகைமிகு வளர்ஒளி
நிறைபுனல் கொடுதனை நினைவொடு
நியதமும் வழிபடும் அடியவர்
குறைவில பதம்அணை தரஅருள்
குணம்உடை இறைஉறை வனபதி
சிறைபுனல் அமர்சிவ புரம்அது
நினைபவர் செயமகள் தலைவரே

பொழிப்புரை :

நறுமணம் மிகுந்த சந்தனக் கலவையுடன், அரும்பு, நன்கு அலர்ந்த மலர், மணங்கமழும் அகிற்புகை, சுடர்விட்டு எரியும் விளக்கு, தூய்மை நிறைந்த நீர் ஆகியவற்றைக்கொண்டு தன்னை அன்புடன் நாள்தோறும் வழிபடுகின்ற அடியவர்கள், குறைவில்லாத பல பதவி நலங்களை அடையும்படி அருள்புரிகின்ற, குணமுடையவனாகிய சிவபெருமான் உறைகின்ற அழகிய பதியாகிய, நீர்வளம் பொருந்திய சிவ புரம் என்னும் தலத்தை நினைந்து வணங்குபவர்கள், வெற்றித் திருமகளின் அருளைப் பெற்றுத், தலைவர்களாகச் சிறப்புற்று வாழ்வார்கள்.

குறிப்புரை :

சிவபெருமான் தன்னை வழிபடும் அடியார்களுக்குச் சிறந்த பதவிகளையும் நலங்களையும் அருள்கின்ற குணமுடையவர். ''வழிபடும் அடியவர் குறைவு இலபதம் அணைதர அருள் குணமுடை இறை'' என்னும் பகுதியால் இவ்வுண்மை வலியுறுத்தப்பெற்றது. வழிபாடு நாள்தோறும் ஒன்றிய நினைவுடன் அன்பு மீக்கூர நிறைநீர் சந்தனம் நறுமலர் தூபதீபம் முதலியனவற்றுடன் நிகழ்த்தப்படுதல் வேண்டும் என்பது, முதல் இரண்டு அடிகளாற் புலனாகும். நறை—மணம், அளறு = கலவை. சந்தனக் குழம்பு, முகை-அரும்பு. புகை—தூபம். ஒளி—தீபம். நியதம்—நாள்தோறும். சிறை—வேலி, கரை; அணை. (4)

சினம்மலி அறுபகை மிகுபொறி
சிதைதரு வகைவளி நிறுவிய
மனன்உணர் வொடுமலர் மிசைஎழு
தருபொருள் நியதமும் உணர்பவர்
தனதுஎழில் உருவது கொடுஅடை
தகுபரன் உறைவது நகர்மதிள்
கனம்மரு வியசிவ புரம்நினை
பவர்கலை மகள்தர நிகழ்வரே

பொழிப்புரை :

கொடுமைமிக்க சினம் முதலிய ஆறு பகைகளும், வலிமைமிக்க ஐம்பொறிகளும், தம்முடைய தீமைகள் சிதையும்படி, உயிர் மூச்சினை முறைப்படுத்தி நிலைபெறுவித்த மன உணர்வுடன், தலைஉச்சியிற் பரந்து நிற்கும் ஆயிர இதழ்த்தாமரை மலரின்மேல் எழுந்தருளுகின்ற பரம் பொருளாகிய தன்னை, நாள்தோறும் முறையுணர்ந்து வழிபடுபவர்கள், தன்னுடைய அழகிய உருவத்தினைக் கொண்டு, தன்னை அடையத் தக்க நிலையில் விளங்குகின்ற சிவபெருமான் உறைகின்ற, மேகங்கள் பொருந்திய மதில்கள் சூழ்ந்த நகரமாகிய சிவபுரம் என்னும் தலத்தை நினைத்து வணங்குபவர்கள், கலைகளுக்கெல்லாம் தெய்வமாகிய அம்பிகை, அருளை வழங்கச் சிறப்புற்று வாழ்வார்கள்.

குறிப்புரை :

காமம் குரோதம் லோபம் மோகம் மதம் மார்ச்சரியம் என்னும் ஆறும், நமக்குப் பல கேடுகளை விளைவித்தலின், அவைகள் அறுபகை (அரிஷட்வர்க்கம்) எனப்படும். இவ்வாறனுள்ளும் மிக்க தீங்கு பயப்பது சினம் ஆதலின், அதனை விதந்து 'சினம்மலி அறுபகை' என்றார். ''சினம் முதல் அகற்றி வாழும் செயல் அறம் ஆனல்'' என்னும் சிவஞான சித்தியார் பாடல் இங்கு நினையற்பாலது. மெய்வாய் கண் மூக்கு செவி என்னும் ஐம்பொறிகள், நம்வழி வராமல் நம்மைத் தம் வழி ஈர்த்து நிற்கும் வலிமை மிக்கனவாதலின் 'மிகு பொறி' என்றார். 'ஐவரை அகத்தே வைத்தீர் அவர்களே வலியர் சாலச் செய்வதொன்றறிய மாட்டேன்'' என்னும் திருநாவுக்கரசர் பாடல் இங்குச் சிந்திக்கத் தகும். அறுபகைகளையும் ஐம்பொறிகளையும், 'ஏற்றி இறக்கி இருகாலும் பூரிக்கும் காற்றைப் பிடிக்கும் கணக்கு' ஆகிய யோகப்பயிற்சியாலேயே வெல்லுதல் கூடும் ஆதலின், ''சிதைதருவகை வளி நிறுவிய மனனுணர்வு'' என்று அருளிச் செய்தார்,

இறைவனைப் புறத்தே ஒரு வடிவின் கண் வைத்து வழிபடுவதிலும், அவ்வழி பாட்டுப் பயிற்சியின் மிகுதியினால், அகத்தே ஒளிவடிவ மாக இறைவனைக் கண்டு தொழுதல் மிகவும் சிறப்புடையதாகும். இங்ஙனம் அகவழிபாடு புரிபவர்களுக்கு, யோகநெறியால் தலையுச்சியின் மேல் பரவி நிற்கும் திருவருட் பரவெளியாகிய ஆயிர இதழ்த் தாமரை மலரின்கண் சிவபெரு மான் காட்சி தந்தருள்வன். யோகநெறிப் பயிற்சி கைவந்தோர், அக்காட்சியை இடை யறாது கண்டு முறையே வழிபட்டு மகிழ்வர். அவர்களுக்கு இறைவன் தனது வடிவத்தினை (சாரூப முக்தி) அளித்தருள்வன். இவ்வுண்மை, ''மலர்மிசை எழுதரு பொருள் நியதமும் உணர் பவர் தனதெழில் உருவது கொடு அடைதகு பரன்'' என்பதனால் புலப்படுத்தப் பெற்றது. சிதைதருவகை—ஆற்றல் குன்றும்படி. வளி—காற்று, மூச்சு. வளிநிறுவிய—மூச்சு அடக்கி யோகப் பயிற்சி செய்த. மலர்மிசை—உச்சந் தலைக்கண் உள்ள சகசிராரம் என்னும் ஆயிர இதழ்த் தாமரை மலரின்மேல். "மலர்மிசை ஏகினான்" எனவரும் திருக்குறட்டொடர் இங் குச் சிந்திக்கற் பாலது. எழுதருபொருள்—எழுந்தருளி விளங்கும் சிவபெருமான். கனம்—மேகம். இக்குக் கலைமகள் என்பது சிறப்பு முறையில், கலைகளுக்கெல்லாம் நிலைக்களமும் அதிதெய்வமுமாக விளங்கும் உமாதேவியாகிய மலைமகளைக் குறித்து நின்றது. (5)

சுருதிகள் பலநல முதல்கலை
துகளறு வகைபயில் வொடுமிகு
உருவியல் உலகவை புகழ்தர
வழியொழுகும்மெயுறு பொறியொழி
அருதவம் முயல்பவர் தனதடி
அடைவகை நினைபரன் உறைபதி
திருவருள் சிவபுரம் நினைபவர்
திகழ்குலன் நிலனிடை நிகழுமே

பொழிப்புரை :

வேதங்கள் முதலிய பல நல்ல கலைகளைக் குற்றம் அறும் வகையிற் பயில்வதுடன், சிறப்பு மிகுந்த ஆண் பெண் என்னும் உருவுடன் விளங் கும் உலகத்தார் புகழும்படி, அந்நூல்களின் வழி ஒழுகியும், ஐம்பொறிகளின் தீமைகளை ஒழித்தும், உண்மை பொருந்திய அரிய தவ நிலையை மேற்கொண்டு முயலுபவர்கள், தன்னு டைய திருவடிகளை அடையும்வகையில் நினைந்து அருள்புரியும் சிவபெருமான் உறைகின்ற பதி யாகிய, திருவருள் நலம் மிகுந்த சிவபுரம் என்னும் தலத்தை. நினைந்து வணங்குபவர் களின் சிறந்த குலமானது, உலகத்தில் என்றும் தொடர்ந்து நிலைபெற்று வளர்ந்து வரும்,

குறிப்புரை :

வேதம் முதலிய நூல்களையும், பலவகைக் கலைகளையும், நாம் பயிலுதல் வேண்டும். பயின்று அதன்படி வழுவாது ஒழுகுதல் வேண் டும், ஐம்பொறிகளின் தீங்குகள் நீங்கும்படி அரிய தவநெறிகளைக் கடைப்பிடித்து, அதனால் உலகம் புகழும்படி சிறந்து விளங்கவும், இறை வனை வழிபடவும் வேண்டும். இவ்வாறு நாம் ஒழுகி வந்தால், நம்முடைய குலமானது இடை யறாது தொடர்ந்து நின்று பெருகி வளர்ந்து வரும் என்பது இப்பாடலின் கருத்து. சுருதிகள்—வேதங்கள், துகள்—குற்றம். மெய்யுறு—உண்மை மிக்க: உடம்பின்கண் பொருந்திய. 'அருந்தவம்' என்பது, எதுகைநோக்கி 'அரு தவம்' எனவந்தது. (6)

கதம்மிகு கருவுரு வொடுஉகிர்
இடவட வரைகண கணஎன,
மதம்மிகு நெடுமுகன் அமர்வளை
மதிதிகழ் எயிறதன் நுதிமிசை
இதம்அமர் புவியது நிறுவிய
எழில்அரி வழிபட அருள்செய்த
பதம்உடை யவன்அமர் சிவபுரம்
நினைபவர் நிலவுவர் படியிலே

பொழிப்புரை :

சினம் மிகுந்த கரிய பன்றியின் உருவத் துடன், அதன் காற்குளம்பாகிய நகம் நிலத்தே படுதலால், வடவரையாகிய மேருமலை அதிர்ந்து கணகண என ஒலிக்க, வலிமை மிகுந்த தனது நீண்ட முகத்தில் பொருந்திய, பிறையினைப் போன்று வளைந்து திகழகின்ற, கோரைப்பல்லின் நுனியின் மீது இனிதாகக் கொண்டு நிலைநிற்கச் செய்த, அழகிற் சிறந்த

திருமால் போற்றி வணங்க, அவருக்கு அருள் புரிந்த சிறப்பு மிகுந்த சிவபெருமான் வீற்றிருக்கின்ற, சிவபுரம் என்னும் தலத்தை நினைந்து வணங்குபவர்கள், இவ்வுலகில் நெடுங் காலம் சிறப்புடன் வாழ்வார்கள்.

குறிப்புரை :

இரணியாக்கன் என்னும் அசுரன் உலகினைக் கவர்ந்துகொண்டு செல்ல, திருமால் வராகவடிவம் எடுத்து அதனை மீட்டு நிலைபெறுவித்துக் காத்தருளிய வரலாறு, இப்பாடலிற் குறிப்பிடப் பெறுகின்றது. ஆதலின் அத்தல வரலாற்றுக் குறிப்பு இப்பாடலில் சுட்டப் பெற்றது. ''பிறை எயிற்று வெள்ளைப்பன்றி பிரியாது பல நாளும் வழிபட்டு ஏத்தும் சீரவன் காண் சிவபுரத்தெம் செல்வன் தானே'' எனவரும் திருநாவுக்கரசர் திருத்தாண்டகம் இங்குச் சிந்தித்தற்குரியது. கதம்—சீற்றம், கோபம். உகிர்—நகம். வடவரை—வடக்கேயுள்ள மேருமலை. வராக வடிவத்தில் அதன் முகம் நீண்டும், வலிமை மிக்கும் விளங்குதலின், அதனை 'மதம்மிகு நெடுமுகன்'' என்றார். முகம் என்பது 'முகன்' என வந்தது. வளைந்து நீண்ட கோரைப் பற்களை ''வளை மதி திகழ் எயிறு'' என்றார். 'எழில் அரி' என்றது ஈண்டு வராகமூர்த்தியை. பதம்—சிறப்பு; திருவடி எனினுமாம், படி—உலகு. (7)

அசைவுறு தவமுயல் வினில், அயன்
அருளினில், வருவலி கொடுசிவன்
இசைகயி லையைஎழு தருவகை
இருபது கரம்அவை நிறுவிய
நிசிசரன் முடிஉடை தர, ஒரு
விரல்பணி கொளும் அவன் உறைபதி
திசைமலி சிவபுரம் நினைபவர்
செழுநில னினில்நிகழ் வுடையரே

பொழிப்புரை :

வருத்தம் மிக்க பெரும் தவமுயற்சியைச் செய்ததினாலும்; பிரமதேவனின் அருளினாலும், தனக்குக் கிடைத்த வலிமையைக் கொண்டு, சிவபெருமான் வீற்றிருக்கின்ற திருக்கயிலாய மலையைப் பெயர்த்து எடுக்கும் வகையில், தன்னுடைய இருபது கைகளையும். அம்மலையின் கீழ்ச் செலுத்திய அரக்கனாகிய இராவணனின் பத்துத் தலைகளும் நசுங்கும்படி, தன்னுடைய ஒரு விரலை ஏவல் கொண்டவனாகிய சிவபெருமான் உறைகின்ற பதியாகிய, நாற்றிசைகளிலும் புகழ்மிகுந்த சிவபுரம் என்னும் தலத்தை நினைந்து வணங்குபவர்கள். சிறப்பு உலகமாகிய வீட்டுலகத்திற் சென்று வாழும் பேறு உடையவர்கள் ஆவர்.

குறிப்புரை :

இப்பாடல், இராவணன் திருக்கயிலாய மலையைப் பெயர்த்தெடுக்க முயன்று, இடர்ப்பட்ட வரலாற்றைக் குறிப்பிடுகின்றது. திருஞான சம்பந்தர் தமது பதிகம்தோறும் எட்டாம் பாடலில் இராவணனின் வரலாற்றைத் தவறாது குறிக்கும் இயல்புடையவர், அவ்வியல்பின்படி, இப்பதிகத்திலும் இப்பாடலில் அதனைக் குறிப்பிட்டருளினார். உலகிலுள்ள மக்கள் தாம் அறிந்தோ அறியாமலோ பிழை செய்துவிட்டனராயினும், அதனை உணர்ந்து உள்ளவாறு உளம் கரைந்து உருகிவருந்தித் தன்னைப் புகலடைவார்களாயின், அத்தகையவர்களையும் சிவபெருமான்பொறுத்துஆட்கொண்டு காத்தருளுவன் என்பதனை உணர்த்துதற்கே, இராவணனின் வரலாற்றைத் திருஞானசம்பந்தர் ஒவ்வொரு பதிகத்திலும் குறிப்பிட்டு அருள்வர்: அசைவு—வருத்தம். நிசிசரன்—அரக்கன், இராவணன். அரக்கர்கள் இரவில் இருளிலேயே பெரிதும் இயங்குபவர்கள் ஆதலின், நிசிசரர் எனப்படுவர். செழுநிலன்—சிறந்த வீட்டுலகம். (8)

அடல்மலி படைஅரி அயனொடும்
அறிவரி யதொர்அழல் மலிதரு
சுடர்உரு வொடுநிகழ் தர, அவர்
வெருவொடு துதியது செயஎதிர்
விடம்மலி களநுதல் அமர்கண்அது
உடையுரு வெளிபடும் அவன்நகர்
திடம்மலி பொழில்எழில் சிவபுரம்
நினைபவர் வழிபுவி திகழுமே

பொழிப்புரை:

வலிமை மிகுந்த சக்கரப்படையை உடைய திருமாலும், பிரமதேவனும் அறிவதற்கு

இயலாதபடி, வெப்பம் மிகுந்த ஒரு பெரும் சுடர்ப் பிழம்பாகிய வடிவத்துடன் அவர்களின் நடுவே தோன்ற, அது கண்டு அவ்விருவரும் அச்சம் கொண்டு போற்றித் துதித்தலைச் செய்ய, அவர்களின் எதிரில் நீலகண்டமும் நெற்றிக் கண்ணுமுடைய உருவத்துடன், வெளிப்பட்டருளியவனுகிய சிவபெருமான் எழுந்தருளியுள்ள நகரமாகிய, வளம்மிக்க சோலைகள் சூழ்ந்த அழகுமிகுந்த சிவபுரம் என்னும் தலத்தை, நினைந்து வணங்குபவர்களின் கால்வழியாகிய குலமரபானது, உலகத்தில் சிறப்புமிக்கு விளங்கும்.

குறிப்புரை:

சிவபெருமான் கல்விச் செருக்கு, செல்வச் செருக்கு முதலியன கொண்டிருப்பவர்களால் அறிய இயலாதவன். தம்மை அன்புடன் போற்றி வழிபடுபவர்களுக்கே, எளிதில் வெளிப்பட்டு அருள்புரிபவன் என்னும் கருத்தை, உலகமக்களுக்கு உணர்த்துதற் பொருட்டே, மாலும் அயனும் அடிமுடிதேடி இறைவனைக் காணுது அயாந்த வரலாற்றைத் திருஞானசம்பந்தா ஒவ்வொரு பதிகத்தும், ஒன்பதாம் பாடலிற் குறிப்பிட்டருள்வர். அடல்—வலிமை. படை-சக்கரம். வெருவொடு-அச்சத்துடன். விடம்மலி களம்-நீலகண்டம். நுதல் அமர்கண்—நெற்றிக்கண். வழி—சந்ததி, குலமரபு. (9)

குணம் அறி வுகள்நிலை யில; பொருள்
உரைமரு வியபொருள் களும் இல;
திணம்எனும் அவரொடு, செதுமதி
மிகுசம ணரும், மலி தமதுகை
உணல் உடை யவர்உணர் வருபரன்
உறைதரு பதியுல கினில்நல
கணம்மரு வியசிவ புரம் நினை
பவர், எழில் உருவுடை யவர்களே

பொழிப்புரை:

உலகத்திலுள்ள பொருள்களும், அவற்றின் குணங்களும் அறிவுகளும் நிலையில்லாதன. இது திண்ணம் என்று கூறுபவர்களாகிய பௌத்த சமயத்தினரும், போலி அறிவில் மிகுந்த சமணர்களும்; தமது கைகளிலேயே பிச்சையேற்று உண்ணுதலை உடையவர்களும் ஆகிய இவர்கள், உணர்வதற்கு அரிய பரம் பொருளாகிய சிவபெருமான் உறைகின்ற பதியாகிய, நல்ல சிவனடியார்களின் திருக் கூட்டம் பொருந்தியுள்ள சிவபுரம் என்னும் தலத்தை, நினைந்து வணங்குபவர்கள் அழகு மிகுந்த உருவத்தினை உடையவர்கள் ஆவர்.

குறிப்புரை:

பொருள்கள் சணந்தோறும் தோன்றி அழியும் இயல்புடையன எனப் பௌத்தர்கள் 'கணபங்கவாதம்' கூறும் இயல்பினராதலின், அவர்களைக் "குணம் அறிவுகள் நிலையில; பொருள் உரை மருவிய பொருள்களும் இல திணம் எனும் அவர்" என்றார். சமணர்கள் உண்டும் இல்லையுமாம் எனச் 'சப்த பங்கி நியாயம்' என்னும் எழுவகை முடிவாகக் கூறிப் பொருட்டெளிவின்றி மயங்கி மயக்குபவராதலின், அவர்களைச் 'செதுமதி மிகு சமணர்' என்றார். செதுமொழி - 'பொல்லாதனவாகிய சொற்கள்' என்பர் நச்சினார்க்கினியர் (கலி.68). தமிழகத்தில் புதியனவாகப் புகுந்து நின்று, பொருந்தாக் கொள்கைகளும் செயல்களும் பரப்பி வந்த வேற்றவரால் விளைந்த தீங்குகளைக் கடிந்து, பழந்தமிழ்ப் பண்பும் மரபும் ஆகியவைகளைக் காத்தருளப் போந்த கடமை உணர்வினர் ஆதலின், ஞானசம்பந்தர் தமது பதிகம் ஒவ்வொன்றிலும், பத்தாம் பாடலில் இவ்வாறு வேற்றவரின் குற்றங்களைக் கடிந்துரைப்பர். இஃது அவர்தம் சமுதாய நலத் தொண்டின் உணர்வையே புலப்படுத்துவ தாகக் கொள்ளுதல் வேண்டும். திணம்—திண்ணம், உறுதி. செதுமதி—மயக்க அறிவு. கணம்—கூட்டம். (10)

திகழ்சிவ புரநகர் மருவிய
சிவன்அடி யிணைபணி சிரபுர
நகர்இறை, தமிழ்விர கனதுரை,
நலமலி ஒருபதும் நவில்பவர்,
நிகழ்குலம் நிலம்நிறை திருஉரு
நிகரில கொடை, மிகு சயமகள்,
புகழ், புவி வளர்வழி அடிமையின்
மிகைபுணர் தரநலம் மிகுவரே

பொழிப்புரை :

நலங்கள் நிறைந்து விளங்குகின்ற, சிவபுரம் என்னும் தலத்தில் பொருந்திய சிவபெருமானின், திருவடிகள் இரண்டையும் பணிந்து வணங்குகின்ற, சிரபுரம் என்னும் தலத்திற்குத் தலைவனும், தமிழ் விரகனுமாகிய என்னுடைய சிறப்புமிகுந்த பாடல்கள் பத்தையும், இசையுடன் பாடித் துதிப்பவர்கள், மேன் மேல் வளருகின்ற குலம், நிலம், நிறை, திரு, உரு, ஒப்பற்ற கொடைத்தன்மை, மிக்க

வெற்றி, புகழ் முதலியவைகள் உலகில் வளர்ந்தோங்க, இறைவனுக்கு வழிவழியாகச் செய்யும் அடிமைத்திறத்தின் பெருமிதம் பொருந்தி, நலம் மிக்கு வாழ்வார்கள்.

குறிப்புரை:

இப்பாடல் திருக்கடைக்காப்பு அல்லது 'பலச் சுருதி' எனப்படும். இத் திருப்பதிகத்தை ஓதுப வர்கள் எய்தும் பயன்களை, இப்பாடல் குறிப் பிடுகின்றது. இவ்வாறு பதிகத்தின் பயன் கூறும் திருக்கடைக்காப்புப் பாடலை அருளிச் செய்தல், திருஞானசம்பந்தப் பெருந்தகை யார்க்குச் சிறப்பியல்பு ஆகும். சிரபுரம்—சீர் காழி. விரகன்—வல்லவன், ஆர்வம் மிகுந்தவன். சிரபுர நகர் இறை, தமிழ் விரகன்' என்று, திருஞானசம்பந்தர் தம்மையே சுட்டிக் கொண்டருளினர். இது, 'தன்மையிற்படர்க்கை வந்த வழுவமைதி' எனப்படும். திருஞானசம் பந்தர், மக்களியல்புணர்ந்த தக்க பெருஞ்சான் றோர் தலைவராதலின், 'பயன்கருதாது பணி செய்க' எனக் கூற முற்படாமல், மக்களுக்கு அவர்கள் விரும்பும் பயன்கள் விளையும் என்னும் துணிபு தோற்றி, உய்யக் கொள்ளும் நெறியே கடைப்பிடித்தருளினர். ''அடிமையின் மிகை புணர்தர நலம் மிகுவர்'' என்பதற்குச், ''சிவபெருமானின் திருவடிகளில் அடிமை பூண் டொழுகுபவர்களுக்கு, மேற்கூறிய குலம் நிலம் நிறை திரு உரு கொடை வெற்றி புகழ் முதலி யன அனைத்தும் அடிமை பூண்டுநிற்கும் அதனால் அவர்கள் நலம் மிக்கு வாழ்வார்கள்'' என்று பொருள் கொள்ளினும் பொருந்தும். (11)

—ஆசிரியர்

தென்காசி வட்டம் திரு. இலஞ்சிக்குமாரர் கோயிலில், அமைச்சர் மாண்புமிகு திரு. தரும லிங்கம் அவர்கள், தமிழ் அர்ச்சனையைத் துவக்கிவைத்துச் சிறப்பித்தல் [4-8-71].

சென்ன பட்டணத்துச் சட்டம்

MADRAS ACT.

"The translation has not been authorised or accepted as authentic by the Government." Translation by Sri A. S. GNANASAMBANDAM Translation Dept.

—O—

(முற்றொடர்ச்சி)

6. அர்த்தம் :— இந்தச் சட்டத்தில் சந்தர்ப்பம் வேறு பொருள் குறித்தாலன்றி மற்றபடி;

(1) ''ஆலோசனைக் குழு'' என்பது, அரசாங்கத்தாரால் 7—வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்படி அமைக்கப்பட்ட குழு எனப் பொருள்படும்.

(2) எந்தக் கோயில் அல்லது குறிப்பிட்ட கட்டளை சம்பந்தமாகவாகிலும் ''பிராந்தியக் குழு'' என்பது, இச்சட்டத்தின்படி அமைக்கப் பட்டதும் அந்தக் கோவில் அல்லது கட்டளை விஷயமாய் அதிகாரங்களைச் செலுத்துகிறதும் கடமைகளைச் செய்கின்றதுமான பிராந்தியக் குழு எனப் பொருள்படும்.

ஆனால், மாற்றப்பட்ட பிரதேசம் சம்பந்தமாக, 1950—ம் ஆண்டு திருவாங்கூர்—கொச்சி இந்து அற நிலையங்கள் சட்டத்தின் (திருவாங்கூர்—கொச்சி 1950-ம் ஆண்டு 15வது சட்டத்தின்) II—ம் அத்தியாயத்தின் கீழ்க் கன்னியாகுமரி தேவஸ்நான சபையானது, அமைக்கப்படும் தேதிவரை பிராந்தியக் குழுவின் அதிகாரங்களையும் கடமைகளையும் அரசாங்கத்தார் குறிப்பிடக்கூடிய அதிகாரசபை அல்லது அதிகாரி செலுத்தவேண்டும் அல்லது நிறைவேற்றவேண்டும், ஷை சபை அமைக்கப்பட்ட பிறகு, அது பிராந்தியக் குழுவாகக் கருதப் படவேண்டும்.

(3) ''உதவிஆணையர்'' என்பது, 8—வது பிரிவின்படி நியமிக்கப்பட்ட யாதொரு உதவி ஆணையர் எனப் பொருள்படும்;

(4) ''சபை'' என்பது, 1926—ம் ஆண்டு சென்னை இந்து அற நிலையப் பாதுகாப்புச் சட்டத்தில் (சென்னை 1927—ம் ஆண்டு 2-வது சட்டம்) கண்ட 10-வது பிரிவின்படி அமைக்கப்பட்ட சபை எனப் பொருள்படும்.

(5) ''அறக் கட்டளை'' என்பது, தங்குவதற்கான விடுதிகள், சத்திரங்கள், பாடசாலைகள், பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள், ஏழைகளுக்கு உணவு அளிக்கும் விடுதிகள், கல்வி வைத்திய உதவி பொதுஜன சுகாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கான நிலையங்கள் ஆகிய இவைகளைப்போல் இந்து சமூகத்துக்காவது, ஜைன சமூகத்துக்காவது, அதன் யாதொரு பிரிவுக்காவது பயன்படக்கூடிய நோக்கங்களையேனும் அதேமாதிரி தன்மையுள்ள இதர நோக்கங்களையேனும் ஆதரிப்பதற்காக அல்லது பராமரித்து வருவதற்காக அந்தச் சமூகம் அல்லது பிரிவின் நன்மைக்காகக் கொடுக்கப்பட்ட அல்லது நிதியேற்பாடு செய்யப்பட்ட அல்லது அந்தச் சமூகத்தாரால் அல்லது பிரிவினரால் உரிமையை முன்னிட்டு உபயோகிக்கப்பட்ட சகல சொத்தும் என்று பொருள்படும்; மேலும், அதில் சம்பந்தப்பட்ட நிலையம் என்பதும் அடங்கும்;

(6) "ஆணையர்" என்பது, 9-வது பிரிவின்படி நியமிக்கப்பட்ட ஆணையர் எனப் பொருள்படும்;

(7) 'நீதிமன்றம்' என்பது—

(i) ராஜதானிப் பட்டணத்துக்குள்ளிருக்கிற ஒரு மடம் அல்லது கோயில் சம்பந்தமாக, சென்னை நகர சிவில் கோர்ட் என்றும்,

(ii) வேறு இடங்களிலிருக்கிற ஒரு மடம் அல்லது கோயில் சம்பந்தமாக, அம்மடம் அல்லது கோயிலிருக்கிற பிரதேசம் விஷயமாய் விசாரணை அதிகாரமுள்ள சபார்டினேட் ஜட்ஜ் நீதிமன்றம் என்றும் அல்லது அப்படிப்பட்ட நீதிமன்றம் எதுவும் இராவிட்டால், அத்தகைய விசாரணை அதிகாரமுள்ள மாவட்டநீதிமன்றமென்றும்,

(iii) ஒரு மடம் கோயிலைச் சேர்ந்த குறிப்பிட்ட ஒரு கட்டளை சம்பந்தமாக, அம் மடம் அல்லது கோயில் விஷயமாய் மேற்சொன்னபடி விசாரணை அதிகாரம் உடையதாயிருந்திருக்கக் கூடிய நீதிமன்றமென்றும்,

(iv) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மடங்களை அல்லது கோயில்களைச்சேர்ந்த குறிப்பிட்ட ஒரு கட்டளை சம்பந்தமாக, அப்படிப்பட்ட இரண்டு மடங்கள் அல்லது கோயில்களிலாவது இரண்டுக்கு மேற்பட்ட மடங்கள் அல்லது கோயில்களிலாவது ஒன்றின் விஷயமாய் மேற்சொன்னபடி விசாரணை அதிகாரம் உடையதாயிருக்கக்கூடிய ஒரு நீதிமன்றம் என்றும் பொருள்படும்;

(8) "துணை ஆணையர்" என்பது, 9-வது பிரிவின்படி நியமிக்கப்பட்டயாதொரு துணை ஆணையர் என்று பொருள்படும்;

(9) 'நிர்வாக அலுவலர்' என்பது, ஒரு மத சம்பந்தமான நிலையத்தையொட்டிய நிர்வாகம் சம்பந்தமாய், இச்சட்டத்தினுல் அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதிகளினுல் அல்லது இச்சட்டத்தின்படி அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதிகளின்படி அல்லது இச்சட்டத்தின்படி நிச்சயிக்கப்பட்ட அல்லது நிச்சயிக்கப்பட்டதாகக் கருதப்பட்ட யாதொரு திட்டத்தினுல் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட அத்தகைய அதிகாரங்களைச் செலுத்தவும் அத்தகைய கடமைகளை நிறைவேற்றவும் நியமிக்கப்படுகிற ஒரு நபர் எனப் பொருள்படும்;

(10) "அரசாங்கம்" என்பது, இந்த மாநில அரசாங்கம் எனப் பொருள்படும்;

(11) "பரம்பரைத் தர்மகர்த்தா" என்பது, மத சம்பந்தமான யாதொரு நிலையத்தைச் சேர்ந்த தர்மகர்த்தா உத்தியோகத்துக்கு வருபவர் பரம்பரை உரிமை மூலமாக மேற்படி உத்தியோகத்துக்கு வரவேண்டியதாகவாவது, அந்தப்படி உத்தியோகத்துக்கு வருவதைக் குறித்து மாமூலை அனுசரித்து ஒழுங்கு ஏற்படுத்தப்பட்டாவது அந்தப்படி உத்தியோகத்துக்கு வருவது விஷயமாய் நிலையத்தை ஏற்படுத்தியவர் பிரத்தியேகமான ஏற்பாடு செய்தாவது உள்ள உரிமை வழியாய்த் தர்மகர்த்தா உத்தியோகத்துக்கு வருவது சம்பந்தமான யாதொரு திட்டம் செலாவணியாய்க் கொண்டிருக்கிற வரையிலே, ஷை அற நிலையத்தின் தர்மகர்த்தா என்று பொருள்படும்;

(12) "சட்டப்படி இணைக்கப்பட்ட தேவஸ்வாம்கள்" என்பது, 1950—ம் ஆண்டு திருவாங்கூர்—கொச்சி இந்து அற நிலையங்கள் சட்டத்தின் (திருவாங்கூர்—கொச்சி, 1950—ம் ஆண்டு 15—வது சட்டம்) 1—ம் ஷெட்யூலில் குறிப்பிட்டுள்ள தேவஸ்வாம்கள் எனப்பொருள்படும்;

(13) "மடம்" என்பது, சொத்துக்கள் உடையதாயிருப்பதும், எந்த நபரின் பதவிக்கு வருவது, நிலையம் ஏற்படுத்தியவரின் கட்டளையை அனுசரித்தும் அல்லது மாமூலை அனுசரித்தும் முறைப்படுத்தப்படுகிறதோ,

(i) மதபோதனை செய்வதில் ஈடுபடுவது அல்லது பரமார்த்திகத் தொண்டு செய்வது யாருடைய கடமையோ,

(ii) ஒரு சிஷ்யக் கூட்டத்துக்கு யார் பரமார்த்திகத் தலைமை வகிக்கிருரோ அல்லது வகிப்பதாகச் சொல்லுகின்ருரோ அந்த நபரை முதன்மையாகக் கொண்ட ஒரு இந்து மத ஸ்தாபனமெனப் பொருள்படும், மேலும் அதில், ஷை நிலையத்தைச் சேர்ந்ததாய்' மத

சம்பந்தமான வழிபாடு அல்லது போதனை நடக்கும் இடங்கள் என்பதும் அடங்கும்!

விளக்கம்: —ஒரு மடத்தின் தலைமை இடம் இந்த மாநிலத்திற்கு வெளியேயிருந்து, ஆனால், அம்மடத்தின் சொத்துக்கள் இந்த மாநிலத்திற்குள்ளிருக்கிற பட்சத்திலே, ஷ மடத்தில் இந்த மாநிலத்திற்குள்ளிருக்கிற சொத்துக்கள் சம்பந்தப்பட்டவரையில், அம்மடம் விஷயமாய் இச்சட்டத்தில் கண்ட ஷரத்துக்களின்படி மேல் விசாரணை அதிகாரம் செலுத்தப்பட வேண்டும்.

(14) ''பரம்பரையாய் ஏற்படாத தர்ம கர்த்தா" என்பது, பரம்பரையான தர்மகர்த்தா அல்லாத ஒரு தர்மகர்த்தா எனப் பொருள் படும்;

(15) ''பற்றுள்ளவராயிருப்பவர்'' என்பது-

(a) ஒரு மடத்தின் விஷயத்தில், அந்த மடத்தின் யாதொரு சீடர் அல்லது அந்த மடம் எந்த மதக்கொள்கையைச் சேர்ந்ததோ அந்தக் கொள்கையை உடைய யாதொருவர் என்றும்,

(b) ஒரு கோயிலின் விஷயத்தில், அந்தக் கோயிலில் வழிபாடு அல்லது சேவை நடக்கும்போது வந்திருக்க உரிமையுள்ளவராயிருக்கிற அல்லது வழக்கமாய் வந்துகொண்டிருக்கிற, அல்லது அங்கே ஏதேனும் தானம் கொடுக்கப்படும்போது அதில் ஒரு பாகத்தைப் பெற்றுப்பலனடையஉரிமையுள்ளவராயிருக்கிற அல்லது வழக்கமாய்ப் பலனடைந்து வருகிற யாதொருவர் என்றும்,

(c) ஒரு குறிப்பிட்ட கட்டளையின் விஷயத்தில் சேவை அல்லது தருமம் நடக்கும் போது வந்திருக்க உரிமையுள்ளவராயிருக்கிற அல்லது பழக்கமாய் வந்துகொண்டிருக்கிற அல்லது தருமத்தின் ஒரு பாகத்தைப் பெற்றுப் பலனடைய உரிமையுள்ளவராயிருக்கிற அல்லது வழக்கமாய்ப் பலனடைந்து வருகிற யாதொரு நபர் என்றும் பொருள்படும்;

(16) "மத சம்பந்தமான தருமம்" என்பது யாதொரு இந்து உற்சவமோ, மதத் தன்மை வாய்ந்த சடங்கோ, யாதொரு மடம் அல்லது கோயிலுக்குச் சம்பந்தப்பட்டிருந்தாலும் சரி, இராவிட்டாலும் சரி, அந்த உற்சவம் அல்லது சடங்குடன் இயல்புடைய யாதொரு பொதுத்தருமம் என்று பொருள்படும்;

(17) "மத சம்பந்தமான கட்டளை" அல்லது ''கட்டளை'' என்பது, மடங்கள் அல்லது கோயில்களுக்குச் சொந்தமான சகல சொத்தும் என்றாவது, மடங்கள் அல்லது கோயில்களுக்கு ஆதரவாயிருப்பதற்காகக் கொடுக்கப்பட்ட அல்லது நிதியேற்பாடு செய்யப்பட்ட சகல சொத்தும் என்றாவது, அல்லது அவைகளுக்குச் சம்பந்தப்பட்டதும் பொதுத் தன்மை வாய்ந்ததுமான எந்தச் சேவை அல்லது தருமம் அல்லது வேறு எந்த மத சம்பந்தமான தருமமாகிலும் நடப்பதற்காகக் கொடுக்கப் பட்ட அல்லது நிதியேற்பாடு செய்யப்பட்ட சகல சொத்தும் என்றாவது பொருள்படும்; மேலும் அதில், சம்பந்தப்பட்ட நிலையம் என்பதும், அந்த நிலையத்தின் வளவு என்பதும் கூட அடங்கும்; ஆனால், அதில் யாதொரு மத ஸ்தாபனத்தில் அர்ச்சகருக்கோ சேவை செய்பவருக்கோ இதர வேலைக்காரருக்கோ தானமாக அவருக்கென்றே கொடுக்கப்படும் சொத்துதானம் என்பது அடங்காது;

விளக்கம் *(1)* :— யாதொரு அறநிலையத்தில் அல்லது அந்த நிலையத்துக்குச் சம்பந்தப்பட்ட யாதொரு சேவை அல்லது தருமத்தை நடத்துவதற்காக ஷ நிலையத்தின் யாதொரு அர்ச்சகருக்காவது சேவை செய்பவருக்காவது இதர வேலையாட்களுக்காவது கொடுக்கப்பட்ட எந்த இனமாகிலும் அர்ச்சகருக்கென்றே அல்லது சேவை செய்பவருக்கென்றே அல்லது இதர வேலையாட்களுக்கென்றே கொடுக்கப் பட்ட தானமாகக் கருதப்படமாட்டாது; ஆனால், அது யாதொரு மத சம்பந்தமான கட்டளை என்றே கருதப்படும்.

விளக்கம் *(2)* :— யாதொரு அற நிலையத்துக்குச் சொந்தமான அல்லது அதற்கு ஆதர

வாயிருப்பதற்காகக் கொடுக்கப்பட்ட அல்லது நிதி ஏற்பாடு செய்யப்பட்ட அல்லது யாதொரு அறநிலையத்துக்குச் சம்பந்தப்பட்டதும் பொதுத்தன்மை வாய்ந்ததுமான யாதொரு சேவை அல்லது தருமத்தை அல்லது வேறு யாதொரு மத தருமத்தை நடத்துவதற்காகக் கொடுக்கப்பட்ட அல்லது நிதியேற்பாடு செய்யப்பட்ட சகல சொத்தும் இந்தப் பொருளின் தாற்பரியப்படி யாதொரு "அறக் கட்டளை" அல்லது ''கட்டளை'' என்று கருதப்படும்; இச் சட்டம் செலாவணியாகத் தொடங்கிய தேதிக்கு முன்போ பிறகோ, அந்த அறநிலையம் இராமற்போய் விட்டதென்பதையாவது மத வழிபாடு அல்லது போதனை நடக்கும் இடமாக உபயோகிக்கப்படாமற் போய்விட்டதென்பதையாவது ஷை சேவை அல்லது தருமம் நடத்தப்படாமற் போய்விட்டதென்பதையாவது கவனிக்க வேண்டியதில்லை.

ஆனால், காலவரையறைச் சட்டம் பிரயோகப்படுவதனால், 1951-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30-ம் தேதிக்கு முன் எந்த நபரிடமாவது நிலைபெற்றிருந்த எந்தச் சொத்து விஷயமாகிலும் இந்த விளக்கம் பயன்படுவதாகக் கருதப்படமாட்டாது.

(18) ''அறநிலையம்'' என்பது, யாதொரு மடமென்றாவது, யாதொரு கோயில் என்றாவது யாதொரு குறிப்பிட்ட கட்டளை என்றாவது பொருள்படும்;

(19) ''குறிப்பிட்ட கட்டளை'' என்பது, யாதொரு கோயிலிலாவது மடத்திலாவது குறிப்பிட்ட யாதொரு சேவையாகிலும் தருமத்தையாகிலும் நடத்துவதற்காக அல்லது வேறு யாதொரு மத தருமத்தை நடத்துவதற்காக நிதியேற்பாடு செய்து வைக்கப்பட்ட யாதொரு சொத்து அல்லது பணம் என்று பொருள்படும்; ஆனால், *(17)* பகுதியைச் சேர்ந்த *(1)* விளக்கத்தினால் விவரிக்கப்பட்டிருக்கிறபடியுள்ள ஒரு இனம் அடங்காது;

விளக்கம் *(1)*:— இந்தப் பகுதியில் குறிப்பிட்ட தன்மையுள்ள இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட கட்டளைகளின் நிர்வாகம் ஒரு பொது தர்மகர்த்தாவிடம் நிலைபெற்றிருந்தால் அல்லது இச்சட்டத்தின்படி நிச்சயிக்கப்பட்ட அல்லது நிச்சயிக்கப்பட்டதாகக் கருதப்பட்ட ஒரு பொதுத் திட்டத்தினால் நிர்வகிக்கப்பட்டால் அவைகள் இச்சட்டத்தின் காரியங்களுக்காக ஒரு குறிப்பிட்ட கட்டளையாகப் பொருள் கொள்ளப்பட வேண்டும்.

விளக்கம் *(2)*:— ஒரு மடத்துக்கு அல்லது கோயிலுக்கு இணைக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட கட்டளை சிறிது மட்டும் மாநிலத்துக்குள்ளும், சிறிது மட்டும் மாநிலத்திற்கு வெளியேயும் இருந்தால் இச்சட்டத்தின் ஷரத்துக்களை அனுசரித்து மாநிலத்துக்குள்ளிருக்கிற குறிப்பிட்ட கட்டளையின் பாகத்தின்மீது மேல் விசாரணை செலுத்தப்படவேண்டும்.

(20) ''கோயில்'' என்பது, பொது ஜனங்களால் மத வழிபாடு செய்கிற இடமாக உபயோகிக்கப்பட்டும், மத வழிபாடு செய்கிற பொது இடமாக இந்து ஜன சமூகத்துக்காவது அதில் ஒரு பிரிவினருக்காவது அர்ப்பணம் செய்யப்பட்டும் அல்லது அவர்களால் உரிமையை முன்னிட்டும் உபயோகிக்கப்பட்டும் வருகிற யாதொரு இடத்துக்கு எந்தப் பெயர் வழங்கினாலுஞ் சரி அந்த இடம் என்று பொருள்படும்.

விளக்கம் :— மாநிலத்தின் வெளியே இருக்கிற ஒரு கோயிலின் சொத்துக்கள் மாநிலத்துக்குள் இருந்தால், அக்கோயிலுக்குச் சொந்தமாக மாநிலத்துக்குள் இருககும் சொத்துக்கள் சம்பந்தப்பட்டவரையில் இச்சட்டத்தின் ஷரத்துக்களை அனுசரித்து ஷை கோயிலின் மேல்விசாரணை செலுத்தப்பட வேண்டும்.

(21) ''மாற்றலான பிரதேசம்'' என்பது, கன்னியாகுமரி மாவட்டமும், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள செங்கோட்டைத் தாலூகாவும் எனப் பொருள்படும்.

(22) '' தர்மகர்த்தா '' என்பது, எந்த நபரிடம் அல்லது சபையினிடம் ஓர் அறநிலையத்தின் பரிபாலனம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறதோ அந்த நபருக்கு அல்லது சபைக்கு என்ன பெயர் வழங்கினாலும் சரி அந்த நபர் அல்லது சபை என்று பொருள்படும் ; மேலும் எந்த நபர் அல்லது சபையாகிலும் ஒரு தர்ம கர்த்தாவாக இருந்தால் எப்படி உத்தரவாதியாயிருப்பாரோ அல்லது உத்தரவாதியாயிருக்குமோ அப்படி உத்தரவாதியாயிருக்கும் அந்த நபர் அல்லது சபை என்பதும் அதில் அடங்கும்.

—தொடரும்.

“ திருக்கோயில் ” ஆசிரியர் திரு. ந. ரா. முருகவேள் அவர்களால்
இதுவரை எழுதி வெளியிடப் பெற்றுள்ள

கட்டுரைகளின் பட்டியல்

(1962 அக்டோபர் முதல் 1963 செப்டம்பர் வரை)

எண்.	பெயர்	பக்கம்
1.	அப்பர் என்னும் சொற்பொருள் விளக்கம்	553
2.	அப்பரும் காந்தியடிகளும்	1
3.	அணுத்தரும் தன்மையில் ஐயோன் காண்க	292
4.	அர்த்தநாரீசுவரர்	247
5.	அறுவகைச் சமயங்கள்	94
6.	ஆசிரியர் மெய்கண்டார்	425
7.	இருவினையொப்பு	127
8.	இலக்கியங்களில் இமயம்	209
9.	இறைவனின் திருநடனம்	106
10.	உண்மை விளக்கம்	40
11.	உலகுரை பலவகை	342
12.	எண்குணத்தான்	298
13.	ஒரே வகையுணர்வு	94
14.	கார்த்திகை விளக்கீடு	97
15.	கொற்றவை வாழ்த்து	39
16.	சட்டிச்சாறு	92
17.	சந்திரசூடேசுவரர்	196
18.	சமரசஞானம்	140
19.	சிவராத்திரி	265
20.	சிறுபிழையும் பெருவிளக்கமும்	377
21.	சேக்கிழாரும் முருகனும்	345, 409
22.	தட்சிணாமூர்த்தம்	366
23.	திரிசூலநாதர் திருக்கோயில்	131
24.	திருக்குறளும் திருவாசகமும்	486
25.	திருக்கோட்டூர்	221
26.	திருப்பாவைச் சிறப்புரைகள்	145, 232
27.	திருவல்லம்	313
28.	திருவாக்கூர்	217
29.	திருவாசகமும் பழமொழிகளும்	435
30.	திருவாதிரைச் சிறப்பு	206
31.	திருவேற்காடு	193
32.	திருமூலர் திருமந்திரம்	550
33.	தோடுடைய செவியன்	589
34.	படைப்பின் வியப்பு	134
35.	பராக்கிரம பாண்டியனின் பண்பாடு	513
36.	பெரும்பெயர் முருகன்	49
37.	மதுரைக் கோயில் அமைப்பு	499
38.	மதுரைத் தலமாண்பு	502
39.	மதுரை மாநகராட்சி	457
40.	மதுரையின் மறுபெயர்கள்	502
41.	மனக்கவலை மாற்றல் அரிது	331

எண்	பெயர்	பக்கம்
42.	மாயா இயந்திரதனு	92
43.	மீனுட்சியும் காமாட்சியும்	505
44.	மீனுட்சி சுந்தரேசுவரர்	504
45.	வடபழநியாண்டவர் கோயில்	79
46.	வித்தகச் சான்ருேர் விவேகானந்தர்	253

(1963 அக்டேபர் முதல் 1964 செப்டம்பர் வரை)

1.	அகப்பொருளில் அருட்பொருள்.	102
2.	அன்னையருட் பாதமலர்.	1
3.	அருள் நந்தி சிவாச்சாரியர்	228
4.	ஆண்டாளின் சிறப்பு	271
5.	உத்தரமேரூர்க் கல்வெட்டுக்கள்.	300
6.	எழுத்துநிலை மாற்றம்.	57
7.	குருஞான சம்பந்தர்	451
8.	சண்டேசானுக்கிரக மூர்த்தம்	149
9.	சாந்தலிங்க சுவாமிகள்	353
10.	சிவஞான சித்தியார்	275
11.	சிவப்பிரகாசரும் திருவண்ணுமலையும்	161
12.	சிவனெனும் நாமம்	321
13.	'சிறப்புடைய புராணங்கள்'	140
14.	சூரியனுர் கோயில்கள்	192
15.	சென்னை மாவட்டக் கோயில் வரலாறு	526
16.	சேக்கிழார் விளக்கும் செம்பொருள்	61
17.	சேக்கிழாரும் சைவ சித்தாந்தமும்	549
18.	சோமாஸ்கந்த மூர்த்தம்	49
19.	தத்துவ ஞான வித்தகர்	415
20.	தாயுமான சுவாமிகள	561
21.	திருக்களிற்றுப் படியார்.	469
22.	திருக்குறளும் திருநாவுக்கரசரும்	513
23.	திருப்பாசுரம் (பொருள் விளக்கம்)	313
24.	திருமுறை நூல்களின் சிறப்பு	468
25.	திருமுறைகளின் பெருமை (கவிதை)	459
26.	திருவருட்பாவில் ஒரு திருப்பாடல்	373
27.	திருவாசகத்தில் அறிவியல்	361
28.	திருவுத்தரகோச மங்கை	401
29.	திருவெழு கூற்றிருக்கை (பொருள் விளக்கம்)	265
30.	தெய்வப் புலவர் திருவள்ளுவர்	409
31.	தென்னுப்பிரிக்காவில் திருவாசகமணி	601
32.	நமது தாய்நாடு (மொழிபெயர்ப்பு)	271
33.	நீ அமரன் ஆனுய் (கவிதை)	457
34.	நுண்பொருட் கருத்து விளக்கம்	609
35.	படத்திறப்பு விழா	288
36.	பழநி ஆண்டவர் சிறப்பு	225
37.	பிட்சாடன மூர்த்தம்	425
38.	வான்மீகி முனிவர் வாழ்ந்த இடம்	476
39.	க்ஷேத்திர வெண்பா (பொருள் விளக்கம்)	520

(1964 அக்டோபர் முதல் 1965 செப்டம்பர் வரை)

1.	அகிலாண்ட நாயகி மாலை (விளக்கம்)	52
2.	ஆஞ்சநேயர் (கம்பர் பண்போவியம்)	368

எண்	பெயர்	பக்கம்
3.	ஆழ்வார்களும் நாயன்மார்களும்	387
4.	இராமலிங்கரும் கோயில் வழிபாடும்	430
5.	இளங்கோவடிகளும் சேக்கிழாரடிகளும்	457
6.	ஈசன் இயற்கை	374
7.	உலகப் பெருங் கவிஞர் தலைவர்	469
8.	'எடுத்துச் சுமப்பான்'	523
9.	எல்லாக் குற்றமும் தீர்ந்த செய்யுள்	330
10.	எழில் ஞான பூசை	380
11.	கடவுள் உணர்ச்சி	563
12.	கவிதை அஞ்சலி	570
13.	காசி விசுவநாதர்	320
14.	கோயில்களின் கோயில்	231
15.	சத்தியத்திற்கு உயிர் கொடுத்த சான்றோர்	153
16.	சமயங்கள் (முன்னுரை)	435
17.	சமயக் கொள்கைவகைகள்	477
18.	சமயப் பொருட் குறிப்புக்கள் (முன்னுரை)	478
19.	சம்பந்தரும் பட்டினத்தடிகளும்	228
20.	சிவஞான சித்தியார் (அனுமானப் பிரமாணம்)	327
21.	சிவஞான சித்தியார் (பிரமாண இயல்)	145
22.	சிவஞான சுவாமிகள்	416
23.	சிவஞான தீபம்	553
24.	சேக்கிழார் செய்யுளின் தெய்வநலம்	97
25.	சைவசித்தாந்தம்	361
26.	தஞ்சாக்கூர்த் தலவரலாறு	215
27.	தவத்திரு தண்டபாணி சுவாமிகள்	110
28.	திருஞான சம்பந்தர் பிள்ளைத் தமிழ் (முன்னுரை)	30
29.	திருச்சந்த விருத்தம் (உரை)	217, 270, 338, 422, 524
30.	திருநெறிய தமிழ் (உரை)	221, 227
31.	திருப்புகழ் அமிழ்தம் (உரை)	274, 336
32.	திருவளர் தாமரை (விளக்கம்)	291
33.	திருவாசகத்தின் இலக்கியத்திறன்	313
34.	திருவாய்மொழி (உரை)	265, 341, 376, 425, 520
35.	தெய்வம் என்பதோர் சித்தம்	517
36.	தைப்பூசமும் தெப்ப விழாவும்	233
37	தொடக்கவிழாச் சிறப்புரை (மொழிபெயர்ப்பு)	49
38.	நடராச வடிவம்	505
39	பக்தி வெள்ளம் (இராமாயணம்)	104
40.	பஞ்சாக்கரத் திருப்பதிகம் (உரை)	333
41.	பெரிய அன்பின் வரகுணதேவர்	240
42.	பெரியவர்கள் போற்றிய அரிய நற்கவிதை	280
43.	பைந்தமிழ் நவின்ற செந்நாப் புலவன்	62
44.	மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை	23
45.	மதிப்புரை	567
46.	மாலை மாற்றுப் பதிகம் (உரை)	559
47.	மூல இலக்கியம்	409
48.	வண்ணத்தியல்பு நூல் (முன்னுரை)	391
49.	வாழ்வியற் சொல்லோவியம்	224
50.	விடை தெரியுமா?	522, 584
51.	விடை விளக்கம்	527. 589
52.	விநாயகர் மாட்சி	.1.
53.	வைத்தியநாதர்	287

1965 அக்டோபர் முதல் 1966 செப்டம்பர் வரை

எண்	பெயர்	பக்கம்
1.	அகர முதல எழுத்தெல்லாம்	483
2.	அருமையில் எளிய அழகே போற்றி	581
3.	அரும்பெறல் மரபிற் பெரும் பெயர்	361
4.	ஆதி பகவன்	441
5.	இராமலிங்க அஷ்டகம் (உரை)	36
6.	இராமலிங்கரும் சன்மார்க்கமும்	391
7.	இன்ப வாழ்வின் இயல்	444
8.	இன்பியல் மனிதன் (கவிதை)	487
9.	உமாபதி சிவம்	217
10.	எங்கு எழில்என் ஞாயிறு?	257
11.	ஒன்றொழி பொதுச்சொல்	262
12.	'ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு'	13
13.	கச்சியப்ப முனிவர் கவிநலம்	460
14.	கம்பர் தரும் கவிதையின்பம்	97
15.	காலனைக் காலாற் கடிந்த கடவுள்	25
16.	குடம்பையும் புள்ளும்	165
17.	குறிகளும் அடையாளமும்	274
18.	குமர குருபர சுவாமிகள்	459
19.	குமரகுருதாசரும், குமர குருபரரும்	878
20.	மாயாவாதம்	117
21.	மாயாவாத நிராகரணம்	145
22.	ஐக்கியவாத நிராகரணம்	293
23.	பாடாணவாதம்—பேதவாதம்.	338
24.	சிவசம வாதம்	400
25.	சிவசமவாத நிராகரணம்	431
26.	சமயமும் விஞ்ஞானமும்	331
27.	சிவஞான சித்தியார் (அளவையியற் குற்றங்கள்)	241
28.	சிவஞான போதச் சிறப்பு	375
29.	சிவஞான போதத் தெளிபொருள்	565
80.	சிவஞான போதத் தெளிவுரை	379, 425, 478
31.	சிவலிங்கத் திருவுருவம்	551
32.	தலப் பெயர்களில் கவிப்புனைவுகள்	596
33.	தமிழகச் சமய வரலாற்றில் ஒருபெரும் சிறப்பு நிகழ்ச்சி	505
34.	தமிழ் நாடு தெய்விகப் பேரவை	457
35.	தமிழ் நாடு தெய்விகப் பேரவை—அமைப்பு விதிகள்	519
36.	திரு அம்பர்ப் புராணம்	313
37.	திரு இயமகப் பதிக உரை	381
38.	திரு இயமகப் பதிகத்தின் சிறப்பு	385
39.	திருச்சந்த விருத்தம் (உரை விளக்கம்)	176, 289
40.	திருநாவுக்கரசர் உழவாரத் தொண்டின் சிறப்பு	...1...
41.	திருப்புகழ் அமிழ்தம்	68
42.	திருவாசகத்தின் சிறப்பியல்புகள் சில	61
43.	திருவாசகத்தில் உவமைகள்	269
44.	திருவெழு கூற்றிருக்கை (உரை)	55
45.	திருவெழு கூற்றிருக்கை (சித்திர விளக்கம்)	31
46.	திவ்வியப் பிரபந்தங்களின் சிறப்பு	309
47.	தெய்வம் தெளிவும், சிதம்பர சுவாமிகளும்	573
48.	தெய்வம் தெளிமின்; தெளிந்தோர்ப் பேணுமின்	70, 121
49.	தொல்காப்பியர்	409
50.	தொல்காப்பியச் சிறப்பு	417

எண்	பெயர்	பக்கம்
51.	நம்பியாரூரன் நாம் தொழும் தன்மையான்	346
52.	மடாதிபதிகள் மாநாட்டுத் தீர்மானங்கள்	265
53.	மதிப்புரைகள்	601
54.	மாலைமாற்றுப் பதிகம் உரை	8
55.	முருகனின் ஆறுபடை வீடுகள்	49
56.	விடை தெரியுமா?	8, 73, 108, 155; 229, 278, 319, 369, 418, 469, 536
57.	விடை விளக்கம்	17, 31, 109, 156, 230, 279, 320, 370, 419, 470, 587.
58.	வீரசைவம்	4
59.	வையந்தோறும் தெய்வம் தொழு	482

(1966 அக்டோபர் முதல் 1967 செப்டம்பர் வரை)

1.	அம்பிகையின் அருட்கண்கள்	106
2.	ஆற்றிலே எதிரேறிய அருட்கவிதை	185
3.	இந்து மதம்	333
4.	இராமலிங்கரின் இனிய உரைத்திறன்	156
5.	இராமலிங்கரின் இலக்கியக் கடிதம்	409
6.	இளங்கோவடிகள் விடுக்கும் இனிய செய்தி	13
7.	ஒரு பொருட் கிளவி	406
8.	கந்தர் கலிவெண்பா (பொருட் சுருக்கம்)	34
9.	கருணை மலை	80
10.	களேபரம்	142
11.	கோயில்களே சிறந்த சமுதாய நல நிலையங்கள்	361
12.	சங்கற்ப நிராகரணம் (சிவசமவாதம்)	377
13.	சங்க நூல்களில் இராமாயணம்	49
14.	சங்க நூல்களின் சிறப்பு (கவிதை)	154
15.	சிதம்பர சுவாமிகளும் பொங்கல் விழாவும்	276
16.	சிவஞான போதச் சூத்திரங்கள் (உரை)	425
17.	சிவபுராணம் (உரை)	563
18.	செந்திற் கந்தன் திருவருள்	370
19.	சேக்கிழார் செய்யுள் இன்பம்	367
20.	சைவ சமயம்	443
21.	சைவ நாயன்மார் (சரிதக் குறிப்புகள்)	313
22.	சொல்லில் தத்துவம்	521
23.	'தமிழ்ச் சமர்த்தர்'	6
24.	திரு இயமகப் பதிகம் (உரை)	470
25.	திரு இயமகப் பதிகத்தின் சிறப்பு	469
26.	திருக்கழுக்குன்றம் (தலவரலாறு)	326
27.	திருக்குறளும் சைவமும்	505
28.	திருச்சந்த விருத்தம் (உரை)	17, 73, 209. 277, 382, 429, 482
29.	திருஞான சம்பந்தர் திருவுள்ளம்	217
30.	திருமுருகன் சிறப்பு (கவிதை)	233
31.	திருமுருகாற்றுப்படையின் பொழிப்புரை	55
32.	திருமுருகாற்றுப்படையின் சிறப்பு	61
33.	திருமுருகாற்றுப்படையின் சுவை நலம்	65
34.	திருமூலர் திருமந்திரம்	361
35.	திருவள்ளுவரின் உவமைத் திறன்	421
36.	திருவாசகத்தில் ஒரு பெருவாசகம்	124
37.	திருவாசகமும் சங்க நூல்களும்	149
38.	திருவாய் மொழியின் சிறப்பு	274

எண்	பெயர்	பக்கம்
39.	திருவான்மியூர்த் தலவரலாறு	199
40.	தென்கிழக்கு ஆசியாவில் திருவாசகமணி	235
41.	தேனூறு செஞ்சொல் திருக்கோவை	457
42	நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தர்	225
43.	நானுர் என் உள்ளமார்?	281
44.	பரஞ்சோதி முனிவர் பாடற்றிறன்	97
45.	பொங்கல் விழாவும், புறநானூறும்	221
46	பொதுமக்களுக்கு ஒரு வேண்டுகோள் (மொழி பெயர்ப்பு)	302
47.	மதிப்புரைகள் 16, 60, 120, 273, 280, 347, 396, 400, 456,	531
48.	முருகனின் திருவுருவங்கள்	463
49.	முருகன் பெருமை	228
50.	விடை தெரியுமா? 28, 83, 130, 190, 273, 383, 433, 475, 513.	572
51.	விடை விளக்கம் 27, 84, 131, 191, 238, 384, 434, 476, 514	573
52.	விநாயகர் அகவல்	557
53.	விநாயகர் அகவல் (பொழிப்புரை)	559
54.	விநாயகர் மாட்சி	553

(1967 அக்டோபர் முதல் 1968 செப்டம்பர் வரை)

1.	அடியார்க்கு நல்ல பெருமாள்	305
2.	அப்பர் என்னும் சொற்பொருள்	515
3.	ஆளவந்தார்	212
4.	இராமாநுசர்	465
5.	இராமாநுசரின் இனிய அருளுரைகள்	503
6.	உடம்படு மெய்	441
7.	ஒருவர் என்னும் இயற்சொல்	445
8.	கச்சியும் கச்சபேசமும்	405
9.	கந்தர் கலிவெண்பா (பதவுரை)	320
10.	கந்தர்சட்டி விழா	440
11.	கந்த புராண நுட்பம்	89
12.	குடத்தைப் பிடித்தவன் சட்டி	51
13.	கும்பகோணத்திற் கோயில்கள்	236
14.	குரங்கும் குரங்காட்டியும்	337
15.	கொங்குநாட்டுத் தலங்கள்	489, 519, 556
16.	சக்தி வழிபாடு	1
17.	சகல கலா வல்லி மாலே (உரை)	5
18.	சட்டியும் அகப்பையும்	83
19.	சிவஞான சித்தியாரில் ஒரு செய்யுள்	421
20	சிவஞான சுவாமிகளின் சிறந்த உவமைகள்	408
21.	சிவஞான போதச் சிறப்பு (கவிதை)	115
22.	சிவப்பிரகாசர் போற்றிய திருவண்ணமலே	104
23.	சிவராத்திரி விழா.	257
24.	செம்மைத் தமிழின் சிறப்பு (கவிதை)	555
25.	சேக்கிழார் செய்யுளின் தெய்வ நலம்	353
26.	சேக்கிழார் விளக்கும் செம்பொருள்	449
27.	சைவ சமயத் தோத்திர சாத்திர நூல்கள்	155
28	தமிழகத்தின் திருக்கோயில்கள்	145
29.	தமிழின் தனிச் சிறப்புகள் (கவிதை)	581
30.	தமிழும் சைவமும்	545
31.	தலவரலாற்றுக் குறிப்புகள்	227
32.	திருக்குறளும் சைவ சித்தாந்தமும்	19
33.	திருநாவுக்கரசர் மாட்சி	364

எண்	பெயர்	பக்கம்
34.	திருப்பாவைச் செழும்பொருள்	119, 161, 227, 265, 328, 367, 414, 460, 523, 571
35.	திருவண்ணுமலைத் தீபச் சிறப்பு	97
36.	திருவள்ளுவரும் திருமூலரும்	261
37.	திருவாசகத்தேன்	497
38.	திருவாதிரை விழாச் சிறப்பு	190
39.	தீபாவளி விழா	86
40.	தொல்காப்பியச் சிறப்பு (கவிதை)	447
41.	நக்கீரர் கண்ட நற்காட்சி	116
42.	நடராச வடிவ நலம்	14
43.	நம்பியாரூரன் நாம் தொழும் தன்மையான்	453
44.	நயத்திற்குச் சுந்தரனுர்	564
45.	நாத முனிகள்	216
46.	பக்தியுணர்வு	297
47.	மகாமக விழாவின் மாண்பு	209
48.	மணவாள மாமுனிகள்	411
49.	மதிப்புரைகள்	41, 59, 68, 77, 284, 295, 298, 300, 379, 386, 492. 527, 560
50.	மயிலேறும் இராவுத்தன்	572
51.	மனத்தூய்மை	205
52.	வள்ளி கணவன்	55
53.	வள்ளித் திருமண வரலாற்று நுட்பங்கள்.	60
54.	வள்ளியம்மை வரலாற்றுண்மை (கவிதை)	64
55.	விநாயகர் சிறப்பு	561
56.	வியத்தகு வேண்டுகோள்	508
57.	வேதாந்த தேசிகர்	360

(1968 அக்டோபர் முதல் 1969 செப்டம்பர் வரை)

1.	அண்ணுவிற்கு அஞ்சலி (கவிதை)	247
2.	அந்தகக் கவி வீரராகவர்	21
3.	அபிராமி அந்தாதி. (உரை)	11, 73, 114, 161, 225, 270, 327, 465, 516
4.	அப்பரும் காந்தி அடிகளும்	1
5.	இந்தியப் பெருந்தத்துவ ஞானிகள்	16, 79
6.	இராமலிங்கரும் திருக்குறளும்	263
7.	இளங்கோவடிகளும் சேக்கிழாரும்	97
8.	இறைவழிபாடும் திருவள்ளுவரும்	257
9.	உண்மை விளக்கம்	449, 520
10.	எண்குணத்தான்	260
11.	ஒட்டக்கூத்தர்	165
12.	கடவுளுணர்ச்சி	562
13.	கம்பர் கவியுள்ளம்	545
14.	கயிலை மால்வரை (மொழிபெயர்ப்பு)	242
15.	கனகமன்றில் அனகநாடகன்	152
16.	குடம்பையும் புள்ளும்	407
17.	குருஞான சம்பந்தர்	417
18.	சமயமும் விஞ்ஞானமும்	119
19.	சிந்தனையும் தத்துவமும் (மொழிபெயர்ப்பு)	410
20.	சிவராத்திரி விரதச் சிறப்பு	278
21.	சேக்கிழாரும் சைவசித்தாந்தமும்	49
22.	சைவசித்தாந்தத்தில் தனியியல்	479
23.	ஞானமிர்தம்	364

எண்	பெயர்	பக்கம்
24.	தஞ்சைப் பெரிய கோயில்	89
25.	'தணியா அதிமோக தயாபரன்'	505
26.	தருமையாதீனத்திற் பாராட்டு நிகழ்ச்சி	585
27.	திருக்குறட் கருத்து வளம்	323
28.	திருக்குறளும் சிவபிரானும்	214
29.	திருக்குறளும் செந்தமிழ்த் தாயும்	216
30.	திருக்குறளின் சொற் பொருட் சிறப்பு	318
31.	திருக்குறளும் தருக்க நூலும்	222
32.	திருக்குறளும் திருவாசகமும்	218
33.	திருமணியின் கூறும் குருமணி	109
34.	திருமந்திரச் சிறப்பு	305
35.	திருமால்நெறியும் திருக்குறளும்	311
36.	திருமுறைகளின் சிறப்பு (கவிதை)	474
37.	திருவள்ளுவம்	358, 457, 511, 570
38.	திருவள்ளுவர் விளக்கும் தெய்வச் செந்நெறி	353
39.	திருவானைக்கா அகிலாண்டநாயகி மாலை	553
40.	திருவேற்காடு	282
41.	தெய்வப் புலவர் திருவள்ளுவர்	209
42.	தொன்மைக் கோலம்	231
43.	நாதனார் ஆடும் நடம்	145
44.	நெடுநாளைய தேட்டம் (மொழிபெயர்ப்பு)	330
45.	பாண்டிய நாட்டுத் தலங்கள்	25, 61, 234
46.	மதிப்புரைகள்	133, 221, 301, 317, 409
47.	வாழ்வின் பயன் (கவிதை)	237
48.	வேத விழுப்பொருள்	268
49.	வேளூர்க்கலம்பகம்	449

(1969 அக்டோபர் முதல் 1970 செப்டம்பர் வரை)

1.	அத்துவைத தத்துவ ஆசாரியர்கள்	9, 70, 130
2.	அப்பரும் சம்பந்தரும்	378
3.	அபிராமி அந்தாதி (உரைத் தொடர்ச்சி)	62, 289, 478
4.	அம்மை வழிபாடு	49
5.	அயல்நாட்டு அறிஞரின் அன்புக் கடிதம்	359
6.	அறிவியலும் இறையியலும்	236
7.	ஆசாரக்கோவை (கருத்துச் சுருக்கம்)	510
8.	இந்து மதத்தின் சிறப்பு	326
9.	இராசராசன் ஆட்சியும் மாட்சியும்	97
10.	இராமலிங்கரும் சுந்தரரும்.	275
11.	இறையுணர்வு	505
12.	இறைவழிபாடும் கோயில் தூய்மையும்	117
13.	இறைவனின் இன்னருட்டிறன்	407
14.	இனியன் இடைமருதன்	551
15.	உண்மை விளக்கம் (தொடர்ச்சி)	24
16.	'ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு'	241
17.	கடவுளுணர்ச்சி	430
18.	கருவூர்த் தேவர்	353
19.	காஞ்சியில் தெய்விகக் கலைவிழா	122
20.	கோயில்களும் சமுதாய நலமும்	305

எண்	பெயர்	பக்கம்
21.	சங்க நூல்களில் இராமாயணக் குறிப்புகள்	361
22.	சங்கம் தரும் முத்தி	283
23.	சத்தியும் சிவமும்	52
24.	சக்தி பேதங்கள்	54
25.	'சிலந்தியார் வழிபட்ட நலங்கொள் கோயில்'	409
26.	ஞானியார் சுவாமிகளும், மணிவாசகரும்	230
27.	தகவுடையோர் புகழுரை	552
28.	தாயுமான சுவாமிகளின் சமரச ஞானம்	464
29.	திருக்குருகையர்கோன் திருவிருத்தம்	154, 293, 425
30.	திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா	318
31.	திருஞானசம்பந்தர் தேவாரத்தில் குறிஞ்சித் திணைவளம்	397
32.	திருப்பாவைச் சிறப்பு	217
33.	தேர்த்திருவிழா	445
34.	திருவண்ணாமலையில் கார்த்திகைத் தீபம்	81
35.	திருவள்ளுவர் உடன்படாத கொள்கைகள் சில	14
36.	திருவள்ளுவரும் காந்தியடிகளும்	1
37.	திருவருட்பிரகாச வள்ளலாரும், திருஞானசம்பந்தரும்	265
38.	திருவாசகத்தில் ஒரு மணிவாசகம்	418
39.	திருவாசகத்தில் சைவ சித்தாந்தம்	145
40.	திருவானைக்கா அகிலாண்டநாயகி மாலை	414
41.	திருவுத்தர கோசமங்கை	545
42.	'தெய்வம் என்பதோர் சித்தம்'	313
43.	தொன்னெறிமொழிவயின் தொடர்கள்	283
44.	பிரபுலிங்க லீலை	339
45.	பெண்ணின் நல்லாள்	165
46.	பெரிய அன்பின் வரகுண தேவர்	44
47.	நீத்தல் விண்ணப்பம் (பொழிப்புரை)	546, 576
48	மகாலிங்கப் பெருமான்	423
49.	''மதிமயங்கி''	489
50.	மாலை மாற்றுப் பதிகம் (உரை)	515
51.	வழிபாடும் தத்துவங்களும்	457
52.	வித்தகச் சான்றோர் விவேகானந்தர்	571
53.	விநாயகர் பெருமை	32
54	வைஷ்ணவத் திவ்விய தேசங்கள்	495, 580

(1970 அக்டோபர் முதல் 1971 செப்டம்பர் வரை)

1.	அபிராமி அந்தாதி (உரை)	10,472
2.	அன்னைத் தெய்வவழிபாடு	59
3.	அறிவியலும் அருளியலும்	425
4.	ஆடிக் கிருத்திகை	571
5.	ஆடிச் சுவாதி	569
6.	ஆடிப் பூரம்	573
7.	இந்தோனேஷியாவில் இந்துசமயப் பிரசாரம் (மொழிபெயர்ப்பு)	289
8.	இராம காவியம்	383
9.	இராமாயண நுண்பொருள்	392
10.	'இன்னும் பன்னூற்றாண்டிரும்' (கவிதை)	399

திருக்கோயில் ... சென்னை-600 008. 158587

எண்	பெயர்	பக்கம்
11.	இருபா இருபஃது	449
12.	இலட்ச தீபவிழா	477
13.	உலகச் சமயங்கள் மாநாடு (மொழி பெயர்ப்பு)	461
14.	எழுத்தாளரும் கடவுளரும்	333
15.	''ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு''	409
16.	கந்தர் அந்தாதியுரை	
17.	கார்த்திகை விளக்கீடு	106
18.	சமய நினைவுச் சின்னங்களைப் பாதுகாத்தல் (மொழி பெயர்ப்பு)	22
19.	சித்திரை வசந்தவிழா	479
20.	சிவபிரானின் திருவுருவங்கள்	49
21.	சீர்காழியில் சிவஞானப்பால் விழா	401
22.	'செந்தில் அமர்முருகன் அருள் சிறந்து வாழ்க' (கவிதை)	465
23.	'செந்திற் கந்தன் திருவருள்'	5
24.	தவத்திரு குன்றக்குடி அடிகளார் வெளி நாட்டுப் பயணம்	524
25.	திருக்கயிலாய ஞானவுலா (கருத்துச் சுருக்கம்)	209
26.	திருநாவுக்கரசரும் திருவையாறும்	257
27.	திருமாகறல் தேவாரத் திருப்பதிகம் (உரை)	209
28.	திருமுறைகளில் நாடு நகர வருணனைகள்	1
29.	திருமுறை வழிபாடு	540
30.	திருவரங்கம் கோயில் (மொழிபெயர்ப்பு)	36, 97, 145, 273, 371, 485
31.	திருவிசைப்பா சாத்திர நோக்கு	353
32.	தைப்பூசமும் தெய்வத் திருவிழாவும்	299
33.	தொண்டரடிப் பொடியாழ்வார் அருளிய திருமாலை (உரை)	534
34.	தோடுடைய செவியன்	406
35.	''நன்று வெளிநாடுகள் சென்று நலமே வெற்றியுடன் மீள்க (கவிதை)	
36.	பசவேசுவரர்	305
37.	பசவேசுவரரும் திருவள்ளுவரும்	368
38.	பக்தியுணர்வு	33
39.	பங்குனி உத்திரத் திருவிழா	341
40.	பஞ்ச பூதத் தலங்கள், (காஞ்சிபுரம்)	497
41.	மதிப்புரைகள் (கலைஞர் உலா 87, பூஞ்சிட்டு 130)	139, 153, 282, 293, 44, 444, 492
42.	மணவாள மாமுனிகள்	154
43.	மறைமலை அடிகளாரின் விளக்கம்	112
44.	மாகறல் அளித்த மாபெரும் தமிழறிஞர்	243
45.	மாசிக்கடலாட்டு விழா	323
46.	மார்கழித் திருவாதிரை	216
47.	முதலியாண்டான்	58
48.	வள்ளி தெய்வயானை	191
49.	வீர சைவம்	416
50.	வைகாசி விசாக விழா	482
51.	வேற்று நாடுகளில் விநாயகப் பெருமான்	545
52.	வைஷ்ணவத் திவ்விய தேசங்கள்	16, 143, 197

இராமேசுவரம் ,கோயிலுக்குத் தமிழக ஆளுநர் மேதகு திரு. கே. கே. ஷா அவர்கள் வருகை தந்தபோது, வரவேற்றுச் சிறப்பித்த பெருமக்கள்.



சென்னைத் திருமயிலைக் கபாலீசுவரர் கோயிலில் அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் அவர்கள், தமிழ் அருச்சனையைத் தொடங்கி வைத்து, ஆலயப் பிராகாரக் கருங்கல் தளவரிசைத் திருப்பணிக்கு அடிக்கல் நாட்டுதல் (22-8-'71)

Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Admn.) Dept,. Madras-34. Printed at General Printers, 14, Poonamallee High Road, Madras-3. Editor : N. R. Murugavell, M.A., M.O.L.